காஞ்சி

நிறுவனர்
அண்ணாதுரை



விலை
ரூ. 1-50

பொங்கல் மலர்
ஜனவரி - 1968

நமது பாதை, முன்னேற்றப் பாதை

புதிய அரசு ஆட்சிப் பொறுப்பேற்று

செயல்படத் தொடங்கியதும்

★ எங்கும் தமிழ் முழங்கும் எழிலான காட்சி

★ தமிழில் ஆட்சி நடத்துவதில் புதிய வேகம்

★ விலைவாசி உயர்வு என்ற நச்சு வட்டத்தைத் தகர்க்க படி அரிசி அமல்

★ ஒரு போகம் விளைந்த நிலத்தில் இரண்டு போகம்

★ ஊர்ப் பொது வேலைகளை மக்களின் உதவியுடன் முடிக்கும் சீரணி

★ மக்கள், ஊழியர்கள் குறைகளை உடனுக்குடன் விசாரித்து பரிகாரம்

★ தொலைதூர பஸ் வழிகள் அரசுடைமை

மக்களுக்குச் செழுமையான வாழ்வு அளிக்கும் மாபெரும் முயற்சிகளில் உதவுவீர்.

(தமிழகச் செய்தித்துறை வெளியீடு)

வணிகப் பெருமக்களுக்கும் அபிமானிகளுக்கும்
எங்கள் மனங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

முகம்மது
அபூபக்கர் & கம்பெனி

உயர்தரமான கைத்தறி லுங்கிகள், கைக்குட்டைகள்,
புடவைகள் மற்றும் சோளிகள்
தயாரிப்பாளர்கள்

K.E. MD. ABOOBACKER

சங்கு

REGISTERED TRADE MARK

கொ. இ. முகம்மது அபுபக்கர்

சங்கு மார்க்

சதுர வடிவம்-சிகப்பு நிறம்-அதனுள் வெண்சங்கு
'சங்கு' என்ற எழுத்துக்கள் இவைகள்தான்
கைத்தறி லுங்கிகள், கைக்குட்டைகள்,
புடவைகள், சோளிகள் உயர்தரமானவை என்று
உத்திரவாதமளிக்கின்றன

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்

முகம்மது
அபூபக்கர் & கம்பெனி

95, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1

கிளைகள் :

65/11-12,
லோயர் சிட்பூர் ரோடு,
கல்கத்தா-1

186, இப்ராஹிம் ரஹ்மதுல்லா ரோடு,
பெண்டி பஜார், பம்பாய் 3.

340, மெயின் ரோடு,
கொல்லம்-1 கேரளா

84 கீழ வெளி வீதி, மதுரை-1

Criterion- MAB-1150 Ta

பெரும்பயனும் அருமதிப்பும் வாய்ந்த பொருள்கள் கிடைக்கும் இடம்

கதர் கைத்தொழில் அங்காடி

(கதர் கிராமக் கைத்தொழில் ஆயத்தின் ஒரு பிரிவு)

"குறளகம்"

என்னும் அங்காடிக் கட்டடத்தை 14—1—'68 அன்று

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை, எம்.ஏ. அவர்கள்

(தமிழக முதலமைச்சர்) திறந்துவைப்பார்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி அவர்கள்

(உள்ளாட்சித்துறை அமைச்சர்) தலைமைவகிப்பார்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள்

(பொதுப்பணித்துறை அமைச்சர்)

கதர் கைத்தொழில் கண்காட்சியைத் திறந்துவைப்பார்.

கதர் கைத்தொழில் அங்காடி, நகரின் முக்கிய பகுதியில் 25,000 சதுர அடிகளுக்கு மேற்பட்ட பரப்பளவு கொண்டதாக அமைந்துள்ளது. கதர் கைத்தொழில் ஆயத்தின் எல்லாத் தொழிற் பிரிவுகளிலும் தயாரிக்கப்பெற்ற பல்வேறு விதமான பொருள்களை விற்பனை செய்கிறது. தற்போது அங்காடியில் கீழ்க்காணும் பிரிவுகளிலுள்ள பொருள்கள் விற்பனையாகும்.

கதர்: அழகுத் திரைச்சீலைகள், பட்டுத் துணிகள், தைத்த (ரெடிமேட்) உடைகள்.

கிராமக் கைத்தொழில்கள்: தூய்மையான 'அக்மார்க்' நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய், கடலையெண்ணெய், தேன் முதலியன.

மண்பாண்டங்கள்: குளிர்சாதன பாண்டங்கள், ஊறுகாய் ஜாடிகள் முதலியன.

தோல்: காலணிகள், கைப்பெட்டிகள், கைப்பைகள், பணப்பைகள் முதலியன.

கையால் செய்யப்பட்ட காகிதம்: அழைப்பிதழ், வாழ்த்து இதழ், கடிதத் தலைப்பு, முதலியவைகட்கு ஏற்ற காகிதம்,

பனைப்பொருள்கள்: பனை வெல்லம், பனங்கற்கண்டு, இனிப்பு வகைகள், பதநீர், பனை ஓலையினால் செய்யப்பட்ட அழகு பொருள்கள்.

கைவினைப் பொருள்கள்.

கதர் கைத்தொழில் அங்காடி வாரத்தில் ஆறு நாட்கள் காலை 9 மணி முதல் இரவு 8 மணிவரை திறந்திருக்கும். ஞாயிறு விடுமுறை.

சிற்றுண்டி வசதி உண்டு. பதநீர்பானம் தனி இடத்தில் வழங்கப்படுகிறது.

கதர் கைத்தொழில் அங்காடிக்கு வருகைபுரிந்து பெரும்பயனும் அருமதிப்பும் வாய்ந்த பொருள்களை வாங்கிப் பயன் அடையுங்கள்.

எமது மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

அழகுபாதி !!!
ஆடைபாதி !!!

கவர்ச்சியான, தரமுள்ள, மலிவான தூயப் பட்டுப் புடவைகளுக்கும் சொந்த கைத்தறி ஜவுளிகளுக்கும், இதர மில் துணிகளுக்கும் சிறந்த நம்பிக்கையான இடம்

கற்பகம்
& கோ

177. காந்தி ரோடு
காஞ்சிபுரம்

தொலைபேசி : கடை : 259
வீடு : 365

குறிப்பு:— எங்கள் சொந்த தறியில் தயார் செய்த காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் உற்பத்தி விலைக்கே கிடைக்கும்,

மவுண்ட் சாலையில் அமைக்கப்பெற்றுள்ள

அறிஞர் அண்ணா

அவர்களது உருவச்சிலை.

உ-வது உலகத் தமிழ் மாநாட்டு போட்டி

கடற்கரைச் சாலையில் அமைக்கப்பெற்றுள்ள தமிழ்ச் சான்றோர் சிலைகள்.

திருவள்ளுவர்

பாரதியார்

பாரதிதாசனர்

கண்ணகி

ஔவையார்

வ. உ. சிதம்பரனர்

கம்பர்

வீரமாமுனிவர்

ஜி. யு. போப்

ரொபர்ட் கால்டுவெல்



துவக்க விழா மேடையில் அறிஞர் அண்ணாவும் குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேனும் கலந்துரையாடுகிறார்கள்.

மாநாட்டு மேடைக்கு குடியரசுத் தலைவரை அறிஞர் அண்ணா வரவேற்கிறார்கள்.

ஊர்வலமாட்சியில் ஒரு சில காட்சிகள்!



கற்புக்கரசிதான் கண்ணகி என்பதற்கு இந்த அரசவையே சான்றன்றோ!

பார்வையாளர்களைப் பரவசப்படுத்திய நாட்டிய நிகழ்ச்சி!



தமிழன்னையின் ஆசியுடன் புலவோர் தமிழாய்கிருர்கள்!



டலில் கலம் செல்லும் கற்பனையில் வ. உ. சி.

தம்பி

ஏக்கமான தழுதழுப்பு இல்லையே என்கின்றாயா! ஒப்புக்கொள்கிறேன் — ஏக்கம் கலந்திருக்கிறது; வேண்டுமென்று அல்ல — நானாக விரும்பி இழைத்ததும் அல்ல நிலைமை அவ்விதம் — அந்த நிலைமைக்கும் பொறுப்பு நானல்ல — உன்னால் உருவாக்கப்பட்ட நிலை; உணரும் அக்கறை பெற்றவனாயிற்றே, மேலும் விளக்கம் அளிக்கவேண்டுமா!

சென்ற ஆண்டு பொங்கற் புதுநாளன்று உன் பக்கம் நின்றிடவும், பரிவினைப்பெற்று மகிழ்ந்திடவும், இல்லந்தனிலே,

புனலிடை மூழ்கிப்
பொழிலிடை உலவி
பொனனார் இழையும்
துகிலும் பூண்டு
கனி மொழி பேசி

D.V. ... A. ... 16.1.68.

நீ களித்திருக்கும் காட்சியினைக் கண்டு கண்டு மகிழ்வு பெறும் நிலையிலே இருந்தேன். அங்கனம் இருந்து வந்த என்னை, அதிலே பெறும் இன்பம் வேறு எதிலும் இல்லை என்ற எண்ணம் கொண்ட என்னைப் பிடித்திழுத்துக்கொண்டு போய் ஓர் பீடத்தில் அமர்த்திவிட்டாய். பெரு வெற்றி அல்லவோ அண்ணா! என முழக்கமிட்டாய், நற்காலம், பொற்காலம் என்றெல்லாம் மகிழ்கின்றாய். நானும் என்னாலான அளவுக்கு உன் நம்பிக்கைக்கு ஏற்றவனாக நடந்துகொள்வதில் முற்பட்டிருக்கிறேன் எனினும், ஒவ்வோர் ஆண்டும் இந்த பொங்கற் புதுநாளன்று உன் புன்னகை தவழ்ந்திடும் முகத்தினைக் கண்டு அந்தப் பொலிவினைப் பாராட்ட, தங்குதடையற்ற நிலையில் இருந்து வந்த நான், 'கட்டுண்டு' கிடக்கின்றேன் என்பதனை எண்ணும்போது ஓரளவு வருத்தமாகவே இருக்கிறது.

இந்நாளினையே நாம் நமது திருநாளாகக் கருதிவந்திருக்கிறோம்.

இந்நாள் நமக்குத் தேவையான ஏற்புடைய கருத்தளிக்கும் பொன்னாள் — ஐயமில்லை.

முன்னாள் தீவினையைப் போக்கிக்கொள்வதற்கு என்று அறிவிக்கப்பட்டுள்ள 'திருநாள்' தமிழகத்தில் பல உண்டு.

தமிழகத்தில் பல உண்டு என்றுதான் கூறினேன், தமிழருக்கு என்று கூறவில்லை! கவனித்தாயா!! பொருள் புரிந்திருக்கும். உனக்கா விளக்கமளித்துப் புரியச் செய்திட வேண்டும்! மணம் கண்டே முல்லையா, மல்லியா மனோரஞ்சிதமா, மகிழம் பூவா என்று கண்டுப்பவனல்லவா! ஓ! ஓ! ஒன்று மறந்துவிட்டேனே; இவை அவ்வளவும் ஒருங்கே கலந்த மணமும் ஒன்று உண்டு, என்கின்றாய், தெரிகிறது, தம்பி! நன்றாகத் தெரிகிறது, உன் மனையிலுள்ள மணமலரைக் குறிப்பிடுகிறாய். வாழ்க உன் மனையுளாரும் நீயும்! கமழுக நறுமணம்! பொங்குக இன்பம்!

புதுமை இன்பம்!

சென்ற ஆண்டு பொங்கற் புதுநாளில் நீ கொண்டிருந்த எண்ணத்தை நானறியச் செய்தாய் — நாடறியச் செய்தாய். இந்நாளில் 'நமது அரசு' நடந்திடுகிறது என்ற சுவைமிக்க எண்ணத்தை அணைத்தபடி இருக்கின்றாய்.



இந்த ஆண்டு பொங்கற் புதுநாள், புத்தரசி மட்டுமல்ல புத்தாட்சி நடைபெறுகின்றது என்று பூரிப்புடன் இருக்கின்றாய். உணவு நெருக்கடி மிகுந்திருந்தது சென்ற ஆண்டு; இவ்வாண்டு போதுமான அளவு உணவுப்பொருள் கிடைத்திருக்கின்றது; அதிலும் தமிழகத்தில் சில இடங்களிலேனும் 'மலிவு' விலையில் என்பது, உண்மையிலே நமக்கு மகிழ்ச்சி தரத்தக்கதுதான், ஐயமில்லை. ஆனால்......!

தேவைப்படும் அளவுக்கு என்றால் மக்களுக்கு ஆற்றிட வேண்டிய தொண்டினைச் செய்திட இயலவில்லை. கிடைத்துள்ள வாய்ப்பும் வசதியும் குறை மிகுதியும் கொண்டதாக அமைந்துளது. திருத்த, புதுபிக்க முயற்சித்தபடி இருக்கிறேன்; முயற்சி திருவினை ஆக்கும் என்ற முதுமொழியில் நம்பிக்கையுடன். காலம் கனியவில்லை. என்ற நம்பிக்கை இல்லாமலுமில்லை.

பொங்கற் புதுநாள் இன்று; பாலில் அரிசியிட்டு கொதிக்கச் செய்திட உன் பாவை ஈடுபடும்போது, இன்னமும் பொங்கவில்லையா என்று விழியால் பல முறையும் சொல்லால் சில முறையும் கேட்கின்றாய். இதற்குள்ளாகவா — என்ற பதிலை பாவை அளித்திடக் கேட்கின்றாய்; பார்வையோ, இத்தனை அவசரமா? என்று கேட்கிறது.

அம்முறையில் பதிலளிக்க மாதரசி உரிமை கொண்டுளது இயற்கை என்பதிலும் அம்முறையில் அமைந்திடுதல் பொருந்தாதன்றோ. இனியும் நான் செய்திட வேண்டியவைகளைச் செய்து முடித்திட, ஆர்வமும் ஆற்றலும் எனக்குக் கிடைத்திட, உன் துணையும் தோழமையும் பெருமளவு தேவை, தந்திடத் தயக்கம் காட்டமட்டாய்! தந்தபடி உள்ளாய்; அறிந்துமிருக்கின்றேன்; நன்றிகூறி மகிழ்கின்றேன்.

நமதாட்சி அமைந்தது, நாட்டுக்கே ஒரு புதிய பொலிவு கிடைத்திடும் வாய்ப்பாகும் என்று கூறிடுவார் பலர் உளர். அவர் தம் நட்புறவு, அரசுக்கு அரணாக அமைவதுடன், செயலார்வம் நான் பெற்றிட வழி தருகிறது. அவர்கட்கெல்லாம் என் வணக்கம்.

பாலோ, தெளிதேனோ, பாகோ பருப்போ பாற் பொங்கலோ, ஏதோ உன் இல்லத்தரசி தந்திடும்போது சுவைத்து உட்கொள்கின்றாயா, மகிழ்ச்சி தெரிவிக்கின்றாயா என்று பரிவு நிறை பார்வையாலே கேட்கின்றாளே கவனித்தனையா. ஒரு சொல், 'மிகநன்றாக இருந்தது' என்று நீ கூறிடின், கன்னலின் சுவையிலும் அஃது மிஞ்சுவதாக ஆகிடும். கொஞ்சுகின்றாள் பார் குழந்தையுடன்! எதற்கு!! உனக்குத்தான் தம்பி! நன்றி கூறுகின்றாள்!!

உனக்குத் தேனும் பலாச் சுளையும் தந்து இனிக்கிறதா என்று கேட்டிடும் என் அரசிதானே தன் குழந்தையின் குதலை கேட்டு, அதிலேயே தேனும் பாலும் பிறவும் உளது என்கின்றாளே என்னே விந்தை! என்று எண்ணுகின்றாய்.

குழந்தை குதலை
மொழியமிழ்து
குன்றாப் பழந்தமிழும்
பாட்டும் அமிழ்து
தமிழ்ப்பண் அமிழ்து
திங்கள் அமிழ்து
திகழ் ஆவின் பாலமிழ்தே

என்றாரே பாவேந்தர் அறியாயா!

ஒன்று நாம் உணருகின்றோம், தம்பி! எத்தனை இன்னலுக் கிடையிலே தள்ளப்பட்டிருப்பினும், இந்த பொங்கற் புது நாளில் மட்டும் நமக்கு ஒரு மகிழ்வு, நாட்டுக்கு ஒருபொலிவு வந்து சேர்ந்துவிடத்தான் செய்கிறது. நலிந்தோரும் கூட இந்நாளில் புதுத் தெம்பு வரக் காண்கின்றனர். இந்நாளில் மட்டுமே; உழைப்பின் பெருமையை உணர்ந்து உரையாடி மகிழ்ந்திட வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்நாளே அந்நாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்தி பற்றிய நினைவு எழுகிறது. நமக்கெல்லாம் எழுச்சி தரத் தக்க முறையிலும் அளவிலும். நம்மைச் சுற்றிக் காணும் பொருள் யாவும், நிலமடந்தை தந்தனள்—பரிவுடன். ஆயின், பாலூட்டும் தாயும், சேயுடன் விளையாட்டுக் காட்டி, "முடியாது—பிறகு—விடு—அடிப்பேன்—" என்று கொஞ்சுவதில்லையா அதுபோல நில மடந்தையும் தன் மக்களுக்கு வளம் அளிக்கு முன்பு, விளையாட்டுக் காட்டுவான் வேண்டி, உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு" என்று அன்பு ஆணையிடுகின்றாள்.

நம் காலத்து நற்புலவர்கள், இந்தப் பொங்கற் புது நாளின் மாண்பினை நலம் உணர்ந்து உவகை கொண்டிடச் செய்துள்ளனர்.

தமிழர் திருநாள். தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெரு
நாள். சளைப்பில்லா முயற்சி தரு பயன்
பெற்று புதுமை இன்பம் பூணும் நன்னாள்

என புடியரசன் முழங்குகிறார்; நாடு ஆம்! ஆம்! என்கிறது.

இத்தகு திருநாளன்று என்னால் இயன்ற அளவு 'கருத்து விருந்து' அளித்துள்ளேன், 'காஞ்சி' இதழ் மூலம். மற்றவற்றுடன் இதனையும் பெற்று மகிழ்ந்திருப்பாய் என்று,

பொங்குக இன்பம்! பொங்குக புதுமை! பொங்குக பொலிவு! வளம் பெருகிடுக! வாழ்வு சிறந்திடுக! வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!

அண்ணன்,



நான் கண்ட உலகு

சட்டப்பேரவைத் தலைவர்:
சி. பா. ஆதித்தனார்

கடந்த 5 வருடங்களில் நீங்கள் பார்த்த சினிமா படங்களில் எத்தனைப் படங்கள் இன்று உங்கள் நினைவில் இருக்கின்றன?

நினைவில் இருக்கிற படங்களில் நீங்கள் பார்த்த பலநூறு காட்சிகளில் எத்தனைக் காட்சிகள் இப்போது உங்கள் ஞாபகத்தில் உள்ளன?

ஒன்று அல்லது இரண்டு காட்சிகள் மட்டுமே உங்கள் மனக் கண்ணில் நிலையாக, மறக்க முடியாத இடத்தைப் பெற்றிருக்கும்.

அதுபோல்தான் வெளி நாடுகளில் நாம் சுற்றி வரும்போது, நம்முன்னால் தோன்றி மறைகின்ற காட்சிகளில் ஒரு சில மட்டுமே உள்ளத்தில் இடம் பெற்று நிலைத்து, நம்மையும் அறியாமல் இடையிடையே நம் நினைவில் வருகின்றன.

வேறு சில காட்சிகள் நம் நினைவிலிருந்து நழுவி விடுகின்றன. நெற்றியைச் சுழித்துக் கையால் தடவி ஞாபகத்துக்குக் கொண்டு வரவேண்டியவைகளாக இருக்கின்றன.

அதிசயங்கள்

நான் பார்த்த "உலக அதிசயங்கள்" பெரும்பாலும் மேற்சொன்ன இரண்டாவது வகையைச் சேர்ந்தவைகள்.

எகிப்து நாட்டிலுள்ள 'ஏழு உலக அற்புதங்களில் ஒன்று' என்று கூறப்படுகிற முக்கோணமலைக் கோபுரத்தைப் பார்க்க ஒட்டகத்தின் மீது ஏறிக்கொண்டு முக மூடி அணிந்த பெண்கள் நிறைந்த ஊர்களின் வழியாகச் சென்றேன்.



முக்கோண மலைக் கோபுரத்தின் உள்ளே நுழைந்து உட்புறத்திலுள்ள படிகட்டுகளில் ஏறி, உச்சிவரை போய் பார்த்துவிட்டு இறங்கனேன். அதையெல்லாம் இப்போது எண்ணிப் பார்க்கும்போது, அந் நிகழ்ச்சியில் செலவிட்ட நேரம், வீண் காலப்போக்கு என்று தோன்றுகிறது. அதிசயக் கோபுரத்தைப் பார்த்ததால் ஆன பலன் என்ன? நம்நாட்டில் ஒரு மலை கோபுரமா கட்டப்போகிறோம்?

அதைப்போலவே, பிரான்ஸ் நாட்டிலுள்ள 1000-அடி உயரமுள்ள இரும்புக் கோபுரத்தில் ஏறும்போதும், லண்டன்மாநகரத்தின் கீழ் ஓடுகிற பாதாள இரயில் பிரயாணம் செய்யும்போதும், விந்தைமிக்க சாதனைகளை நேரில் பார்க்கின்ற உணர்ச்சியால் பூரிப்பு அடைந்தேன்.

ரஷ்ய நாட்டில் ஸ்டாலின் கிராடு என்ற நகரத்தை ஒருநாள் முழுவதும் சுற்றிப்பார்த்தேன். உலகப் போரில் தரைமட்டமாக்கப்பட்ட நகரம், மீண்டும் பொலிவோடும்; உயிர்த்துடிப்போடும் காட்சியளித்தது.

அமெரிக்காவில் ஒரு அச்சகத் தொழிலாளி வீட்டில் தங்கி இருந்தேன். படக்காட்சிப் பெட்டியில் (டெலிவிஷன்) கலர் சினிமா படங்களை வீட்டிலேயே பார்த்துக்கொள்ள முடிந்தது.

நியூயார்க் நகரத்தில் வடகோடியிலிருந்து. தென் கோடி வரை நான் நடந்துபோனதுண்டு; செலவில்லாமல் திருவிழா பார்ப்பதுபோல இருந்தது.

இரண்டு மாதங்கள். அமெரிக்க நகரங்களில் பொழுது போக்கிய பின், தமிழ் நாட்டுக்குத் திரும்ப வேண்டிய நாள், நெருங்கியபோது, எனக்கு சலிப்புத் தட்டியது; வாழ்நாளை வீணாகக் கழித்த வருத்தம் மேலிட்டது. தாயகம் வந்து சேர்ந்தவுடன் "பயனுள்ளதாக எதைப் பார்த்தாய்?" என்று யாராவது கேட்டால் என்ன விடை கூறுவது? என்ற கவலை தோன்றியது.

என் உள்ளத்திலிருந்த கருத்தை அமெரிக்க அதிகாரியிடம் (எனக்கு உதவியாக இருந்தவரிடம்) கூறினேன். அவர், "உங்கள் நாட்டுக்குப் பயன் உள்ளதாக ஏதாவது



தமிழ் நாட்டிலுள்ள ஊர்களைப்போலவே இருந்தன.

காலில் செருப்பு இல்லாமல் கிழிந்த துணியை அணிந்து கொண்டிருந்த பெண்கள் தலையில் தண்ணீர்க் குடத்துடன் நடந்து போனார்கள். தலையில் சுமை தூக்கும் வழக்கம் வறுமை மிகுந்த நாடுகளில் தான் உண்டு

பார்க்க விரும்பினால் "போர்ட்டோ ரிக்கோ"வுக்குப் போங்கள். அது 1600 மைலுக்குத் தெற்கே இருக்கிறது." என்றார்.

"1600 மைலா! அப்பாடா!" என்றேன். அதற்கு அவர், 'பயப்பட வேண்டாம்; இன்று இரவு விமானத்தில் புறப்பட்டால், நாளை காலை போய்ச் சேர்ந்துவிடலாம்" என்றார். அதன்படியே போர்ட்டோ ரிக்கோ' போய்ச் சேர்ந்தேன்.

சின்னஞ் சிறிய நாடு அது; 22 லட்சம் மக்களைக் கொண்டது. 3000 சதுர மைல் உள்ள தீவு. பல நூற்றாண்டுகளுக்கு முன் ஸ்பெயின் நாட்டிலிருந்து குடியேறியவர்களும், சில நீக்ரோக்களும் வாழ்ந்து வந்தார்கள்.

எல்லோரும் ஏழைகள்; வறுமை குடிகொண்டிருந்தது!

ஆனால் அங்கே மிக மிகமுக்கியமான பரிசோதனை ஒன்று நடந்துகொண்டிருந்தது. வறுமை மிகுந்த பின் தங்கிய மக்கள் நிறைந்த நாட்டை, வளமான நாடாக ஆக்குவதற்கு நடவடிக்கைகள் நடந்துகொண்டிருந்தன.

தமிழ் நாட்டைப்போல்!

அந்த நாட்டிலுள்ள சிற்றூர்களையும், பேரூர்களையும் நான் போய்ப் பார்வையிட்டேன். சிற்றூர்கள்



வேலை இல்லாமல், பல நூற்றுக்கணக்கான பேர்கள் வேலைதேடி, நாள்தோறும் வெளிநாடுகளுக்கு (குறிப்பாக அமெரிக்காவுக்கு)க் குடி போய்க்கொண்டிருந்தார்கள்,

முதல் தோற்றமும், கூர்ந்து கவனித்த பின்பும் முற்றிலும் தமிழ்நாடுபோலவே காட்சி அளித்தது.

பரீட்சை

அந்த நாட்டை வளமாக்குவது எப்படி? அந்நாட்டு மக்களுக்குச் சராசரி வருமானம்மாதம் ரூ. 100 கிடைத்தது. அந்த ஊதியத்தில் கூட வேலை கிடைக்காமல் திண்டாடிய மக்களுக்கு வேலை வாய்ப்புக்கிடைக்கச் செய்வது எப்படி? வருமானத்தைப் பெருக்குவது எப்படி?

சுருங்கச் சொன்னால்வறுமைநோய்க்கு மருந்து என்ன? இது தான் அங்கே நடந்து கொண்டிருந்த ஆராய்ச்சி.

மருந்து இன்னதென்றுகண்டுபிடித்து (அமெரிக்கர்களின் தலைமையில்) சிகிச்சை நடந்தது. வெற்றி பெற்றால் இதே மருந்தைக் கொண்டு உலகெங்குமுள்ள 250 கோடி ஏழை மக்களையும் வாழவைக்கலாம்.

மருந்து?

அந்த நாட்டுக்கு ஊட்டப்பட்ட மருந்து தொழில்! தொழில்!! தொழில்!!!

கட்டப்பட்டுக் கொண்டிருந்த தொழிற்சாலைகளைப் போய்ப் பார்த்தேன். அந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்த 'மேரின்' என்பவரின் ஆட்சியில் பணியாற்றிய அதிகாரி ஒருவர் என்னை அழைத்துச் சென்ருர்.

மாம்பழத்தைப் பதம் செய்யும் ஆலை; பாலிலிருந்து பாலேடு செய்யும் ஆலை; சர்க்கரை ஆலை பிளாஸ்டிக் பொருட்கள் ஆலை இப்படிப்பட்ட ஆலைகளையும், ஆலைத் தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள [illegible] ங்களின் வாழ்க்கை வசதிகளையும் கண்டறிந்தேன்.



தமிழைப் படித்தேன் தமிழை அறிந்தேன்!

"தமிழர்களைப் போல வேறெந்தச் சமூகத்தினரும் இப்போராட்டத்தில் ஈடுபடவில்லை. எனவே, வேறெக்காரணத் திற்காக இல்லாவிடினும் இதற்காகவே நான் அவர்களுடைய தமிழ் நூல்களை முனைந்து படிக்க வேண்டுமெனக் கருதினேன். என் நன்றியுணர்வைக் காட்ட இது ஒரு வழியென உணர்ந்தேன், ஆதலால் நான் அங்கிருந்த கடைசி மாதத்தில் அவர்களுடைய மொழியைக் கவனத்துடன் படிக்கத் தொடங்கினேன். படிக்கப் படிக்க அம்மொழியின் சிறப்புகளை நான் உணரலானேன் அஃதொரு சுவைமிக்க; இனிமையான மொழி. தமிழ் மக்களிடையே பண்டைக் காலத்திலேயே நுண்ணறிவும் ஆற்றலும் மிக்க அறிஞர் பலர் இருந்தனரென்றும், இன்றும் உள்ளனரென்றும் நான் படித்தவற்றிலிருந்து அறிந்தேன். மேலும், இந்தியா ஒரே நாடாகத் திகழ வேண்டுமாயின் சென்னை மாநிலத்துக்கு வெளியே வாழ்கின்ற இந்தியர்களும் தமிழ் மொழி பயிலுதல் இன்றியமையாதது என்பது என் கருத்து."

மகாத்மா காந்தி

—தென் ஆப்பிரிக்கப் போராட்டத்தின்பின் எழுதிய ஒரு நூலிலிருந்து.

காஞ்சி

மலர்: 4] [இதழ்: 24, 25, 26,

பொங்கல் மலர் அலுவல்களை முன்னிட்டு கடந்த 7-1-68 ம் நாளைய இதழ் வெளி வரவில்லை. அடுத்து பொங்கல் விழாவை முன்னிட்டு அலுவலகத்துக்கு விடுமுறையாதலால் அடுத்த இதழ் 28-1-68 ம் நாள் வெளிவரும் என்பதை எல்லா விற்பனையாளர்களுக்கும், நூலகங்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிருேம்.

உரிமையாளர்.

முகப்பு:

இந்த மலரில் வெளியாகி இருக்கும் அறிஞர் அண்ணா அவர்களது இன்ப ஒளி. தொடர் கதையில் வரும் ஒரு நிகழ்ச்சியைச் சித்தரிக்கிறது.

அந்த நாடு முழுவதையும் ஒரு வாரம் சுற்றிப் பார்த்த பின் 1600 மைல் வடக்கே, நியூயார்க் நகரம் சென்று, ஜப்பான், ஆங்காங், சிங்கப்பூர் வழியாக சென்னை வந்து சேர்ந்த பின்பும் 'போர்ட்டோ ரிக்கோ' என்ற பெயர் என காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

சோதனை வெற்றி!

தமிழ் நாட்டுக்கு நான் திரும்பிய பின்னர் 3 மாதங்களுக்கு ஒரு முறை அந்நாட்டு அரசு, மக்களின் முன்னேற்றம் குறித்த அறிக்கைகளை எனக்கு அனுப்பி வருகிறது. அவற்றின்படி 1—11—67 வரை,

10 ஆண்டுகளில் சிறியதும் பெரியதுமான 1300 தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன;

மக்களின் மாதவருமானம் சராசரி 100-ரூபாயாக இருந்தது 900 ரூபாயாக உயர்ந்தது;

விலைவாசி உயர்வைக் கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகும் வருமானம் 8 மடங்கு பெருகியுள்ளது.

வேலை தேடி வெளிநாடு செல்வது முற்றிலும் நின்று போய்விட்டது.

எனவே உலகில் நான் கண்ட அதிசயங்களில் மிக முக்கியமானதென்று நான் கருதுவது இதுதான்!

வறுமையில் வாடித் துவண்ட மனிதன் வளத்தில் வாழ்ந்து மகிழ வழி கண்டுபிடித்ததுதான் வறுமை நோய்க்கு மருந்து! "போர்ட்டோ ரிக்கோ" கண்ட மருந்து!

★

FOR UP-TO-DATE AND MOST HIGH CLASS

PHONE NO. 387

FASHIONABLE SILK SAREES

VISIT:

VARADARAM & CO.,

SILK CLOTH MERCHANT

134, Tirukatchinambi Street, Kancheepuram-3

படித்துவிட்டீர்களா? **HOME RULE** தி. மு. க. ஆங்கில வார இதழ்

விவரங்களுக்கு: "ஹோம் ரூல்" 9, அவின்யு ரோடு, சென்னை-34. விலை 20 காசு

சீரணி

பேராசிரியர் · நா. பாண்டுரங்கன் எம்.ஏ.

அலர்கின்ற அல்லிக்குத் தண்டுக்கால் உண்டன்றோ
அருஞ்செயலாம் அல்லிக்கும் தண்டுக்கால் நம்பிக்கை!
மலர்கின்ற அருஞ்செயல்கள் மண்ணெங்கும் நடனமிட
மதிக்கால்கள் நிலைநாட்டும் மயிலணியே சீரணியாம்!

நீரோடை மையெடுத்தே நிலஏட்டில் ஏரெழுத
நிறைகின்ற பயிர்ப்பாட்டே நல்லுயிரின் நெடும்பாட்டாம்!
பாரெல்லாம் உயிர்க்குயில்கள் பகலெல்லாம் குறள்பாடப்
பண்பாடும் இசையணியே பண்பாட்டுச் சீரணியாம்!
காரோட நெடுங்கடலில் கப்பல்கள் நிறைந்தோட
கலகலென நாணயங்கள் தெருவெல்லாம் நகையாட
ஊரெல்லாம் தொழில்பாட உறுவினையாம் பசுக்கூட்டம்
ஓட்டிவந்து பால்கறக்கும் ஒளியணியே சீரணியாம்!

கல்வியினால் உணவுண்டாம் உடையுண்டாம்
உறையுளுண்டாம்
கல்வியினால் பொருளுண்டாம் புகழுண்டாம்
பணியுமுண்டாம்!
கல்வியென்றால் கதிரவனும் காலைக்குத் தந்தையாவான்!
கல்வியில்லான் களர்நிலமாம் கல்வியுளான் விளைநிலமாம்
கல்வியுடன் பொதுஅறிவும் கலந்திடுதல் பசுப்பாலில்
கரும்பளிக்கும் சர்க்கரையைக் கலப்பதுவாம் ஆதலினால்
கல்விநலம் பொதுஅறிவில் கலந்தநலம் இவைமணக்கக்
கலைமணக்கப் பணிபுரியும் களிப்பணியே சீரணியாம்!

தூய்மையினைச் செய்வதுவே துப்புரவுப் பணியாகும்
துப்புரவால் தொடர்அழகாம் தொகைநலமாம்
புதுமையுமாம்!
தாய்ப்பணியாம் துப்புரவு! தன்குழந்தைக் கழிவுகளைத்
தாய்தானே தன்கரத்தால் துடைக்கின்றாள்? தன் வீட்டில்
தோய்கின்ற குப்பைகளைத் தாய்தானே கூட்டுகின்றாள்?
தாய்ப்பணியாம் துப்புரவைத் தந்தைமாரும் பிள்ளைமாரும்
தாய்நாட்டில் தெருத்தோறும் செயவேண்டும்! செய்வதற்குத்
திரள்கின்ற திருவணியே திருக்கூட்டும் சீரணியாம்!

மழைத்துளியை மாலையாக்கி மண்மங்கை அணிகின்றாள்
மழையணியே அழகும்! மயிலழகன் விசிறிபோடத்
தழைக்கின்ற நிலமங்கை நெல்லெடுத்தே அணிகின்றாள்
தலையினிலே பொன்சிரிக்கத் தலைவணங்கும் பயிரணியே
அழைக்கின்ற குயில்வாயில் தமிழ்வழியும் திருநாட்டில்
அறக்கரும்பைச் செயல்வயலில் அணிகின்றார் அறிவரசர்
கழையணியாய்ச் செங்கரும்பைக் கழனிமகள் அணிகின்றாள்
கலையணியாம் சீரணியைக் கடமைகள் அணிகின்றாள்.

கதிரவனும் ஓய்வெடுப்பான் ஓய்வினிலும் ஒளிகொடுப்பான்
கட்டிவெண்ணெய் வட்டநிலா கதிரவனின் பணிதானே!
புதுப்புனலும் வற்றியபின் பொன்னித்தாய் ஓய்வெடுப்பாள்
பொன்னித்தாய் ஓய்வினிலும் புனல்கொடுப்பாள்
ஊற்றணியால்
புதுநிலவின் ஒளிபோலும் பொன்னிமணல் புனல்போலும்
பொதுமக்கள் ஓய்வினிலே பலன்கருதாப் பணிபுரிய
மதுமலரைச் சுற்றுகின்ற மணிவண்டாய் அணிகண்டார்
மதியணியே சீரணியாம் மதுவொழுகும் மலரணியாம்!

ஒருநெல்லால் ஒருகலநெல் அறுவடையும் ஆகுமன்றோ?
ஒருதேங்காய் உயர்தென்னந் தோப்புக்குத் தாயன்றோ?
ஒருதந்தைப் பணியாலே உலகமெல்லாம் மக்களன்றோ?
ஒருநன்மை விதைவிதைத்தால் ஒருகாடே விளையுமன்றோ?
ஒருவிதையே பொதுப்பணியாம் ஒருவிதையைப் புசிப்பதுவே
ஒருமனிதன் தன்னலமாம் தன்னலத்தான் சிறுமனிதன்!
பெருமனிதன் விதைபோன்றான் பொதுப்பணியாம் விதை
விதைப்பான்
பெருமனிதன் பேரணியே புகழணியும் சீரணியாம்!

மலராக்கும் இதழ்போல மானத்தை உடையாக்கும்
மனத்துக்கும் உடைவேண்டும் தன்மதிப்பே
மனஉடையாம்!
பலருக்கும் மனஉடைகள் பலஉடைகள் பட்டுடைகள்
பரிசளிக்கும் படிப்பணியே பரிவளிக்கும் சீரணியாம்!

தீண்டுவது காதலிலே தேனூற்றைத் தோண்டுவதாம்
  தீண்டுவது வீரத்தில் புறப்பாட்டைத் தீட்டுவதாம்
தீண்டுவதால் தம்மக்கள் மெய்யெல்லாம் கற்கண்டாம்
  தீண்டுவதால் கலைவீணை தமிழிசையைப் பெய்யுமன்றோ?
தீண்டியதால் கொடிமுல்லை பொற்றேரைப் பெற்றதன்றோ
  தீண்டாமை வேண்டாமை தீநாக்கின் அறியாமை!
தீண்டாமை பாம்பாகும் படமெடுத்தால் தாக்கவேண்டும்!
  தீண்டாமை எரிப்பதற்கு திரண்டதுவே சீரணியாம்!

அன்னையென்பாள் அடம்செய்யும் குழந்தைகளை
அடிக்கின்றாள்
  அன்புமகன் பிழைசெய்தால் தண்டிப்பான் நல்லதந்தை!
சின்னமனம் நன்மையினை அறியாத சிற்றறிவு
  செய்கின்ற சமுதாயக் கொடுமைகளைச் சாடவேண்டும்!
அன்னையைப்போல் தந்தையைப்போல் நடவடிக்கை
எடுக்கவேண்டும்!
  அன்னைவழி அன்புவழி அறிவுவழி தந்தைவழி
மின்னலெனும் ஒளிக்கோட்டால் இருளோட்டும்
மேன்மை வழி!
மின்னல்வழி இருளோட்ட மலர்ந்ததுவே சீரணியாம்!

திக்கற்றோர்க்குத்தெய்வமே துணையென்பான் மனிதனுகான்
  திக்கற்றோர்க்கு நானேதான் துணையென்பான்
தெய்வமாவான்
திக்கில்லா வானத்தில் உலகந்தான் திக்காக்கும்
  திக்கற்றோர் வாழ்க்கையிலே உள்ளந்தான் திக்காக்கும்
திக்கற்றோர் திக்கறியத் திருப்பணிகள் செய்யவேண்டும்!
  திடமனமும் தெளிவறிவும் தேன்போன்ற நல்லன்பும்
மிக்கிருக்க நெக்குருகும் அருட்பணிகள் நிகழ்த்தவேண்டி
  மலர்க்கூட்டம் சிரிப்பதுபோல் சேர்ந்ததுவே சீரணியாம்!

கங்கையின்நீர் காவிரிநீர் எல்லாமும் கடல்நீரே!
  கண்டங்கள் எல்லாமும் இடத்தாலே ஒருநிலமே!
பொங்குகின்ற உணர்வாலே மாந்தரெல்லாம் ஓரினமே!
  புதுமலர்கள் பலவெனினும் புத்தழகு ஒன்றுதானே?
எங்கெங்கும் என்னுடே எல்லோர்க்கும் ஒருவீடே!
  எப்போதோ தமிழ்க்கணியன் பாடிவிட்டான் தோழர்களே
எங்கெங்கும் எல்லோர்க்கும் எப்போதும் அறம்செய்வோம்
  என்றெழுந்த தமிழணியை அறம்வழியும் சீரணியாம்.

"Wishing you a prosperous Pongal and assuring our Best services"

The Sudar Match Workers' Co-operative Society Ltd.,
No. Ind. 578
Kancheepuram.

★

PRODUCING
GOOD
QUALITY
SAFETY
MATCHES.

★

Running Rate Contractors Under
Director General of
Supplies & Disposals. Delhi.

★

"An Industrial Co-operative Society Under the Contral of the Directorate of Industries and Commerce, Government of Tamilnadu"

"PLEASE ORDER YOUR REQUIREMENTS"

இழக்கமாட்டோம் எமக்குரியதை!

15.1.1968

முதலமைச்சர் அறிஞர் அண்ணா

மிகுந்த பண்பாளரும் சமநிலை நோக்குள்ளவரும் வித்தகரும் கல்வித் துறையில் புதுமை கண்டவருமான குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் அவர்கள் இந்த மாநாட்டைத் துவக்கிவைக்க வந்துள்ளார்கள்.

நல்லவேளையாக நமது குடியரசுத் தலைவர்களாக தொடர்ந்து கற்றறிவாளர்கள் - கலாச்சாரத் துறையில் தொடர்பு கொண்டவர்கள் இருக்கிறார்கள்.

கற்றறிந்த மேதையான டாக்டர் ராதாகிருஷ்ணன் முதலில் குடியரசுத் தலைவராய் இருந்தார். அவரைப் போன்ற கல்விமானான ஜாகீர்உசேன் இப்போது குடியரசுத் தலைவராகியிருக்கிறார், அத்தகையவர் உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்குவது நமக்குப் பெருமை தரத்தக்கது.

இந்த உலகத் தமிழ் மாநாடு முதலில் மலேசிய நாட்டில் நடைபெற்றது; இப்போது சென்னைத் திருநகரில் நடைபெறுகிறது.

இங்கு பேசிய காமராசர் முதல் மாநாட்டையே நாம் நடத்தியிருக்க வேண்டும்; ஆனால் என்ன காரணத்தாலேயோ அவர்கள் முந்திக்கொண்டார்கள் — என்றார்.

எப்போதுமே அண்ணன் கொஞ்சம் சோர்ந்திருந்தாலும், தம்பி மிக அக்கறையாயிருந்து காரியமாற்றுவான். அதுபோல முதல் மாநாட்டை, அவர்கள் நடத்தியிருக்கிறார்கள்.

ஆனால், இந்த மாநாடு அதன் தொடர்ச்சியே தவிர புதிது அல்ல;

அந்த மாநாட்டிற்கு 20 நாட்டுப் பிரதிநிதிகள் வந்திருந்தனர். இப்போது நடக்கும் மாநாட்டிற்கு ரஷ்யா போன்ற 30 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருக்கின்றனர். இந்த நாடுகளுக்கெல்லாம் தமிழ்மொழி அறிமுகமாகியிருக்கிறது. ஆனால் இந்தியாவுக்குள் அது சரிவர அறிமுகமாகவில்லை.

தமிழ் மொழியின் அருமை ரஷ்ய நாட்டினரும்—செக்கோஸ்லாவிய நாட்டினரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் இங்கே அது சரிவர உணரப்படவில்லை.

இங்கிலாந்து பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராயப்படுகிறது—என்று அறியும் நேரத்தில் அத்தகையத் தமிழுக்கு நாம் சொந்தக்காரர்கள் என்கிறபோது, நமது நினைவு எங்கோ செல்கிறது. ஆனால் நாம் இன்றுள்ள நிலையை நினைக்கும்போது—இன்றிருக்கும் நிலைக்கு நமது நினைவு வருகிறது.

எங்கோ நம் நினைவு செல்கிறது என்று கூறினேனே அந்தத் திருஇடத்திற்கு நாம் நிச்சயம் செல்வோம். எப்போது? தமிழர்கள் தமது தமிழ்ப்பண்பாட்டை உணர்ந்து—தமது வரலாற்றை உணர்ந்து தமது ஆற்றலை உணர்ந்து—ஒன்றுபட்டுப் பணியாற்றி நிச்சயம் அந்த இடத்தை அடையலாம்.

தமிழ்மொழி பற்றி நடக்கும் ஆராய்ச்சிகளையும் முடிவுகளையும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்திக்கொள்வோம் என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்வோம்!

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும்; தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும்!

ஆனால்...தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள்!

இங்கிலாந்திலிருந்தும் பிறநாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ்மொழி இத்தகைய அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில்—அந்த மொழிக்குச் சொந்தக்காரர் என்று நினைக்கும்போது அந்த மொழி மீது பற்று—பாசம் ஏற்படாமலா இருக்கும்?

அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது—எந்த நோக்குடனாவது — எப்படிப்பட்டவர்களிடமிருந்தாயினும் தனிமரியாதை கிடைக்கவில்லையென்றால் அந்தத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது.

ஆழ்கடல் கொந்தளித்துக்கொண்டுதானிருக்கிறது பக்குவமாகக் கடக்க வேண்டுமானால் நல்ல நாவாயின்—கப்பலின் மூலம் கடக்கலாம்.

அதுபோல தமிழர்களை அணைத்துக்கொண்டு சென்றால் அவர்களைவிடச் சிறந்தவர்கள் யாரும் இருக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையில் ஒற்றுமையைக் குறிக் கோளாகக் கொண்டு பணியாற்றினாலும் — அனைத்து நாட்டுக் கொடிகளும் வெளியே பறக்க—உள்ளே பேசி விட்டு வெளியே வந்தாலும் எந்த நாட்டின்மீது யார் படையெடுப்பார்களோ என்ற பேச்சும் இருக்கும்!

ஆனால் உண்மையான ஒற்றுமை உணர்வினை 'யாதும் ஊரே; யாவரும்கேளிர்' என்ற பொன்மொழியில் வடித்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தந்த தமிழ ரின் பெருந் தன்மையை எண்ணி—எண்ணி நெஞ்சம் விம்முகிறது.

யாதும் ஊரே—யாவரும் கேளிர் என்று பாடிய புலவர் தீதும் நன்றும் பிறர்தர வாரா—என்றும் அடுத்த அடியில் பாடியிருக்கிறார்.

நல்லது வரவேண்டுமா; அது நாம்தான் செய்து கொள்ளவேண்டும்; கெட்டது வரவேண்டுமா? நாம் தான் வரவழைத்துக்கொள்ளவேண்டும்!

எனவே, தீதுவருமோ என்று ஐயப்பாடு கொள்ள வேண்டாம்! அது நாமாகத் தேடிக் கொண்டால்தான் வரும்! பிறர் தருவதல்ல— தீதும் நன்றும்!

நாம் வேண்டாம் என்றால் அது வராது.

தமிழருக்குத் தீது பிறர் தருவதால் அல்ல—நாமே தீது தேடிக் கொண்டாலொழிய தமிழர்களுக்குத் தீது ஒருபோதும் வராது.

தமிழ்மொழியின் அருமை பெருமையை நாம் உணர் வதோடு பிறரும் உணர்ந்து

தமிழர்களாகிய நம்மை அவர்கள் நோக்கி

இந்தத் தமிழ்மொழி உங்களுக்கு மட்டும் உரிய மொழி அல்ல; எங்களுக்கும் அதுதான் மொழி; அது தான் இணைப்பு மொழி. அதுதான் பொது மொழி; அது தான் ஆட்சி மொழி என்று கூறும் காலம் வரும்!

அந்தக் காலம் அவசர நடையால் வருவதல்ல; அவசரக் கோலத்தில் கிட்டுவதல்ல!

தூண்டில் போடுபவன் முள் அருகில் மீன் வரும் வரை எப்படிப் பொறுமையுடன் இருப்பானோ, அந்த கைய பொறுமையை நாம் கைக்கொள்ளவேண்டும்; கற்றுக் கொள்ளவேண்டும்.

தமிழ் மறையிலும் தமிழ் நெறியிலும், காலம் — இடம்—வகை — பொருள் அறிந்து செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

அந்த வழி நடந்து தமிழ் மொழியை அரியாசனத் தில் அமர்த்திடக் கூடிய நன்னாளை நாம் உருவாக்கு வோம்!

(தமிழ் மாநாட்டுத் தொடக்க விழாவில்)

✻

ஆர்வீஸ்
காபி
38. நெல்லுக்காரத் தெரு, காஞ்சீபுரம்.

உலகத்தமிழ் மாநாடு: தோன்றிய வரலாறு!

15.1.1968.

உலக ஆராய்ச்சியாளர்களிடையே 'தமிழ்' பற்றிய வரலாற்றுப் படிப்பு பெறவேண்டிய கவனத்தைப் பெறவில்லை.

மாபெரும் வரலாற்றுப் பின்னணியும் இடையில் பழுதுபடாத வளர்ச்சிப் படிகளையும் கொண்டு சோழ மக்களால் ... பட்டு தமிழ்மொழியில், பொலிவு ஏதும் குன்றவில்லை மாற்றம் ஏதும் வந்துவிடவில்லை என்ற உண்மையினை மிகச் சில ஆராய்ச்சியாளர்களே உணர்ந்திருக்கிருர்கள்.

கவிதையில் உரைநடையில் தோன்றியிருக்கும் ஒரு சில அமைப்பு மாற்றங்களைத் தவிர இந்தக் காலத்து தமிழர்களும் கிறித்து பிறப்பதற்கு முன்னுலுள்ள இலக்கிய ஏடுகளை சிரமம் ஏதும் அதிகமின்றிப் படித்தறிந்துவிட முடியும். ஆனுல் 17-ம் நூற்ருண்டு ஷேக்ஸ்பியரின் இலக்கியங்களை இன்றைக்கு இங்கிலாந்து மக்கள் புரிந்துகொள்வதில் இதே நிலையினைப் பெற்றிருக்கவில்லை. அவைகளைப் படித்தறிவதில் சிறிது கடின நிலைதான் அனுபவிக்கின்றனர். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழ் ஒலி வடிவுதான் ஏறக்குறைய மாற்றம் ஏதும் அதிகமின்றி இன்னும் இருக்கிறது.

1786-ம் ஆண்டு சர். வில்லியம் ஜோன்ஸ் என்பார் சமஸ்கிருதம் அவெஸ்தான் கிரீக் இலத்தீன் ஆகிய மொழிகளுக்கிடையே ஒற்றுமை இருக்கிறதென்பதைச் சுட்டிக் காட்டிய உடனேயே ஐரோப்பிய அமெரிக்க மொழி நூல் வல்லுநர்கள் இந்திய மொழிகளில் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கினுர்கள்.

அவர்கள் தவறு இல்லை யென்ருலும் உண்மை என்னவோ இந்திய மொழி பற்றிய ஆராய்ச்சி என்ருல் 'சமஸ்கிருதம்' என்ற ஒன்றுதான் தெரிந்தது. மேற்கு நாடுகளில்கூட இந்த தவறுன அடிப்படையின் விளைவாகத்தான் 'சமஸ்கிருதம்' பற்றிய பல ஆராய்ச்சிப் பிரிவுகள் இருக்கும் நிலை பிறந்தது.

தமிழ் அல்லது திராவிட மொழிகள் பற்றிய ஆராய்ச்சி அவர்களால் புறக்கணிக்கப்பட்டது.

இந்திய மொழிகளில் நிபுணத்துவம் பெற்ற பிரபல பிரெஞ்சு பேராசிரியர் ஃபிலிஸோட் கருத்துப்படி இந்தப் புறக்கணிப்பு ஏற்பட இரண்டு காரணங்கள் இருந்தன.

முதலாவது காரணம்: 18-ம் நூற்ருண்டு முதலே ஐரோப்பியர்களின் கவனம் நடவடிக்கைகள் கல்கத்தாவில்தான் இருந்தது. இதனுல் தமிழ்நாடுபற்றிய உணர்வு அவர்களுக்குத் தோன்றவே இல்லை.

இரண்டாவது காரணம்: தமிழ் மொழி இந்தி வங்காளி, பஞ்சாபி, மராத்தி போன்ற பிரதேச மொழிகளைப் போன்ற ஒன்றுமட்டுமே என்றுதான் பிறநாட்டு மொழி ஆராய்ச்சியாளர்கள் தவருகக் கருதிக் கொண்டிருந்தார்கள்.

தனித்து பெருமை கொண்டது மட்டுமல்லாமல் சமஸ்கிருதத்தையும் சிறப்பித்த மொழி தமிழ்; அது மட்டுமல்ல ஆரிய — திராவிட நாகரிகங்களின் ஒரு இணைப்புப் பாலமாக இருந்த மொழி தமிழ் என்பதனை அவர்கள் அறியவில்லை.

இந்த இரண்டு குறைபாடுகளையும் போக்கி தமிழ் மொழிக்கு உலகக் கவனிப்பை உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்தில் 1964ம் ஆண்டு புதுடில்லியில் நடந்த கீழ்த் திசை மொழியாளர்கள் மாநாட்டில் சில அறிஞர்கள் ஒன்று கூடி "அனைத்துலகத் தமிழ் மொழி ஆராய்ச்சிக் கழகம்" என்ற அமைப்பை உருவாக்கினுர்கள். அதில் பின் வரும் மேற்கத்திய ஆராய்ச்சியாளர்கள் அலுவல் பொறுப்புகளை ஏற்றனர்.

பேராசிரியர் ஜீன்ஃபிலிஸோட்
பேராசிரியர் டி. பர்ரோ
பேராசிரியர் எப். பி. ஜே. குபேய்ர்
பேராசிரியர் கமீல் ஸ்வெலபில்

1966-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இந்த அமைப்பு மலேசிய பல்கலைக் கழகம், மலேசிய தேசிய கல்விவளர்ச்சிக்கழகம் ஆகியஅமைப்புகளின்ஒத்துழைப்புடன் முதல் உலகத் தமிழ் மாநாட்டினையும் கருத்தரங்கினையும் நடத்தியது. 25 நாடுகளிலிருந்து 200க்கு மேற்பட்ட அறிஞர்கள் மேற்கே அமெரிக்காவிலிருந்து கிழக்கே ஜப்பான் வரை ஆகிய நாடுகளிலிருந்து வந்து கலந்து கொண்டனர்.

தமிழக அரசின் சார்பிலும் முதலமைச்சர் சார்பிலும் விடுத்த அழைப்பினை ஏற்றுக்கொண்டு இந்த சர்வதேச அமைப்பு இரண்டாவது மாநாட்டினையும் கருத்தரங்கினையும் தமிழகத்தின் தலை நகரில் சென்ற மூன்ரும் தேதி முதல் 10ந் தேதி வரை சிறப்பாக நடத்தி முடித்திருக்கிறது.

திராவிட மொழி ஆராய்ச்சியில் நாட்டம் கொண்டவர்கள்—தமிழ் மொழிப்படிப்பில் பாண்டித்தியம் பெற்றவர்கள் ஆகியோர் தங்கள் தங்கள் கருத்தினைப் பரிமாறிக்கொள்ள இந்த மாநாடும் கருத்தரங்கும் நல்ல சாதனமாகப் பயன் பட்டிருக்கின்றன.

தங்கள் நாடுகளில் உள்ள தமிழ் ஆராய்ச்சிப் படிப்பை இன்னும் எந்தெந்த முறைகளில் விரிவாக்கலாம் பயனுள்ளதாக்கலாம் என்ற எதிர் காலத் திட்டங்களையும் வெளி நாட்டுத் தமிழறிஞர்கள் உருவாக்கித்தர இந்த விழா பெரிதும் உதவியது.

கருத்தரங்கு அறிஞர்களுக்கும், கண் காட்சி ஊர்வலம் பட்டிமன்றம் சொற்பொழிவுகள் பொது மக்களுக்கும் தமிழ் பற்றிய அருமை பெருமைகளைப் பெறவும் தரவும் உதவியிருக்கின்றனர்.

✽

தமிழ் மரபு.......!

குடியரசுத்தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன்

"இந்த உலகத் தமிழ் மாநாட்டுடன் தொடர்பு கொள்வதை ஒரு பேறாக நான் கருதுகிறேன். இந்த மாநாடு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அத்துடன், நமது கலாசாரத்தின் பலதரப்பட்ட அம்சங்களையும், அதன் ஊடே இழையும் ஒற்றுமையையும் பற்றிய என்னுடைய சொந்த அறிவை ஆழ்ந்ததாக்குவதற்கு எனக்கொரு வாய்ப்புக் கொடுக்கப்பட்டதாக நான் கருதுகிறேன். நம்முடைய மொழிகளிடையே தமிழ் மாண்பு மிக்கதொரு இடத்தை வகிக்கிறது; வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையே உள்ள முக்கிய தொடர்புகளை அது இணைத்திருக்கிறது. நம்முடைய நாட்டிற்கும் வெளியே அது பேசப்படுவதால் தமிழ் ஒரு சர்வதேச மொழியாகவே இருக்கிறது. தென்கிழக்கு ஆசியாவின் ஆக்கமுள்ள பரந்த கலாசாரத்தில் ஓர் களஞ்சியமாக தமிழ் விளங்குகிறது. மலேயாப் பல்கலைக் கழகம், மலேசியா அரசாங்கம் ஆகியவற்றின் ஆதரவில் முதலாவது உலக மாநாடு கோலாலம்பூரில் நடைபெற்றதில் வியப்பில்லை. இந்த மாநாட்டை துவக்கி வைக்கும்படி என்னை அழைத்ததன் மூலம், உண்மையில் நாம் எவ்வாறு ஒருவரையொருவர் சார்ந்திருக்கிறோம் என்பதையும், கலாசார, ஆன்மீக ஒற்றுமை பற்றிய உண்மையான ஆராய்ச்சி ஒற்றுமை உணர்வை எவ்வாறு வளர்க்க முடியும் என்பதையும் மேலும் தீவிரமான முறையிலும் புதிதாகவும் நான் தெரிந்துகொள்ளும்படி அழைத்திருக்கிறீர்கள்.

தமிழ் நாட்டின் எல்லைகள் பழைமையானவை, நில எல்லைகளையும், கலாசார எல்லைகளையும் தாண்டிச் செல்கின்ற ஒரு பண்பாட்டையும் பெற்றிருந்தது. தமிழ் உணர்ச்சி இருந்த இடமெல்லாம் தமிழ் நாடு பரவியிருந்தது. வடக்கில் இமயத்தையும் கிழக்கிலும் மேற்கிலும் திரை கடல்களையும் அந்த கடல்களுக்கு அப்பாலுள்ள நிலங்களையும் அது கண்டது. தமிழர்கள் அரேபியா, எகிப்து, ரோமாபுரி ஆகியவற்றுடன் வர்த்தகம் நடத்தினார்கள். வலிமை மிக்க வர்த்தகச் சங்கங்களின் பெயர்கள் உலகம் முழுவதும் வியாபித்திருந்தன. மதிப்பரிய வர்த்தகப் பண்டங்களுடன் கப்பல்கள் தங்கிய பல்லவர்களின் மாமல்லபுர துறைமுகத்தைப் பற்றிய வர்ணனை ஆழ்வார்களின் பாடல்களில் காணப்படுகின்றது. தமிழ் நாட்டிற்கும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இடையே செழிப்பான வர்த்தகம் நடைபெற்றது பற்றி சுமத்ராவில் கண்டெடுக்கப்பட்ட 11-வது நூற்றுண்டு தமிழ் கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது. தமிழ் மன்னர்களின் கடற்படை இந்து மகா சமுத்திரத்தை ஆண்டுவந்தது. புகழ்மிக்க கடற்படையைப் பெற்றிருந்த ராஜேந்திர சோழன், சீனப் பேரரசருடன் ராஜீய, வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தான். மேல் திசை நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொள்வதற்காக பல நூற்றுண்டுகளுக்கு முன் பாண்டிய மன்னன் ஒருவன், ஆகஸ்தஸ் என்னும் ரோமாபுரி பேரரசருக்குத் தூதுவர் ஒருவரை அனுப்பியிருக்கிறுன். ஆனால், அதே சமயத்தில் கற்புத் தெய்வத்திற்கு ஒரு கோயில் கட்டுவதற்காக சேர மன்னன் ஒருவன் இமயமலையிலிருந்து கல் கொணர்ந்து, கங்கையில் நீராட்டி அத்தெய்வத்திற்குச் சிலை அமைத்த வரலாற்றையும் நாம் அறிவோம்.

தமிழ் மொழி பண்பாட்டைப் பற்றி இங்கு குழுமியுள்ள பேரறிஞர்களைவிட அதிகமாக நான் கூறமுடியாது. எல்லோருக்கும் தெரிந்தவற்றை நாம் மீண்டும் கூறினால் அது ஒரு மாபெரும்மரபிற்குச் செலுத்தும் அஞ்சலிதான். இந்த மரபு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு உலகின் மிகப் பழைமையான இலக்கிய அவை எனக் கருதப்படும் சங்க இலக்கியத்திலிருந்து ஆரம்பமாகிறது. செழித்த, பண்பட்ட இந்த இலக்கியம் பல நூற்றுண்டுகளாய் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுகிறது. உலக அறிவின் புனிதக் களஞ்சியமாக விளங்குகிறது குறள். வால்மீகியின் கதையை அடிப்படையாகக் கொண்ட கம்பராமாயணம் ஒரு மாபெரும் காவியமாகும். உலகின் மிகவும் புகழ்பெற்ற இலக்கியப் படைப்புக்களில் ஒன்றாக இது திகழ்கிறது. அதேபோன்று தற்கால இலக்கியமும் செழிப்புற்று விளங்குகிறது. கவிஞர்கள், கதையாசிரியர்களின் பட்டியலில் சுப்ரமண்ய பாரதியின் பெயர் குறிப்பிடத்தக்கது. நமது நாட்டு விடுதலைப் போராட்டக் கவியான அவர் புதியதொரு சுதந்திர சகாப்தத்தை முன்னரே அறிவிக்கக்கூடிய தீர்க்க தரிசனத்தைப் பெற்றிருந்தார்.

தமிழ் மரபு பழமையானது மட்டுமின்றி பரந்த உணர்வையும் பெற்றிருந்தது. தமிழ் மரபு எல்லா வகைகளிலும் சிறப்புற்று இருப்பதால் அதில் எந்த அம்சம் அதிகச் சிறப்பு வாய்ந்தது என்பதைக் கூறுவது கடினம். சமஸ்கிருத மொழிக்கு பாணினி செய்துள்ளதைப் போன்று தமிழுக்கும் தொல்காப்பிய ஆசிரியர் திடமான விஞ்ஞான ரீதியில் இலக்கண அடித்தளத்தை அமைத்திருக்கிறுர். ஆனால் தமிழ் சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களும் தங்களுடைய மொழியை வளப்படுத்தியதும் அதன் சொல் வளம் இனிமை முதலிய பண்புகளைக் கண்டு பிடித்ததோடு இந்திய சமயம் தத்துவம் கவிதை ஆகியவற்றின் மொழியாக விளங்கும் சமஸ்கிருதத்தைப் பயிலுவதின் அவசியத்தையும் அனுகூலத்தையும் உணர்ந்திருந்தார்கள். வேறு மொழிகளை அறிந்து தன்னுடைய அறிவாற்றலை பல்வேறு விதங்களில் வெளிக் காட்டுவதற்கு தமிழன் பேரார்வம் கொண்டிருந்தான். மாபெரும் ஆழ்வார்களில் ஒருவரான குலசேகரர், பெருமாள் திருமொழியின் ஆசிரியர் என்ற முறையில் தமிழ் இலக்கியத்தில் உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கிறுர் அவருடைய முகுந்தமாலா சமஸ்கிருத இலக்கியத்தில்

சிறந்ததொரு படைப்பாக விளங்குகிறது ராமாநுசர் ஆண்டாளின் பக்திப் பெருக்கையும் நம்மாழ்வாரின் ஆன்ம தத்துவத்தையும் சமஸ்கிருதத்தில் விவரித்திருக்கிறார். சமஸ்கிருத இலக்கியத்திற்குத் தமிழர்கள் ஆற்றி உள்ள பணிபற்றி மேலும் விரித்துக்கூற நான் விரும்பவில்லை. ஏனெனில் பெயர்களையும் நூல்களையும் பற்றிய நீண்டதொரு பட்டியலைக் கொடுக்க நேரிடும். அல்லது பேரறிஞர்களிடையே பாகுபாட்டைக் குறிக்கவும் நேரிடும்.

சமஸ்கிருத இலக்கியத்திற்குத் தமிழர்கள் ஆற்றியுள்ள பணியைக் குறிப்பிடுகையில் அது நம்மை சமயத்திற்கும் தத்துவத்திற்கும் கொண்டுபோய் சேர்க்கிறது. தமிழரின் பரந்த உணர்ச்சி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. சைவம், வைஷ்ணவம், பக்தி ஆகியவற்றின் மூலமும் அத்வைதம், த்வைதம் முதலிய தத்துவங்களின் மூலமும் தமிழர்கள் இந்து மதத்தை வளப்படுத்தி இருக்கிறார்கள். அதுமட்டுமின்றி, அதற்கப் பாலும் பல பணிகளையும் ஆற்றியிருக்கிறார்கள். குந்தகுந்தாசாரியார் தெற்கில் சமண மதத்திற்கு அடித்தளம் அமைத்தார். அதோடு சமண சமயத்தின் பிரதான ஆசிரியராக விளங்குகிறார். விக்னைவாதா பௌத்த மதத்தைத் திக்னாகவும் அவருடையசீடர் தம்மபாலரும் தெற்கில் நிலை நாட்டினார்கள். அவர்கள் நளாந்தாவில் போதித்து வந்தவர்களாயினும், காஞ்சீபுரத்தைச் சேர்ந்தவர்கள். சென் புத்த சமயத்தின் தந்தையாக விளங்கும் போதிதர்மர் இந்த பண்டைய நகரத்தைச் சார்ந்தவர். இஸ்லாமிய மதத்தைப் பரப்பியவர்களும் இங்கு இல்லாமலில்லை. தமிழ்ப் புலவரான உமர் ஐயாயிரம் பாடல்களில் சீரா புராணம் என்னும் நூலை எழுதி இருக்கிறார்.

ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பதில் தமிழர்கள் ஒரு தனித் திறனைப் பெற்றிருக்கிறார்கள். சுகாதார அமைப்புகளைப்பற்றி நாம் இங்கு குறிப்பிடவில்லை. உயர் கல்விக்கான பல பள்ளிகளும் ஸ்தாபனங்களும் இங்கு இருந்தன என்று தமிழ் நாட்டில் பல இடங்களில் உள்ள கல்வெட்டுகள் மூலம் நாம் அறிகிறோம். ஆலயம் இல்லா கிராமத்தில் குடியிருக்கக் கூடாது; ஏனெனில் பூஜைக்குரிய இடம் மட்டுமின்றி ஒரு கல்வி போதனைக்கான இடமும் ஆகும். இவ்விதம் தமிழர்களின் அறிவு மூதாட்டியான அவ்வை கூறியிருக்கிறார். இலக்கியம், கலை மதம், சமூக உறவுகள் முதலிய கலாச்சார வாழ்க்கைக்கான—அநேகமாக எல்லா அம்சங்களையும் உருவாக்கி ஊக்குவிப்பதில் ஆலயம் ஒரு மத்திய கேந்திரமாக விளங்கி வந்தது. மக்கள் தொகை அதிகமுள்ள பெரிய பட்டணங்களில் இவ் வசதிகளை ஆலயம் அதிகமாக அளித்தது. 'கடிகா' அல்லது பல்கலைக் கழகம் பெரு மதிப்புடன் விளங்கியது மட்டுமின்றி, அரசியல் துறையில் செல்வாக்குப் பெற்றிருந்ததாக நாம் அறிகிறோம். உதாரணமாக அரசவாரிசு இல்லாமல் இருந்தபோது இரண்டாவது நந்திவர்மனை ஆட்சி பீடத்தில் அமர்த்துவதில் காஞ்சீபுரத்திலிருந்த பல்கலைக் கழகம் முக்கிய பங்கு ஆற்றியது. மதம், சரித்திரம் ஆகியவற்றை நேரடியாகப் போதிக்கும் ஒரு ஸ்தாபனமாகவும் ஆலயம் இருந்தது. காஞ்சீபுரத்தில் வைகுந்த நாத பெருமாள் கோவிலில் உள்ள சிற்பங்கள் பல்லவ மன்னர்களின் சரித்திரத்தைத் தெளிவுடன் விளக்குகின்றன என்பதையும், தஞ்சாவூரில் ராஜ ராஜேஸ்வர ஆலயத்திலுள்ள ஓவியங்கள் புகழ்பெற்ற ராஜ ராஜனின் சாதனைகளைச் சித்திரிக்கின்றன என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

பலவகைப்பட்டதும், மிகச்சிறப்புகளுடன் கூடியதுமான கருத்தை ஈர்க்கும் தமிழர்களின் படைப்புகளைப் பற்றி விசேஷ நிபுணத்துவம் பெற்றிராத நான் கூட ஒரு சமயம் பேசிக்களித்து காலத்தையே மறந்திருக்க முடிகிறது. ஆனால், இங்கு கூடியுள்ள அறிஞர்கள், நிபுணர்கள் ஆகியோரின் பொறுமையை நான் சோதிக்க மாட்டேன்.

சர்வதேசத் தன்மையுடனும் ஒற்றுமை உணர்வுடனும் கூடியதுமான தமிழர்களின் நன்மை பற்றி மறுபடியும் குறிப்பிட்டு விட்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

சங்ககால இலக்கியத்தில் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற அழகான பாடல் ஒன்று வருகிறது. இப்பாடலில் 'ஊர்' என்பதைக் கவனியுங்கள். என் இச்சைப்படி வாழக்கூடிய வீடு அல்ல உலகம். என் கடவுளுக்கு உரியதாக இருக்கக்கூடுமெனினும் உலகம் எனக்குச் சொந்தமில்லை, உலகம் எனது ஊர், அங்கு வேலை செய்வதற்கும் களிப்புடன் இருப்பதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு; அங்கு எல்லா உறவுகளிலும் நேசத்தன்மை பொலிகிறது. அறநெறியுடன் கூடிய அழகான வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்கும் இந்த நற்பண்புகளை திருக்குறள் போற்றியிருக்கிறது.

'ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்'

'உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும்
இன்னாச் சொல் நோற்பாரின் பின்.'

'அறிவினுள் எல்லாம் தலை என்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.'

வருங்கால பாரதம் பற்றி கவிதை வடித்த கவி. சுப்ரமணிய பாரதி, குறுகிய எண்ணங்களற்ற, மொழி பிராந்திய தடைகளற்ற இந்தியாவைப் பற்றி கனவு கண்டார்.

"ஓயுதல் செய்யோம்
தலைசாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்
பல வண்மைகள் செய்வோம்"

என்று பாரதி கூறினார்.

நம்மிடையே பாரதி இப்போது வாழ்ந்திருந்தால் அவர் என்ன எண்ணியிருக்கக்கூடும்? மனக்கசப்பு அடைந்திருப்பாரா? ஆழ்ந்த வருத்தத்தினால் கண்ணீர் சிந்தியிருப்பாரா? மனிதத் தன்மையுடனும் பரந்த நோக்குடனும் கூடியதங்களுடைய சிறந்த மரபை மறுக்கும்படி அவர் தமிழர்களைக் கேட்டுக்கொண்டிருப்பாரா அல்லது அமைதியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி, பொய்த் தோற்றங்களை நீக்க தமிழ் மரபின் நற்சக்தியை உபயோகித்திருப்பாரா?

ஒதுங்கி இருக்கும்படித் தமிழர்களை அவர் கேட்டுக்கொண்டிருப்பாரா அல்லது எல்லா இந்திய மக்களின் பேதங்களுடைய மேன்மை எனக் கருதி அந்த லட்சியத்திற்காகப் பாடுபட அழைப்பு விடுத்திருப்பாரா?

(தமிழ் மாநாட்டுத் தொடக்க விழாவில்)

எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

மாமல்லன் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம்

காஞ்சிபுரம்.

மாமல்லன் வீடு கட்டும் சங்க நிலத்தின் மனைப் பிரிவில் கடைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் இடம்பெற விரும்புவோர் சங்கத்தை அணுகவும்.



எங்கள் அன்பான பொங்கல் வாழ்த்துக்கள்!

தென்னகத்தின் தனிச் சிறப்புப் பெற்ற

காஞ்சியில்

- ★ சொந்த தயாரிப்பிலும்
- ★ நீண்ட உழைப்பிலும்
- ★ சிறந்த வேலைப்பாட்டிலும்
- ★ நியாய விலையிலும்

நிகரற்று விளங்கும் பெருமைவாய்ந்த

செப்பு, பித்தளைப் பாத்திரங்களுக்கு

ஒப்பற்ற இடம்

காஞ்சிபுரம் பாத்திரத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

437, காந்தி ரோடு, :: காஞ்சிபுரம்-1.

தொலைபேசி எண்: 221

T. M. விஜயபாலன், செயலாளர். K. S பார்த்தசாரதி, தலைவர்.

R. K. INDUSTRIES

High Road, Velachery, Madras-42.

Grams: 'ARTHENE'

OFFERS:

POLYTHYLENE
LAY FLAT TUBES,
SHEETS, BAGS Etc.

*

PROPRIETORS:

K. OOR & COMPANY

16, Stringers' Street, :: MADRAS-1.

PHONE: 23019 & 23526

Grams: "TRESUNDRY"

Agents & Stockists:

PAPER, PRINTING INKS (COATES) & OTHER PRINTERS' SUNDRIES AND INSTA NUMBERING — MACHINES —

Indents booked for:

PAPER, PROCESS ZINC & COPPER SHEETS, LITHO GRAPHIC ZINC SHEETS, HARDWARE, MATCH CHEMICALS "KG" ZIP — FASTENERS ETC. —

காஞ்சிபுரம்

கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., எண். ஜி. 2115

காஞ்சிபுரம்-2.

(மத்திய அரசினர் உபயோகிப்போர் பண்டகசாலை திட்டத்தின்கீழ் துவக்கப்பட்டது.)

கிளைகள்:

காஞ்சிபுரம்	14
கம்மவார்பாளையம்	1
வாலாஜாபாத்	1

எங்கள் பண்டகசாலை மூலம் கட்டுப்பாடுள்ள பொருள்களான சர்க்கரை, கோதுமை, மைதா, ரவை, போன்றவைகள் மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்கப்படுவதுடன், எல்லா கிளைகளிலும் குடும்பத்திற்குத் தேவையான பலசரக்கு பொருள்கள், 'அக்மார்க்' எண்ணெய் வகைகள், காப்பிக் கொட்டை, கூட்டுறவு காப்பித்தூள் ஆகியவைகள் விற்கப்படுகின்றன. மேலும் எவர்சில்வர் பாத்திரங்களும், பெயர்பெற்ற மில் ரகங்கள், கைத்தறி தினுசுகளும் மிக மலிவான விலைகளில் கிடைக்கின்றன.

எங்கள் கிளைகளுக்கு ஒருமுறை விஜயம்செய்து பயனடைய வேண்டுகிறோம்.

C. R. உமாபதி,
தலைவர்.

ஓவிய அமைதி

— அமுதபாரதி

பூங்கொடி மலரைத் தேடிப்
பொன்வண்டு பறக்கும் காட்சி
மாங்குயில் கிளையில் குந்தி
மணிக்குரல் எழுப்பும் காட்சி,
தீங்கனி அணில்கள் தின்னும்
தித்திக்கும் இன்பக் காட்சி
தாங்கிய சித்திரங்கள்
தீட்டிய கலைஞன்...மேலும்

அந்திவான், அழகு மான்கள்,
ஆற்றுநீர், ஆடும் மீன்கள்
மந்திவாழ் தோப்பு, ஆட்டு
மந்தைகள். மணிப்புருக்கள்,
செந்தழல், சோதி, வானச்
சூரியன், மலைகள் யாவும்
சிந்தையைக் கவ்வும் வண்ணம்
தீட்டிய கலைஞன்...இன்னும்

கண்ணிலே பட்ட வற்றைக்
கவினுறத் தீட்டிக் கொண்டே
எண்ணிலாப் புகழைப் பெற்றான்!
இருப்பினும்...அவனே இன்பப்
பண்ணிலா யாழைப் போலப்
பூவிலாக் கொடியைப் போல
வெண்ணிலா உலவி வாரா
வானம்போல் சோர்ந்து நின்றான்!

கலைஞனின் சோர்வைக் கண்டு
கலங்கிய அன்பு நண்பன்,
"விலையிலாக் கலையாள் இந்த
உலகினை மயக்கும் நண்பா!
சிலையெனச் சமைந்த தேனோ?
சோர்வினை அடைந்த தேனோ?
கலையையும் மிஞ்சும் அந்தக்
கடுந்துயர் என்ன? சொல்க..."

என்றனன்! அதனைக் கேட்ட
எழில்கலை மன்னன் சொல்வான்;
'அன்பிலே ஊறி, நட்பின்
ஆற்றிலே மகிழும் நண்பா!
என்விரல் அசைவால், வண்ணத்
தூரிகைக் குழைவால் இன்பம்
பின்னிய சித்திரங்கள்
பலப்பல தீட்டி விட்டேன்!

ஆயினும் எனது நெஞ்சில்
அமைதியைக் காண வில்லை!
வாயினால் எடுத்துக் கூறி
விளக்கவும் முடிய வில்லை...
நோயிலா உடலைப் போலே
நெஞ்சமும் திகழ—நல்ல
பாயிலே நெருங்கும் கோரைப்
பான்மைபோல் அமைதி வேண்டும்

அல்லவோ? எனது நண்பா!
ஆதலால் அமைதி தேடிச்
செல்லலாம் வெளியூர் என்று
சிந்தனைச் செய்கின் றேன்யான்!
நல்லதோர் அமைதி காணும்
நாளிலே திரும்பி வந்து
சொல்லுவேன்...!" என்று கூறிச்
சித்திரக் காரன் சென்றான்!

நாட்களோ திங்கள் நாடி
நடந்தன! திங்கள், ஓங்கும்
வேட்கையால் வருட மாக
விரிந்தன! ஓர்நாள்...யாவும்
தீட்டிடும் கலைஞன் தன்னூர்
திரும்பினன் என்னும் செய்தி
கேட்டதும் நண்பன் அந்தக்
கலைஞனை ஓடிப் பார்த்தான்!

பார்த்தவன் கேட்டான், 'நண்பா!
பயணங்கள் நலந்தான் அன்றோ?
தீர்ந்ததா மனத்தின் ஏக்கம்?
சேர்ந்ததா அமைதி? என்ன
பார்க்கிறாய்? வெற்றி தானா?
புரிந்திடச் சொல்லேன்! உந்தன்
வார்த்தையால் நானும் கொஞ்சம்
மகிழலாம் அன்றோ?" என்று!

நண்பனின் அவசரத்தை
நகைப்பினால் புலப்படுத்திக்
கண்களைச் சிமிழ்த்துப் பார்த்த
கலைஞனும் பதிலாய்த் தான்தன்
வெண்கலக் குரலால் "ஊம்உம்
வெற்றிதான்!" என்றான்! நண்பன்,
"உண்மையில் மகிழ்ந்தேன்! எவ்வா
றமைதியைப் பெற்றாய்?" என்றான்!

"சிறியதோர் வட்டந் தன்னைச்
சீருற வரைந்தேன்! ஆங்கே
பெரியதோர் அமைதி கண்டு
பூரித்தேன்."—கலைஞன் சொன்னான்!
"சிறியதோர் வட்டம் போட்டா
அமைதியைப் பெற்றாய்! விந்தை!"
விரிந்திடும் விழியைக் காட்டி
வியப்பினைச் சொன்னான் நண்பன்!

நண்பனின் வியப்பைக் கண்டு
நகைத்தஅக் கலைஞன் மேலும்,
"உண்மைதான் நண்பா! உண்மை!
ஒருசிறு வட்டம் மட்டும்!
வண்ணமோ சிவப்பு வண்ணம்!
வடிவமோ சிறிய வட்டம்!"
என்றனன்!...கேட்ட நண்பன்
இப்போதோ...குழம்பிப் போனான்!

(27-ம் பக்கம் பார்க்க)

தேசம் — தேசீயம் தேசிய மொழி

எஸ். இராமசாமி எம்.ஏ.,

தெரிந்தும் தெரியாமலும் இந்திய அரசியலில் தவருகக் கருதப்பட்டும் பேசப்பட்டும் வருகிற தலைப்புகளில் தேசம்-தேசியம்—தேசிய மொழி ஆகியவையும் வருகின்றன.

வாதத்தின் திறமை, ஒளி பிறப்பதற்கும் பயன்படும்; உண்மை நிலையினை மறைப்பதற்கும் உதவும். இதனுல் வாதத்தினை யாரும் வெறுப்பதில்லை. வாதம், அதனைப் பயன்படுத்துபவரைப் பொறுத்து வளைந்து கொடுக்கக் கூடிய ஆயுதம்.

தேசம்—தேசியம்—தேசிய மொழி என்ற பிரச்சனையில்கூட வாதங்கள் மாற்றுக் கருத்துக்களை வளைப்பதற்கு வளைந்து கொடுத்துப் பயன்படுகிறதே தவிர புதிய உண்மை நிலை பிறப்பதற்கோ அல்லது இருக்கும் உண்மை நிலை இன்னும் ஒளிபடவோ பயன்படுவதில்லை.

இந்தியா தேசமா இல்லையா என்ற கேள்வி பிறக்கிறது. அதற்குப் பதில் உண்டு அல்லது இல்லை என்ற இரண்டே சொற்களில்தான் இருக்கவேண்டும் எனவும் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது.

இல்லை என்று கூறிஞல் ஏன் இல்லை என்பதற்கு அளிக்கப்படும் விளக்கங்களைக் காது கொடுத்துக் கேட்பதில்லை. தேசம் இல்லை; ஆனுல் தேசமாக இருக்க முயற்சிப்போம் என்று பின்னுல் கூறப்போகும் சமாதானத்தினை ஏற்கும் அளவுக்குப் பொறுமை காட்டுவதில்லை.

சரி போகட்டும்; தேசம்தான் என சொல்லுவோம் என்று, ஆம்; தேசம்தான் என்ருல் உடன் அடுத்தாற்போல் தேசியம் என்ற படிக்கட்டில் ஏற்றப்படுகிறேம். ஏன் என்று கேட்டாலோ இந்தியா தேசம் என்ருயல்லவா அப்படியென்ருல் இதனையும் ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்று 'இந்திய தேசியம்' என்ற இரண்டாம் படிக்கட்டில் தூக்கி நிறுத்துகிருர்கள்.

கட்டாயப் பயணம் இத்துடன் நிற்பதில்லை. இந்த முயற்சியே மூன்ருவதாக 'தேசிய மொழி' என்ற மூன்ருவதொன்றை ஏற்க வைப்பதற்காகத்தான்.

"இந்தியாவைத் தேசம் என்றும் அதற்கு அடையாளமாக தேசிய உணர்வினையும் காட்டச் சொல்லியது வெறும் நாட்டுப்பற்றுக்காக என்றும் நினைத்துவிடவேண்டாம். முதலிரண்டில் ஆரம்பித்தது மூன்ருவதாக 'தேசிய மொழி' என்ற ஒன்றினை அறிமுகப்படுத்தி வைக்கத்தான் தேசத்தையும் தேசியத்தையும் மட்டும் ஏற்றுக்கொண்டு பயனில்லை. தேசத்தையும் தேசியத்தையும் ஒத்துக்கொள்ளுமாறு கூறியதே 'தேசிய மொழி' என்ற ஒன்றினையும் ஒப்புக்கொள்வதற்காகத்தான்."

என்ற ஒரு விளக்கம் கடைசியாகத் தரப்படுகிறது.

அதாவது 'இந்தியை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுங்கள் அதுதான் தேசிய மொழி' என்று கூறுவதற்குத்தான் இத்துணைச் சுற்று வழிகள்.

கசக்கும் மருந்துக்கு இனிப்புப் பூச்சு இருந்தால் ஏற்றுக் கொள்கிருர்கள். விஷமாக இருந்தாலும் இனிப்புப் பூச்சுடன் தந்தால் ஏற்றுக்கொள்ளாமலா போகிருர்கள் என்ற தவருன முடிவின் முயற்சி இது.

'தேசம்' 'தேசியம்' என்ற புனிதமான தத்துவத்துக்கு இதைவிட கோழைத்தனமான துரோகம் வேறெதுவும் இருக்க முடியாது.

தேசம்—தேசியம்—தேசிய மொழி மூன்றும் உலகம் பூராவும் ஒரே தன்மையில்தான் இருக்கிறது என்று கருதுவது நெருப்புக்கோழி மனப்பான்மையைத் தவிர வேறெதுவும் கிடையாது.

'ஒரு தேசம்-ஒரு தேசியம்—ஒரு தேசியமொழி' என்ற அடிப்படையில்தான் எல்லா நாடுகளும் இருக்கின்றன என்று நினைப்பதோ நினைக்கவைக்க பூனைகளுக்கும் சூடுபோட்டால் வரிப்புலிகளாக மாறிவிடும் என்று கருதும் பேதமையாகத்தான் முடியும்.

ஒருதேசம் இருக்கலாம். ஆனுல் அதற்கென ஒரே தேசியமும், ஒரே தேசிய மொழிகளும் இருக்கவேண்டுமென நினைப்பது தவறு; அதற்கு மேலாக அதற்கென வாதாடுவது அதைவிட மடமை!

ஒரு தேசத்தில் பல தேசியங்களும் அதேபோல் பல தேசியமொழிகளும் இருக்கின்றன என்ற எளிய உண்மையினைத் தெரிந்துகொள்ள கடுமையான பள்ளிப் படிப்புகூட தேவையில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட தேசியங்களையும் தேசிய மொழிகளையும் கொண்ட தேசங்கள் இருப்பது அரசியல் நிகழ்ச்சிகளில் சாதாரண அறிவு படைத்தவரும் தெரிந்திருக்கும் உண்மை.

இந்த அடிப்படையில் விளைந்த தவறுதான் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வேறுபாடு புரியாத நிலை,

ஒரே தேசியம் ஒரே தேசிய மொழி என்ற கொள்கையை ஏற்காதவர்கள் 'தேசிய விரோதிகள்' என்று கருதப்படும் தவருன போக்கும் இந்த அடிப்படையில் விளைந்த வினைதான்.

இந்திய ஒற்றுமையை ஏற்றுக்கொள்வதற்கு 'இந்திதான் தேசிய மொழி' என்ற நிபந்தனையை விதிப்பதும் நிர்ப்பந்தத்தினை உருவாக்குவதும் வலிமை இருக்கிறது என்பதால் சிங்கம் வனமகாராஜனுக மதிக்கப்படும் 'காட்டு அரசி''யலைத்தான் காட்டுவதாக அமையும்.

ஒன்றுக்கு மேற்பட்ட தேசியங்களையும் தேசிய மொழிகளையும் கொண்ட கானடாவும் சோவியத் யூனியனும் உலகப் படத்தில் 'நாடு' எனத்தான் அழைக்கப்படுகின்றன.

இந்தி, இந்தியாவின் தேசிய மொழிகளில் ஒன்று. ஆனுல் அதற்கு இடப்படும் அரசியல் அந்தஸ்து சமயத்துக்குச் சமயம் மாறுகிறது.

உணர்ச்சி சற்று அதிகமாகும்போது இந்திய தேசிய மொழியல்லவா என்கிருர்கள்.

இது தவறான வாதம் என உணர்த்தினாலோ "சரி இணைப்பு மொழியாக வேணும் இருக்கட்டுமே" என்று சிறிது பணிந்து கொடுக்கிறார்கள்.

இரண்டுமே பழுதுபட்டவை.

இந்தி மட்டுமே இந்தியாவின் தேசிய மொழி இல்லை.

இணைப்பு மொழியாக ஆகவேண்டு மென்றாலும் அது இயற்கையில் அமையவேண்டும்; அரசியல் அரவணைப்பு இருக்கக்கூடாது.

ஆடுகள் அனைத்தும் மந்தையில் வாழ்ந்து பழக்கப் பட்டதுதானே தவிர பால் அருந்தி உயிர் வாழ்வது அதனதன் தாயிடத்தில்தான். கூட்டமாகத்தான் வாழ்கிறதே என அவைகளை அந்தப் பழக்கத்துக்கு கட்டாயப்படுத்தினும் முடியாது.

'இந்தியா ஒன்று என ஏற்றுக்கொள்கிறாயா; அப்படியென்றால் இந்தியையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்' என வாதிப்பதும் வலியுறுத்துவதும் இந்தி மட்டுமே தேசிய மொழி என்பதை ஏற்காதவர்களை அதிகப்படுத்தப்படுத்துகிறது என்பது மட்டுமல்ல; கோபுரத்தைப் பதுமைகள்தான் தாங்கிக்கொண்டிருக்கின்றன என்று நினைப்பதுபோல இந்திய ஒற்றுமை இந்தியை வைத்துத்தான் என மதிப்பிடுவதற்குச் சமமாகிறது.

மத்திய அரசின் மொழிக் கொள்கையினால் பாதிக்கப்படும் மக்கள் கொதித்தெழும் போதெல்லாம் "இந்தியா? இந்தியாவா?" என்று இரண்டே சொற்களில் சுருக்கமாக முழங்குவது மொழியழகுக்காக மட்டுமல்ல. தேசம்–தேகியம்—தேசிய மொழி ஆகிய மூன்றின் முக்கியத்துவம் அடங்கிய முழக்கம்தான் "இந்தியா? இந்தியாவா?" என்பது!

இந்தியைமட்டும் நாட்டுமொழியாக மாற்ற நினைப்பவர்களின் மனங்களில் உள்ள தேசபக்தியைவிட ஆயிரம் மடங்கு அதிக அளவு தேசபக்தி—நாட்டு நலன்— 'இந்தியா? 'இந்தியாவா?' என்ற கேள்வி எழுப்புவர்களின் இதயங்களில் இருக்கிறது.

'இந்தி'தான் என்றால் இந்தியா கிடைக்காது; பின்னர் தேசம் இருக்காது தேசிய மனப்பான்மை வராது என்ற உண்மை நிலையினை உணர்த்தும் முழக்கம்தான் "இந்தியா? இந்தியாவா?" என்பது.

இதே அளவு இதயபரிசுத்தத்தினை — கட்சியினை அழிக்கவேண்டுமென மத்திய அரசினர் பிரிவினைத் தடைச் சட்டம் கொண்டுவந்துபோது கூட அல்ல; மக்கள் ஆதரவுடன் தமிழகத்து முதலமைச்சராகவும் வந்த பின்னர் அண்மையில் ஒரு சமயம் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வேறுபாடு தெரியாமல் இந்தியா ஒரு தேசம் என்று வாதிட முன் வராதீர்கள். இந்தியா ஒரு தேசமாக இருக்க முயற்சிப்பதற்கு வேண்டுமானால் முயலுவோம்என சொல்லுங்கள்; முன்னணியில் வந்து நிற்கிறேன் என அவர் கூறிய தனை இந்தியின் மூலம் இந்தியாவைப் பெற நினைப்பவர்களால் புரிந்து கொள்வது சற்று சிரமமான செயல்தான்.

இந்திய தேசியம் என்ற புதிய ஆபரணத்துக்கு அவர்கள் பெற்றிருக்கும் பொருத்தமில்லாத உரைகல் இந்தி.

பழுதுபட்ட உரைகல் ஆபரணத்துக்கே ஆபத்தினைக் கொடுக்கிறது.

உரைகல்லினை குறை சொன்னால் அதன் விளைவாக ஆபரணத்தையா பழிக்கிறாய் என்ற கோபம் பிறக்கிறது.

தெரிந்தோ தெரியாமலோ மத்திய உள்துறை அமைச்சர் சவான் ஒரு மகத்தான ஒப்புதலை தெரு முனையில் அல்ல—மக்களவையில் கொடுத்திருக்கிறார்.

பெரும்பான்மையை வைத்து ஆட்சி மொழித் திருத்த மசோதாவினைச் சட்டமாக்கி வெற்றிப்பட்டயம் கட்டிக்கொண்ட அவர் மக்களவை விவாதத்தின்போது கூறிய வார்த்தைகள் இவை—

"சரித்திரத்தில் முதன் முறையாக இந்திக்கு இன்று ஆட்சி மொழி அந்தஸ்து வழங்கப்படுகிறது. இதுவரை என்றுமே இந்தியா முழுமையிலும் ஒரே மொழி ஆட்சி நடத்தியதில்லை.

வீரம்—நிதானம், தீவிரம்—பொறுமை ஆகிய எதிரெதிர் குணங்களுக்கும் ஒரே உருவாய் இருபதில் பெயர் பெற்ற மகாராட்டிரத்து சவான் தந்துள்ள இந்த ஒப்பத்தில் இந்தியாவில் எழுந்துள்ள தேசம்—தேசியம்—தேசிய மொழி ஆகிய பிரச்சனைகளுக்கான மூல காரணம் பொதிந்து கிடக்கிறது.

இந்திப் பிரச்சனையை வைத்து தேசம்–தேசியம்—தேசிய மொழி ஆகிய மூன்றுக்கும் இலக்கணம் வகுப்பவர்கள் ஒரு முறைக்குப் பல முறை சவானின் மேற்கண்ட வரிகளைப் படித்துப் பின்னர் சிந்தித்துச் செயல்படுவது நல்லது.

❀

25-ம் பக்கத் தொடர்ச்சி

"என்னப்பா குழம்பு கின்றாய்?
இன்னுமா புரிய வில்லை?
பொன்பொருள் யாவும் வெல்லும்
புனிதமாம் அமைதி காண
அன்றுநான் சென்றேன் அன்றோ?
அதற்குப்பின் ஒவ்வோர் ஊராய்ச்
சென்றேன்யான்...ஆங்கோர் ஊரில்...
சிற்றிடை நலம்இ ழந்து

புன்னகை யிழந்து, கொண்டைப்
பூக்களும் இழந்து, பூத்த
தன்னரும் இனிமைக் கோலம்
தவித்திடத் துணையி ழந்த
பொன்-இளம் விதவை நெற்றிப்
பொட்டிலே குங்கு மத்தால்
சின்னதோர் வட்டந் தன்னைத்
தீட்டினேன்—அமைதி கண்டேன்!"

என்றஅக் கலைஞன் மெல்ல
இருமினான்...தண்ணீ ரோடு
மென்னடை நடந்து வந்த
மங்கையைக் காட்டி, 'ஈதோ
என்மனம் அமைதி கொள்ள
வைத்தவள்!" என்றான்! நண்பன்
கண்களில் மகிழ்ச்சி துள்ளக்
கூறினான்... 'வாழ்க நன்றே!"

அவள் உணர்த்திய உண்மை

ஈரோடு ப. கதிரவன்

ஆன்று மாலை ஆறு மணிக்கு அலுவலக வேலைகளை முடித்துவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டேன். உணவு விடுதியொன்றில் சிற்றுண்டி அருந்திவிட்டு அன்றைய மாலைப் பதிப்புச் செய்தித்தாள் ஒன்றை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டேன். வீடு வெறிச் சோடிக் கிடந்தது. சாமான்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இரைந்து கிடந்தன. கூட்டப்படாததால் வீட்டில் குப்பை கூளங்கள் நிறைந்து கிடந்தன. சாய்வு நாற்காலி ஒன்றில் அமர்ந்து சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டு சுவைத்துப் புகை ஊதிக்கொண்டிருந்தேன்.

வீடு களையிழந்து கிடப்பதற்கு வேறு காரணம் ஒன்றுமில்லை. என் மனைவி பிள்ளைப் பேறுக்காகப் பிறந்தகம் சென்றுவிட்டதின் விளைவே எல்லாவற்றிற்கும் காரணம். அவள் இருக்கும்பொழுது நான் அலுவலகத்தில் இருந்து எப்பொழுது வருவேன் என்று ஆவலுடன் வழிமேல் விழி வைத்துக் காத்துக்கொண்டிருப்பாள். வந்ததும் வராததுமாகக் காபி கொண்டுவந்து கொடுத்துவிடுவாள். விழிகளினால் அவள் அழகை பருகிக் கொண்டே காபியைப் பருகுவேன். பின் சுவையான பேச்சில் நேரம் போவதே தெரியாது.

ஆனால் இன்றோ...? முற்றிலும் மாறுபட்ட நிலை. அவள் 'தாயகம்' சென்று சுமார் இரண்டு மாதங்கள் முடிகின்றன. என்றுலும் என்றுமில்லாமல் இன்றேனோ பழைய நினைவுகள் என்னைக் குழப்பின. மனமோ ஒரு நிலையில் இல்லாமல் அலை மோதியது. உடல் ஒருவித வெப்பத்தால் தகித்தது.

வாங்கி வந்திருந்த மாலைப் பத்திரிகையை விரித்துப் பார்த்தேன். கவர்ச்சியான படங்கள் கண்ணைக் கவர்ந்தன-கருத்தையும் இழுத்தன. அவைகளைப் பார்க்கப் பார்க்க என் மனதிற்குள் என்னவோ செய்தது. உடலெல்லாம் ஒருவித உணர்ச்சியால் தாக்கப்பட்டது போன்றதோர் உணர்வு ஏற்பட்டது. அப்பொழுது தான் நண்பன் மாணிக்கத்தின் சொற்கள் மனத்திரையில் மின்னி மறைந்தன. அவனது வேடிக்கைப் பேச்சும் விந்தையான போக்கும் நினைவிற்கு வந்தது. இன்பமாகப் பொழுது போக்குவதில் அவனுக்கு இணை அவனேதான்!

''ரஞ்சிதம்'' 'ரஞ்சிதம்'' என்று மாணிக்கம் அடிக்கடி சொல்லும் அந்தப் பெயர் திடீரென்று என் நினைவிற்கு வருவானேன்? மாணிக்கத்துடன் அவள் செல்லுவதை ஓரிரு முறையே பார்த்திருந்தாலும் அவளது எழில் வடிவம் இதயத்தில் பசுமையாக இருந்தது. ஏன் இனிமையாக இருந்தது என்றுகூடச் சொல்லலாம். ஆனால் இதுவரை அவளிடம் பேசியதுகூட இல்லை. என் கௌரவத்திற்குப் பங்கமேற்படும் என்று கருதி இதுவரை அவளிடம் நான் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை.

சிந்தனைச் சுழலில் சிக்கித்திணறினேன். என் கைக்கடிகாரம் மணி எட்டு என்பதைக் காட்டியது. வீட்டைப் பூட்டிவிட்டு கால் போன போக்கில் வீதியில் போய்க்கொண்டிருந்தேன். ''ஏனுங்க நின்னுக்கிட்டிருக்கிறீங்க உள்ளேவாங்களேன்'' பெண்குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். அந்தக் குரலுக்குரியவள் ரஞ்சிதம் என்பதை அறிந்தபோது அதிர்ச்சி அடைந்தேன். ''ஏன் தயங்கறீங்க? சும்மா வாங்க'' மீண்டும் வெளிவந்த அவள் குரல் என்னை நினைவுலகிற்குக் கொண்டு வந்தது. உள்ளே செல்ல மனம் விரும்பினாலும் 'ஏதோ ஒன்று' தடுத்தது. மனப்போராட்டத்தின் முடிவில் ஆசை வென்றது. எப்படியோ அவள் வீட்டிற்குள் சென்றேன்.

அவள் அவளுடைய தொழிலிலேயே மிகவும் கவனமாக இருந்தாள். என்னைக் கட்டிலில் உட்காரச்சொல்லி அவளும் நெருக்கமாகவே என்னருகில் உட்கார்ந்தாள். அவளுடைய கரங்கள் மிக உரிமையோடு என்னைத் தொட்டுத் தழுவின, எனக்கு வியர்த்துக் கொட்ட ஆரம்பித்தது. உடலெல்லாம் நடுங்கியது. ஏதோ மாபெரும் குற்றம் செய்வதுபோல் என் மனச்சாட்சி உறுத்தியது. யாருக்கோ துரோகம் செய்வதுபோல் உள்ளுணர்வு குத்திக்காட்டியது. என் அனுமதியைக்கூடக் கேட்காமல் என் 'பாக்கெட்'டிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை ரஞ்சிதம் எடுத்துக்கொண்டாள். என்னால் அப்போது எதுவும் பேசவோ செய்யவோ முடியவில்லை.

பின்னர் ஜன்னல்கள். கதவுகள் யாவும் மூடப்பட்டன. அப்போது ரஞ்சிதத்தைப் பார்க்கவே என் கண்கள் கூசின. திடீரென்று ஏனோ அவளுக்கு ''ஆளைப் பஞ்சம்'' வந்துவிட்டது. ''ஊம். நேரமாகிறது. வேறு யாராவது வருவார்கள். சீக்கிரம்.........'' அவள்துரிதப்படுத்தினாள். என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. கை கால்கள் நடுங்கின. பேசும் சக்தியை நா இழந்துவிட்டது. என் தடுமாற்றத்தைக் கண்ட அவள் ''நீங்கள் இந்த இடத்துக்குப் புதிதா'' என்றாள் 'ஆம்' என்பதுபோல் தலையை ஆட்டினேன். இங்கே பலபேர் வருவார்கள் போவார்கள். ஆனால் உங்களைப் போல் இதுவரை நான் யாரையும் கண்டதில்லை. அதனால்தான் நீங்கள் இவ்விடத்துக்குப் புதியவரா என்று கேட்டேன்'' எனக் கூறிச் சிரித்தாள். அவள் சிந்திய சிரிப்பை என்னால் ஏனோ ரசிக்க முடியவில்லை.

சிறிது நேரம் மௌனம் அவ்விடத்தை ஆட்சி புரிந்தது. ''நீயேன் இந்தத் தொழிலுக்கு வந்தாய்?'' மனதில் உறுதியை வரவழைத்துக் கொண்டு அவளிடம் கேட்டேவிட்டேன். எதிர் பாராத என் கேள்வியைக் கேட்டதும் அவள் முகம் ஏனோ ஒரு மாதிரியாக மாறியது. ''ரஞ்சிதம! நான் கேட்டது தப்புன்னா என்னை மன்னிச்சிடு'' என்னை அறியாமலே சொற்கள் வந்து விழுந்தன. அவள் வறட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தாள். கண்ணீர் முத்துக்கள் அவள் உடலில் பட்டுச் சிதறின.

• ''இதுவரை யாரும் கேட்காத கேள்வியை நீங்கள் கேட்டுவிட்டீர்கள். அவசியம் நான் பதில் சொல்லுகிறேன். மூன்றாண்டுகளுக்கு முன்பு எனக்கு வெகு விமரிசையாகத்தான் கல்யாணம் நடந்தது, ஊரே பொறாமைப்படும் அளவிற்கு நானும் என் கணவரும் வாழ்ந்தோம். அந்த இன்ப வாழ்வு இரண்டே மாதங்கள் தான். எதிர்பாராத கார் விபத்தில்

சிக்கி என் கணவர் பாதிக்கப்பட்டார். மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை அளித்த டாக்டர் ஒருநாள் 'வெடிகுண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டார். அதாவது தாம் பத்ய உரவு வைத்துக்கொள்ளும் "தகுதி"யை அவர் இழந்து விட்டாராம்.

மருத்துவ மனையிலே அவர் தனியாக வீட்டிலே நான். வேதனையின் விளிம்பிலே துயரத்தின்எல்லையிலே நான் நின்றேன். திருமணம் ஆகி இரண்டே மாதங்கள்தான் ஆகியிருந்தன, அந்த இரண்டு மாதங்களில் "வாழ்வின் சுவை"யை அறியத்தான் முடிந்ததே தவிர, முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. இளமையின் வேகம் என்னை எங்கெங்கெல்லாமோ இழுத்தது. பருவப் பசி என் பாதையையே மாற்றி விட்டது. ஆரம்பத்தில் ஆசையின் வேகத்தில் ஆகாத காரியத்தில் ஈடுபட்டேன், உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் நெறிதவறி நடந்தேன். நாளடைவில் அதுவே என் தொழிலாக மாறிவிட்டது. இப்போது நான் ஊர் அறிந்த......" கண்ணீர்க் கடலிலே அவள் மிதந்தாள். "விளையாட்டாக ஆரம்பித்தது இன்று வினையாகவே முடிந்து விட்டது" விம்மினாள் அவள்.

என் இதயத்தை யாரோ சாட்டையால் அடிப்பது போன்றிருந்தது. ஆசையின் வேகத்தில் ஆகாத காரியத்தில் ஈடுபட்டேன். உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் நெறிதவறி நடந்தேன். நாளடைவில் அதுவே என் தொழிலாக மாறி விட்டது" என்ற அவளுடைய சொற்கள் மீண்டும் மீண்டும் எதிரொலிப்பதுபோல் இருந்தது. அவள் கூற்று பெண்ணுக்கு மட்டுமின்றி ஆணுக்கும் கூடப் பொருந்துமல்லவா? என் இதயத்தில் கேள்விக்குறி பிறந்தது.

திடீரென்று எழுந்தேன். "ரஞ்சிதம் நான் போய் வருகிறேன்" எனக் கூறிப் புறப்பட ஆயத்தமானேன். அவள் திடுக்கிட்டாள் "இன்று வேறு எந்த வருமானமும் இல்லை. நீங்களும்......" அவள் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். உணர்ந்துகொண்ட நான். "ரஞ்சிதம் எனது பாக்கெட்டிலிருந்து நீ எடுத்த ஐந்து ரூபாயையும் நீயே வைத்துக்கொள். நான் வருகிறேன்" எனக்கூறிப் புறப்பட்டேன். அவளுக்கு ஏனோ திருப்தி இல்லை. மீண்டும் அந்த ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து என்னிடம் கொடுத்தாள். "பரவாயில்லை நீ யெனக்கு உணர்த்திய உண்மைக்காக இந்த ஐந்து ரூபாயையும் நீ வைத்துக்கொள்ளத்தான் வேண்டும்" என்று கூறிவிட்டு வெளியேறினேன். ஒன்றும் புரியாமல் அவள் நின்றாள். ஏதோ ஒன்றைப் புரிந்துகொண்டவனாக நான் வெளியேறினேன்.

வீதியில் நடந்துகொண்டிருந்தேன். 'ஆரம்பத்தில் ஆசையின் வேகத்தில் ஆகாத காரியத்தில் ஈடுபட்டேன். உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் நெறிதவறி நடந்தேன். ஆனால் நாளடைவில் அதுவே எனது தொழிலாக மாறி விட்டது" என்ற சொற்கள் என்னை ஈட்டியெனக் குத்தியது. ஏதோ குற்றம் செய்வதிலிருந்தும், துரோக மிழைப்பதிலிருந்தும் தப்பித்துக் கொண்ட உணர்வோடு வேகமாக நடந்தேன். அவள் உணர்த்திய உண்மையைப் புரிந்துகொண்ட தெளிவில் தெம்போடு வீடு நோக்கி நடந்தேன்!

●

கூட்டுறவே! நாட்டுயர்வு!!

பல்லவர் பெருமைக்கு, காஞ்சி கோயில்களும் மாமல்லபுரத்துச் சிற்பங்களும் எடுத்துக்காட்டாக விளங்குவதுபோன்று

கண்கவர் காஞ்சிபுரம் பட்டு சேலைகள், பாவாடை, ரவிக்கை ரகங்கள் தயார் செய்வதில் தலைசிறந்து விளங்குவது எங்கள்

ஸ்ரீ வரதராஜஸ்வாமி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம் லிட்., No. G. 2105

நெ. 81 & 82, காந்தி ரோட் காஞ்சிபுரம்-1.

தேவைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்!!

இங்ஙனம், தங்கள் அன்புள்ள

திரு. K. பலராம நாயுடு, உபதலைவர்.

திரு. S. வேலியப்பன், C. S. R.—செயலாளர்.

திரு. K. N. ராமுடு, தலைவர்.

நிர்வாகஸ்தர்கள்:

திரு. V. கிஷ்டப்ப நாயக்கர்

திரு. V. வீரராகவலு

திரு. B. N. எதிராஜன்

திரு. S. B. சீனிவாசன்

இது ஒரு மலர் கட்டுரை! பூ! இது கூடவா தெரியாது? மலரில் வந்திருப்பதினால் இது மலர் கட்டுரை தானே?' என்பீர்கள். அதுமட்டும் அல்ல—இது மலர்களைப் பற்றிய ஒரு கட்டுரை.

மலர் கட்டுரை என்று எழுதுவதா மலர்க் கட்டுரை என்று எழுதுவதா என்று கேட்கிறீர்களா? அது நீங்கள் என்ன பொருளில் எழுதுகிறீர்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது. பொருள் வேறுபாட்டைப் புலப்படுத்துவதற்குத்தான் சந்தியே தவிர—புலவர்களின் பொழுது போக்குக்காக அல்ல. 'மதுரை தீப்பற்றி எரிந்தது' என்றால் அங்கே 'த்' மிகாது—ஆனால் மதுரையின் தென்றல் என்று பொருள்பட ஒரு தொடர் எழுத வேண்டுமானால் சந்தி—மிகும். 'மதுரைத் தென்றல் வந்தது காண்' என்றுதான் எழுதவேண்டும்.

மலர் கட்டுரை—மலரும் கட்டுரை என்று பொருள் தரும்.

மலர் கட்டுரை—மலரைப் பற்றிய கட்டுரை, மலரால் எழுதப்பட்ட கட்டுரை. மலருக்கு எழுதிய கட்டுரை மலரில் இடம் பெறும் கட்டுரை என்று பல பொருள் படும்.

என்னமோ கட்டுரை எழுதுகின்றேன் என்று சொல்லி இலக்கணம் பேசத் தொடங்கிவிட்டேன் என்று நினைக்கவேண்டாம். இலக்கணம் மொழிக்குப் பாதுகாப்புச் செய்யும் அரணாக அமைந்துள்ளபோது அதை எப்படி விட்டுவிட முடியும்? நமக்குப் பெயர் தெரிகிறதோ இல்லையோ—நாம் விரும்பினாலும் வெறுத்தாலும் இலக்கணம் நம்மோடு — நம் மொழியோடு— இருந்துதான் தீரும்.

மலர் கட்டுரை—கட்டுரையை விட்டுத் தொலைப்போம்; மலரை எடுத்துக் கொள்வோம்;



மலர்ந்தது

மா.கி. தசரதன். எம்.ஏ.

என்ன மலர் எடுத்துக்கொள்வோம்? மல்லிகையா முல்லையா என்று கேட்காதீர்கள்.

பெயர்மலர்' எடுப்போமா. 'வினை மலர் எடுப்போமா என்றுதான் கேட்கிறேன். மலரிலே என்ன பெயர் மலர், வினை மலர் என்று திகைக்கின்றீர்களா? இல்லை நகைக்கின்றீர்களா?

'முல்லை மலர் கண்டேன்'

'முல்லை மலர்ந்து விட்டது'

இந்த இரண்டு தொடர்களிலும் மலர் என்ற சொல் வந்துள்ளது. முதலில் உள்ள தொடரில் 'முல்லை மலர்' எஃறும் இரண்டாவது தொடரில் 'மலர்ந்து' விட்டது என்றும் உள்ளது. முதலில் உள்ளது ஒரு பூவின் பெயர். அதனால் அது பெயர்ச் சொல்; இரண்டாவது உள்ளது அந்தப் பூ செய்த செயலை, (வினையை)ச் சொல்வது. அதனால் அது வினைச் சொல். அதைத்தான் பெயர் மலரா, வினைமலரா என்று கேட்டேன்!

நம் தமிழ் மொழியில் சில சொற்கள் இப்படிப் பெயராகவும் வினையாகவும் வருகின்றன.

'கையிலே என்ன கட்டு?'

'இவற்றை ஒன்றாகக் கட்டு'

இந்த இரண்டு தொடர்களில் கட்டு என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வந்துள்ளது. 'இந்தப் பூட்டு எடுத்து அந்த அறையைப் பூட்டு' என்ற தொடரில் பூட்டு என்ற சொல் அதுபோல் பெயராகவும் வினையாகவும் உள்ளது. 'பூ பூத்தது' என்பதும் காய் காய்க்கும் என்பதும் அப்படியே! ஆங்கிலம் போன்ற சில மொழிகளில் எந்தச் சொல்லையும் பெயராகவும் வினையாகவும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

பூ! இவ்வளவுதானா என்று தள்ளிவிட முடியாது இந்தப் பூவை! இது தமிழர் வாழ்வில் பெறாத இடமே இல்லை. பிறந்தது முதல் இறப்பதுவரை நம் வாழ்வில் பூ ஒரு சிறந்த இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறது.

ஆனால் பெண்களுக்கு அது உற்ற துணையாக இருந்து தொண்டு செய்கின்றதை நாட்டிலேயும் காண்கின்றோம்; புலவர்கள் ஏட்டிலேயும் வடித்திருக்கிறார்கள். ஒரு புலவர் — கோவூர் கிழார் என்று நினைவு — பெண்கள் பூ இல்லாமல் தலை முடித்துக்கொள்வதைக் கண்டு அதை ஒரு பெரிய குறையாக நாட்டு மன்னனிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறார். 'பாலில் குழவி அலறவும்........பெண்கள் பூவில் வறுந்தலை முடியவும். என்று அந்தப் புலவர், குழவி பால் இல்லாமல் அலறுவதையும் பெண்கள் பூ இல்லாமல் கூந்தல் முடிப்பதையும் ஒன்றாக வைத்து எண்ணுகின்றார். எல்லாப் புலவர்களுமே பெண்களை மலர்களுடன் ஒப்பிட்டுப் பாடியுள்ளனர்; தாமரை போன்ற முகம்; குவளை போன்ற கண்; எள் பூ போன்ற மூக்கு. என்று உவமை அமைத்து உவகை கொள்கிறார்கள். போதாதற்குப் பெண்களைப் 'பூங்கொடி' என்று வேறு வருணிக்கின்றனர்,

அதுமட்டுமோ! காதலனைக்காணாது வேதனையில் உழலும் பெண், வாட்டத்தினால் உடல் வாடிப் பொலிவிழந்து காணப்பட்டால் அப்போதும் பூதான் புலவர்கள் கண்ணில் படுகிறது. 'பாவம் இவள் பீர்க்கம் பூ போல் பொலிவிழந்துள்ளாளே' என்று இரக்கம் எழப் பாடுகின்றனர்!

மற்றவர்களையாவதுவிட்டு விடுங்கள்—இந்த வள்ளுவர் இருக்கிறாரே—ஆமாம் திருக்குறள் எழுதிய

அந்த வள்ளுவர் தான்!—அவர்கூட அல்லவா இந்தப் பூக்களைப் போற்றிக்கொள்ளுகின்றார்!

'மலர்மிசை ஏகினான்' என்று இறைவனைக் குறிப்பிடுகின்றார். மோந்தால் குழைந்துவிடும் 'அனிச்சம்' என்கிறார்; 'வெள்ளத்தனையது மலர் நீட்டம்' அதுபோல் மாந்தர் தம் உள்ளத்து அனையது உயர்வு என்கிறார்; கற்று உணர்ந்து பிறர்க்கு எடுத்து உரைக்கத் தெரியாதவனை மலர்ந்து வைத்தும் மணம் வீசாத மலர்க்கு ஒப்பானவன்' என்கிறார்; இதெல்லாம் கூடப் பெரிதில்லை —காதலையே அல்லவா அவர் மலருக்கு உவமித்து, ஏன் உயர்வு காட்டிக் கூறிவிட்டீரே!

'காலை அரும்பிப் பகல் எல்லாம் போது ஆகி மாலை மலரும் இந்நோய்' என்று காதலைப் படம் பிடித்துக் காட்டிவிட்டார்! அரும்பு, போது, மலர் என்று மலரின் வளர்ச்சியில் உள்ள மூன்று கட்டங்களையும் எடுத்துக் கூறிக் காதல் வாழ்வில் பெறத் தகும் இடத்தையும் விதத்தையும் நுட்பமாக உணர்த்திவிட்ட பெருமை அவருடையதே அல்லவா? காதலின் தன்மையை உள்ளபடி உணர்ந்து உணர்த்தவல்லார் அல்லரோ அவர்! 'மலரினும் மெல்லிது காமம்; சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்' என்று காதலின் நுட்பத்தை 'நயம்பட' உரைத்துவிட்டார் நாயனார்.

பழமொழிகளில்கூட மலர் இடம் பெற்றிருக்கிற பெற்றியைக் காண்கிறோம்; பொன்வைக்கும் இடத்தில் பூ வைத்து வணங்குகின்றேன்—போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோடு என்றெல்லாம் பூக்கள் தம் மணம் பரப்பக் காண்கிறோம்.

அரிய தத்துவங்களைக்கூட நம் புலவர்கள் இப் பூக்களின் துணையால் உணர்த்தும் திறம் வியத்தற்கு உரியது.

சிலர் சொல்லமாட்டார்கள், ஆனால் செய்வார்கள்;
சிலர் சொல்வார்கள் செய்வார்கள்;
சிலர் சொல்வார்கள் ஆனால் செய்யமாட்டார்கள்;

இப்படி மக்களுள் மூன்றுவகை இருப்பதைக் கண்ட புலவர் ஒருவர் இவர்களைப் படம் பிடித்துக்காட்ட பலா, மா, பாதிரி என்ற மூன்று மரங்களைப் பயன்படுத்திக்கொள்ளுகின்றார்.

பலா மரம் பூக்காது; ஆனால் காய்க்கும்.
(சொல்லாமல் செய்பவர்கள்)
மாமரம் பூக்கும் பின்னர்—காய்க்கும்.
(சொல்லிச் செய்வர்)
பாதிரிமரம் பூக்கும்—ஆனால் காய்க்காது.
(சொல்வார்கள் ஆனால் செய்யமாட்டார்கள்)

பலா, மா, பாதிரியைப் பார்' என்றார் புலவர்!

சிலர் சிரிக்கச் சிரிக்கப் பேசுவர்; ஆனால் பின்னர் அழச் செய்துவிடுவர். இன்பம் துன்பம் ஆகிவிடுவது உண்டு. இன்பத்திலே துன்பம் பொதிந்து கிடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும் நாம். இல்லையானால் தொல்லைதான்; இனிது என ஒன்றை நம்புவோம் அது இன்னாது ஆகித் துன்பம் தரும். பூதானே என்று இருந்துவிடக் கூடாது, அதுவே பின்னர் முள் ஆகிவிடக் கூடும்; கட்கு இன் புது புலர் முட்பயந்தாங்கு (கண்ணுக்கு இனிய புது மலர் முள் பயந்ததைப் போல) என்று ஒரு புலவர் எச்சரிக்கை செய்கிறார்.

பாவம் பூக்கள்! அவை அரும்புகின்றன; போதாகின்றன; மலர்கின்றன; மணம் பரப்புகின்றன மறுநாள் வாடி, வற்றி, வீழ்ந்துவிடுகின்றன. மண்ணாகிவிடுகின்றன.

தமக்கென அவை வாழ்வது இல்லை; பிறர்க்கெனவே வாழ்கின்றன.

கருத்துப் பூக்களைத் தொகுத்துக் கட்டுரை மாலை தொடுக்க நினைத்தேன்; அது எப்படி ஆகியிருக்கிறதோ —எனக்குத் தெரியாது—ஆனால், நீங்கள் காலிலே போட்டு மிதித்துவிட வேண்டாம். ●

போன்: 202 தந்தி: "காமாட்சிசில்க்"

4—1—68 லிருந்து 17—1—68 வரை விசேஷ ரிபேட் 15%

கைதேர்ந்த நெசவாளர்களைக்கொண்டு, உயர்ந்த ரக பட்டு சரிகையினால்
தயாரிக்கப்பட்ட காஞ்சிபுரம் பட்டு சரிகை சேலைகள்,
பாவாடைகள், சோளிகள் நியாய விலைக்கு
கிடைக்குமிடம்.

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன்
பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம்

168-A, காந்தி ரோடு, :: காஞ்சிபுரம்.

E. ராமமூர்த்தி, B.Com.,
கூட்டுறவு சப்ரிஜிஸ்தரார்,
காரியதரிசி.

K. S. பார்த்தசாரதி,
தலைவர்.

Phone: 20119 Grams: DYECOLD

CHIKA LTD.,

52\54, Rattan Bazar, Madras-3.

(Head Office: BOMBAY-4)

★

Sole Distributors in India For:

1. **Farben Fabriken Bayer A.G., West Germany.**
2. **Chemische Werke Huls A.G., West Germany.**
3. **Colourchem Ltd., Bombay.**
4. **Indian Dyestuff Industries Ltd., Bombay.**
5. **Dai-ichi Karkaria pvt. Ltd., Bombay.**
6. **Indian Organic Chemicals Ltd., Bombay.**

"பேயர்" (ஜெர்மனி), "கலர்கெம்" (பம்பாய்) மற்றும்
"ஐ. டி. ஐ." (பம்பாய்) சாயங்களுக்கு
பிரத்தியேக விற்பனையாளர்கள்.

With compliments of:

Tel: 25063

M/s Mount Mechanical Works Private Ltd.

33, Errabalu Chetty Street, MADRAS-1.

FACTORY AT:

No. 4, Choolaimedu High Road,
Kodambakkam,
Madras-24.

*

No. 5, Railway Station Road,
St. Thomas Mount,
Madras-16.

MANUFACTURERERS OF:

'DAVLIS' Trailers From 2 Tons Capacity Onwards.

DISTRIBUTORS OF:

'HINDUSTAN' Tractors,
'MITTAL' Implements, and
'COMET' Diesel Engines.

அப்போதே சொன்னேன்

அண்ணாதுரை

"அப்போதே சொன்னேன், கவனமிருக்கிறதல்லவா? அந்தப்பயல் உருப்படமாட்டான் என்று தெரிந்துசொன்னேன். விளையும் பயிர் முளையிலே என்று பெரியவர்கள் வீணுக்கா சொல்லி வைத்தார்கள்!" என்று ஒவ்வொரு நாளும் நடைபெறும் குளத்தங்கரை மாநாட்டில், கொத்தனார் வேலையிலிருந்து வளர்ந்து 'காண்ட்ராக்டர்' ஆகி, விட்ட குத்தாலலிங்கம் அன்று கூறிவிட்டு, உடன் இருந்தவர்களைக் கெம்பீரமாகப் பார்த்தார். உடன் இருந்தவர்கள் மூவர் ஒருவர் குத்தாலலிங்கம் தலையில் எப்படியாவது கரம்பு நிலத்தைக் கட்டிவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த கலியபெருமாள் வாழ்ந்து கெட்டவர்; மற்றொருவர் தமது மகளை மருமகளாகக் கொள்ள குத்தாலலிங்கம் திட்டமிட்டுக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு பூரித்துப் போயிருந்த பொன்னம்பலம்; மூன்றாவது பேர்வழி மாரியம்மன் கோயில் பரம்பரை பூசாரி. ஒவ்வொரு நாளும்—அதாவது குத்தாலலிங்கத்துக்கு வசதியும் ஒய்வும் கிடைத்திடும் நாள்-குளத்தங்கரையில் அவர்கள் கூடுவதும், தங்கள் தீரனூர் புள்ளிகளைப்பற்றிப் பேசுவதும் வாடிக்கை.

குத்தாலலிங்கம் கொத்தனாராக இருந்த வரையில், மற்றவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கும் நிலை! காண்ட்ராக்டர் ஆன பிறகு, அவர் பேசுபவராகவும் மற்றவர்கள் கேட்டுக் கொள்பவர்களாகவும் நிலைமை மாறிவிட்டது.

தீரனூரில் நாட்டாண்மை வீட்டு 'பெரிய ஐயா' காலமாகிவிட்ட பிறகு, அந்தக் குடும்பத்தைப்பற்றியும் குளத்தங்கரை மாநாட்டிலே பேச்சு அடிபட ஆரம்பித்தது. பெரிய ஐயா இருந்த வரையில் 'அந்தப்பேச்சு' நமக்கு எதற்கு என்று ஒதுக்கி விடுவார்கள்; அத்தனை மதிப்புப் பெற்ற குடும்பம்.

பெரிய ஐயா காலமாகி விட்ட பிறகு 'காவேரி' அம்மா எவ்வளவோ கஷ்டப்பட்டு தன் இரண்டு பிள்ளைகளையும் ஒரு பெண்ணையும் நல்ல முறையிலே வளர்த்து வந்தார்கள்.

பட்ட மரம் துளிர்ப்பது போல, இந்த இரண்டு மகன்களும் அந்தக் குடும்பத்தை மறுபடியும் வளமானதாக்குவார்கள், நாட்டாண்மையை நடத்திச் செல்லுவார்கள் என்ற நம்பிக்கை பலருக்கு. இரண்டு பிள்ளைகளில் மூத்தவன் சாத்தப்பன்; துடிதுடிப்பானவன்; அவன் தம்பி தங்கப்பன்; அமைதியானவன்; பெண்ணின் பெயர் வடிவு; அழகி.

சாத்தப்பன் சுறுசுறுப்பாகவும் யாரிடமும் கலகலப்பாகப் பழகுவதையும் கண்டவர்கள், அவன் விரைவில் நல்ல முறையில் படித்துப் பட்டம் பெற்று முன்னுக்கு வருவான் என்று எண்ணிக் கொண்டனர்; பள்ளிக்கூடத்திலேயும் அவனுக்குத்தான் முதலிடம்! தங்கப்பனுக்குக் கிடைத்த மதிப்பே, அவன் சாத்தப்பன் தம்பி என்பதாலேதான்!!

* * *

எதைப்பற்றியும் நுணுகி ஆராய்ந்து உண்மையைக் கண்டறிந்து கூறத்தக்கவர் என்ற பெயர் குத்தாலலிங்கத்துக்கு. சொத்து சேரச் சேர வளர்ந்து கொண்டிருந்தது. குத்தாலம் சொன்னா சொன்னபடி நடக்கும் என்றும் எப்போதோ நடக்கப் போவதைக் குத்தாலம் முன் கூட்டியே அறிந்து சொல்லுவார், அந்தத் திறமை உண்டு என்றும் பேசிக் கொள்

வார்கள். அவனுடைய முப்பாட்டனார் பெரிய ஆரூடக்காரர் தெரியுமா! அந்த 'அம்சம்' துளியாவது இருக்கத்தானே செய்யும் என்று ஆதாரம் கூடக் காட்டினார்கள்.

ஊரிலே பலரும் சாத்தப்பனைப் பற்றிப் பாராட்டிப் பேசிய போது, குத்தாலம் மட்டும் தலையை அசைத்தபடி, "என் மனதிலே பட்டதைச் சொல்றேன்...அந்தப் பய சாத்தப்பன் ஒழுங்கா இருக்கப்போவதில்லை. போகப் போகத் தெரியும் பாருங்க -" என்று சொல்லி வைத்தார்.

அந்தப் பேச்சு நடந்து மூன்று வருஷங்களுக்குப் பிறகுதான் அன்றைய குளத்தங்கரை மாநாட்டில் குத்தாலலிங்கம் வெற்றிப் புன் சிரிப்புடன் சொன்னார், "நான் அப்போதே சொன்னேனே, கவனமிருக்கிறதா?" என்று. அன்று அந்தப் பேச்சு வந்ததற்குக் காரணம், தாழைப்பட்டி மிட்டாதாரர் மகள் தருமாம்பாளை, தங்கப்பனுக்குத் தருவது என்று நிச்சயித்துத் திருமணத்துக்கு நாள் குறித்து விட்டார்கள் என்ற செய்தி கிடைத்தது தான்.

தாழைப்பட்டியார் தன் மகளை சாத்தப்பனுக்குத் தான் கொடுக்க விரும்புகிறார் என்று ஊரே பேசிக் கொண்டது. சாத்தப்பன் தங்கப்பன் இருவருமே தாழைப்பட்டியை அடுத்த புது நகரக் கல்லூரியில்தான் படித்துக் கொண்டிருந்தார்கள். தர்மாவும் கல்லூரி மாணவி.

சாத்தப்பனும் தர்மாவும் ஒன்றாக உலவுவதும் உல்லாசமாகப் பேசுவதும், பூப்பந்தாட்டம் ஆடுவதும் கண்டவர்கள், பொருத்தமான ஜோடி என்றே கூறினார்கள் தாழைப்பட்டியாரும் தமக்கு ஒரு தடையும் இல்லை என்பதை 'ஜாடை மாடை'யாகத் தெரிவித்திருந்தார்.

ஊரெல்லாம் எதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களோ அது நடைபெறவில்லை; சாத்தப்பனுக்கு என்று எந்தத் தருமாம்பாளைக் குறிப்பிட்டுக் கூறிவந்தார்களோ, அந்தப் பெண் தங்கப்பனுக்கு என்று நிச்சயம் செய்யப்பட்டுவிட்டது. அதிர்ச்சி பலருக்கு, சாத்தப்பன்? அவன் ஊரில் இருந்தால்தான் தானே அவன் மனநிலை என்ன என்று தெரிந்துகொள்ள.

கல்லூரியில் திறமைமிக்க மாணவனாகப் படித்துக் கொண்டிருந்த சாத்தப்பன், என்ன காரணத்தினாலோ, கல்லூரி முதல்வரிடம் கடுமையாகத் தகராறிட்டுக் கொண்டான்; அதன் காரணமாகக் கல்லூரியை விட்டு நீக்கப்பட்டான்; ஊரை விட்டே ஒருவருக்கும் சொல்லிக் கொள்ளாமல் ஓடிவிட்டான். ஊரைவிட்டுப் போகுமுன்பு தங்கப்பனைத் தனியாகச் சந்தித்து அன்புடன் அணைத்துக்கொண்டு "தம்பி! குடும்பப் பொறுப்பு இனி உன்னுடையது" என்று உருக்கமாகச் சொன்னதாகப் பேச்சு உலவிற்று. பொதுவாக ஊரிலே பரவிவிட்ட பேச்சோ, 'குடும்பத்திற்கே தலை இறக்கமான காரியத்தைச் செய்துவிட்டு சாத்தப்பன் ஓடிவிட்டான்" என்பது.

ஊரைவிட்டு ஓடாமல், எப்படி இங்கே இருப்பான். அவள் போட்ட சொக்குப்பொடி இலேசானதா?—என்று ஒரு பேச்சு கிளம்பிற்று. அடியோடு ஆதாரமற்ற பேச்சு அல்ல அது.

'நான் கண்ணால் பார்த்தேன். அவளோடு சாத்தப்பன் ஆடிப்பாடி அலைந்ததை" என்று தர்மாம்பாளே கூறிய பிறகு சாத்தப்பன் மீது வந்த புகாருக்கு ஆதாரமே இல்லை என்று எப்படிக் கூறிவிட முடியும்.

மேலும் சாத்தப்பன் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஊரைவிட்டு ஓடிவிட்டதற்கும் 'ரசவாதம்' ரங்கலால் தன் தங்கை மங்காவையும் அழைத்துக் கொண்டு அதே 'ரயிலில்' பயணமானதையும், எப்படி ஒன்றாக இணைத்துப் பார்க்காமல் இருக்க முடியும்.

வழக்கமாக விடுமுறை நாட்களை தாழைப்பட்டி மாளிகையில் கழித்திடும் வாடிக்கையை மாற்றிவிட்டு, தம்பி தங்கப்பனை மட்டும் போகச் சொல்லி விட்டு, சாத்தப்பன் ரங்கலால் ஆராய்ச்சிக் கூடத்தில் தங்கிவிட்டது, ஆராய்ச்சிக்காகவா, அல்லது மைக் கண்ணி என்று கல்லூரி மாணவர்களால் செல்லச் பெயரிடப்பட்ட மங்காவுக்காகவா!

இவ்விதமாகப் பலவிதமான பேச்சு.

சாத்தப்பன் வலையிலே விழுந்திருந்தால் என் மகள் கதி என்ன ஆகி இருக்கும், நல்ல வேளை பயல் ஓடிவிட்டான், இனி தங்கப்பனே என் மருமகன் என்று தாழைப்பட்டியார் தெரிவித்து விட்டார். மகனுக்குப் பெரிய இடத்துச்சம்பந்தம் கிடைப்பதிலே 'அம்மாவுக்கு' மகிழ்ச்சிதான் என்றாலும், மூத்தவன் இப்படி ஆகிவிட்டானே, குடும்பத்துக்குக் கெட்ட பெயர் கொண்டு வந்து விட்டானே என்பதை எண்ணி எண்ணிக் குமுறினார்கள்.

அந்த நிலையில்தான் குத்தாலம் கூறினார் "அப்போதே நான் சொன்னேனல்லவா" என்று.

இவ்விதமெல்லாம் நடக்கும் என்று அவர் விவரம் ஏதும் சொல்லவில்லை; ஆனால் தங்கப்பனுக்குத்தான் நல்ல எதிர் காலம் இருக்கும், சாத்தப்பன் 'சுழி' நன்றாக இல்லை என்று பொதுப்படையாகச் சொல்லி வைத்தார். பார்க்கப்போனால் அவர் சொன்னது போலவே நடந்து விட்டது; சாத்தப்பன் எவள் பின்னோடோ ஓடிவிட்டான்; தங்கப்பன் தாழைப்பட்டியாரின் மருமகன் ஆகும் நிலையைப் பெற்றான்.

கல்லூரியில் புதிதாக ஒரு மண்டபம் கட்டும் 'காண்ட்ராக்டு' கிடைக்காது போனதற்குக் காரணம் சாத்தப்பன் என்றோர் சந்தேகம் குத்தாலத்துக்கு. ஆதாரமற்ற சந்தேகம். காண்ட்ராக்ட் குத்தாலத்துக்குக் கிடைக்கக் கூடாது என்று கூட சாத்தப்பன் நினைக்கவில்லை. கல்லூரி முதல்வரிடம் தனியாகப் பேசி காண்ட்ராக்ட் 'தொகை' எந்த அளவு இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார் என்று அறிந்து கூறும்படி குத்தாலம் கேட்டுக் கொண்டார்; சாத்தப்பன் தன்னால் முடியாது என்றும், அது முறையல்ல என்றும் சொல்லி விட்டான்.

இந்த விரோதத்துக்கும் தன் 'கணிப்புக்கும்' சம்பந்தம் இல்லை என்று குத்தாலம் கூறிவிட்ட பிறகு, மறுப்புப் பேசுவார் யார், குளத்தங்கரை மாநாட்டில்!

* * *

ஆண்டுகள் மூன்று உருண்டோடின; குளத்தங்கரை மாநாடு வழக்கம் போல நடைபெற்று வந்தது; குத்தாலலிங்கமே தலைமை; மற்றவர்களிலே மட்டும் மாற்றம் ஏற்பட்டு விட்டது; சம்பந்தியாகி விட்ட பொன்னம்பலம் வேறு வேலைகளைக் கவனிக்கலானார்; கரம்பு நிலத்தை விற்க முடியாத கோபத்தில் கலியப் பெருமாள் மாநாட்டை வெறுத்து விட்டார்; மாரியம்மன் கோயில் பூசாரி வழக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை;

செங்கல் சூளை சின்னப்பனும், மரக்கடை மகமதும் புதிய அங்கத்தினர்களாகி விட்டனர்.

* * *

தங்கப்பன் வக்கீலாகி, தர்முவுடன் திருச்சிராப்பள்ளி நகரில், தாழைப்பட்டியார் வாங்கிக் கொடுத்த மாடிக் கட்டிடத்தில் வசித்துக் கொண்டிருந்தார். தாழைப்பட்டியாரின் மருமகப்பிள்ளை என்பதாலே, கட்சிக்காரர்கள் வந்து குவிவார்களா! கோர்ட்டிலே வக்கீலுடைய திறமை எப்படி என்பதைப் பார்த்துத் தானே! வழக்கறிஞருக்கு வருமானம் கட்டையாகவே இருந்தது. ஆனால் அவருக்காகத் திறமையாக வாதாடி தருமு தகப்பனாரிடமிருந்து தாராளமாகப் பணம் பெற்று வந்ததால், குடும்பம் வசதியாக நடந்து வந்தது,

* * *

"தங்கப்பன் கோர்ட்டிலே வாய் திறப்பதே இல்லை தெரியுமா. வக்கீல் வேலைக்கே அவன் லாயக்கில்லை. எனக்கு அப்போதே தெரியும். நான் அப்போதே சொன்னேனே. தங்கப்பன் திறமைசாலி அல்ல என்பதாக, கவனமிருக்கிறதா?" என்று கேட்டார் குத்தாலலிங்கம்.

சாத்தப்பன் மூலமாக கல்லூரி காண்ட்ராக்ட்டை முடித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் சாத்தப்பனிடம் பழகி வந்தபோது குத்தாலம், சாத்தப்பன் திறமைசாலி, தங்கப்பன் ஒரு காரியத்திலும் திறமை பெறமாட்டான் என்று கூறியது உண்மை...... மாரிகோயில் பூசாரிக்கு அது நினைவில் இருந்தது. "ஆமாம்! அப்போதே சொன்னார். தங்கப்பன் திறமைசாலியாக மாட்டான் என்பதை" என்று கூறி மற்றவர்களின் பாராட்டுதலை வாங்கித்தந்தான் குத்தாலத்துக்கு. மாரி கோயில் பூசாரியின் அதிகாரத்தைக் குறைத்து விடவேண்டுமென்று எவனெவனோ எழுதிப் போட்ட 'மொட்டை' பெட்டிஷனை ஒன்றுமில்லாமல் செய்வதாக வாக்களித்திருக்கிறார் குத்தாலம்! பூசாரி குத்தாலத்தைப் பூசை செய்து தானே ஆகவேண்டும், செய்தான்.

* * *

அந்த வருஷம் வடிவுக்கு நல்லபடி திருமணமாயிற்று; தாழைப்பட்டியார் ஏற்பாடுதான்; மாப்பிள்ளை சப்-இன்ஸ்பெக்டர்; சென்னை. வழக்கப்படி கண்ணைக் கசக்கியாயிற்று, வாரம் தவறாமல் கடிதம் போடு என்று புத்தி சொல்லியாயிற்று என் கண் போல மாப்பிள்ளே! என்று கெஞ்சியாயிற்று, வடிவு சென்னை சென்றாகி விட்டது. அந்தத் திருமணத்திற்கும் சாத்தப்பன் வரவில்லை; இருக்கும் இடம் இன்னது என்றுகூட எவருக்கும் தெரியவில்லை.

* * *

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஓர் நாள், வழக்கப்படி மாநாடு குளக்கரையில். தொடர்ந்து மூன்று காண்ட்ராக்டுகளில் நஷ்டம் குத்தாலத்துக்கு; சின்னப்பன் யந்திரச்சூளை அமைத்து வளர்ந்து விட்டிருந்தான். அவனுக்கே தலைமைப்பதவி. மரக்கடைமகமது ஆள் பார்த்துக் கொண்டிருந்தார் முதல் போட்டு வியாபாரத்தைப் பெரிதாக்க. மாரி கோயில் பூசாரி, கோயில்களிலே ஆடு வெட்டக்கூடாது கோழி அறுக்கக் கூடாது என்று பிரசாரம் செய்தவர்களின் கூட்டத்தில் ஆட்களை ஏவிக் கலகம் செய்ததாகத் தொடுக்கப்பட்ட வழக்குத் தொல்லையில் சிக்கிச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

புத்தம் புதிய படகு மோட்டார், ஊருக்குள்ளே செல்லக்கண்டு, புதுத்தகவல் ஏதோ கிடைக்க இருக்கிறது என்ற ஆர்வத்துடன், மகாநாட்டை அவசர அவசரமாகக் கலைத்துவிட்டு குத்தாலலிங்கம் ஊருக்குள் சென்றார்.

* * *

சாத்தப்பன் ஊரைவிட்டுச் சென்றுவிட்ட நாள் முதலாகவே காவேரி அம்மாளின் மனம் நொந்து விட்டது. தங்கப்பன் தாழைப்பட்டியாரின் மருமகனான போதும் வழக்கறிஞரான போதும், மகள் வடிவுக்கு நல்ல மாப்பிள்ளை கிடைத்த போதும், நொந்து கிடந்த மனதுக்குச் சிறிது ஆறுதல் கிடைத்தது என்ற போதிலும் சாத்தப்பனைப் பற்றிய நினைவு அவர்கள் மனதைவிட்டு அகல மறுத்தது. தாய் உள்ளத்தின் தனித் தன்மைக்கு நிகராக வேறு எதுவும் இருக்க முடியாதே.

குடும்பத்தை மறந்து, பெற்ற தாயை மறந்து எவளுடனோ சென்றுவிடத் துணிந்தவன் முகத்தைக்கூட நான் பார்க்கமாட்டேன் என்று பலமுறைகுமுறினார் காவேரி அம்மாள். ஆனால் அவன்மீது மூண்ட கோபத்தைவிட அவன் என்ன ஆனானோ, எங்கு சென்றானோ, என்னென்ன இன்னலுக்கு ஆளானானோ என்ற வேதனைதான் அதிகமாக வளரலாயிற்று.

பெற்ற தாயையும் மறந்துவிடத் துணிந்தானே என்று எண்ணியபோது மூண்ட கோபத்தைக்கூடத் தாங்கிக்கொள்ள முடிந்தது, ஆனால் பெற்ற தாயை மறந்துவிட்டாகிலும் ஊரைவிட்டே போய்விட வேண்டும் என்ற அளவுக்கு அவன் மனதிலே எதனாலே வெறுப்பு ஏற்பட்டது என்பதை எண்ணிடும் போது பிறிட்டுக்கொண்டு கிளம்பிய வேதனையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

காவேரிக்கு என்ன! மணி மணியாக இரண்டுபிள்ளைகள்! ஒருவனை வக்கீல் வேலைக்கும், மற்றொருவனை டாக்டர் வேலைக்கும் படிக்கவைக்க ஏற்பாடாகிறது. நாட்டாண்மைக்காரர் இருந்தபோது இருந்ததைக்காட்டிலும் செல்வாக்கு எந்தக் குடும்பத்துக்கு வளரும் என்று நல்லவர்கள் பேசியதைக் காதாரக் கேட்டுக் கேட்டுப் பூரித்திருந்தாள். இடிவிழுவது போன்ற செய்தி அல்லவா கிளம்பித்தாக்கிற்று சாத்தப்பன் எங்கோ சென்றுவிட்டான்என்று.

தம்பி! சாத்தப்பன் இதுபோல ஏதாவது விபரீதமாகச் செய்வான் என்று உனக்கு ஏதாவது அறிகுறி தெரிந்ததா என்று கேட்டதற்குத் தங்கப்பன் சரியான பதிலேதும் கூறவில்லை. பாவம்! அண்ணன் இப்படிச் செய்துவிட்டானே என்ற வேதனையில் அவனால் எதுவும் பேசமுடியவில்லை என்று எண்ணம்கொண்ட காவேரி தன் வேதனையை அடக்கிக்கொண்டதுடன், தங்கப்பனுக்கு ஆறுதல் கூறும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டிவந்தது. எதையும் தாங்கிக்கொள்ளத்தானே பெண் ஜென்மம் என்று காவேரி அம்மாள், வீட்டு வேலை செய்ப்வனிட ் கூறும்போது கண்களில் நீர் பொல பொலவென உதிர்ந்தது.

உன்பேரிலே உயிர் தங்க ! சாத்தப்பனுக்கு! ஒரு வேளை நீ சரியாகச் சாப்பிடாவிட்டால் உடம்புக்கு என்ன? என்ன? என்றுகேட்டுக்கேட்டுத் துடிதுடிப்பான். உன்னை விட்டுப் பிரிய எப்படித்தான் மனம் வந்ததோ, தெரியவில்லையே என்று காவேரி அம்மாள் கூறி உருகுவார்கள். அண்ணன் போக்கே ஒரு தனிதினுசு, தெரிந்ததுதானே! என்று தங்கப்பன் சொன்னபோது காவேரி அம்மாள். இதென்ன கூடப் பிறந்தவன் என்ற பாசம் துளியும் இல்லாமல் பேசுகிறானே என்று வருத்தப்பட்டார்கள். ஆனால் மறுகணம், நம்முடைய வேதனையைக் குறைக்கத்தான் தங்கப்பன் இதுபோலப் பேசுகிறான் என்று கருதி ஆறுதலடைந்தார்கள்.

காதல் என்பது பற்றி கவிகள் வர்ணனை தரும்போது வசீகரமாகத்தான் இருக்கிறது; ஆனால் அந்த பாழாய்ப் போன காதல் ஒரு குடும்பத்தை என்ன பாடுபடுத்தி விட்டது பார்த்தாயா! குடும்ப பாரத்தையே தாங்கக் கூடியவனாகத்தான் இருந்தான் சாத்தப்பன். ஆனால் ஒரு மைவிழியாளின் மையலில் சிக்கியதும் பெற்ற தாயையும் துடிதுடிக்கச் செய்துவிடத் துணிந்து விட்டான். இதைப் பார்த்தபிறகாவது காதல் கீதல் என்றெல்லாம் உளறிக்கொட்டிக்கொண்டிருக்கக்கூடாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டாமா? என்று காதற் கலியாணம் செய்துகொள்ள உறுதிதெரிவிக்கும் வாலிபர்களை மடக்கி அடக்கமுனைந்தனர் பெற்றோர்.

ஒரு வார்த்தை என்னிடம் அவன் சொன்னதில்லையே, தனக்கு ஒரு பெண்ணிடம் விருப்பம் இருப்பதாக. அவள் எந்த ஜாதியாக இருந்தாலும். என் மகனுடைய மனதுக்குப் பிடித்தவள் என்றாகிவிட்டால், நானா குறுக்கே நிற்பேன்? எனக்கு ஜாதிகள் வேண்டுமா வேண்டாமா, நியாயமா அல்லவா? காலத்திற்கு ஏற்றதா இல்லையா என்பதுபற்றி ஏதும்தெரியாது. ஆனால் மகன் வேண்டுமா வேண்டாமா மகன் மனமகிழ்ச்சியுடன் இருக்கவேண்டுமா வேண்டாமா என்று கேட்டால் தட்டாமல் தயங்காமல் பதில் சொல்லுவேனே, எனக்கு என் மகன்தான் வேண்டும் என்று. என்னிடம் துளிகூட தன் எண்ணம்பற்றிச் சொல்லவில்லையே ஏன்...?

தங்கப்பா! ஏன் உன் அண்ணன் அந்தப் பெண்ணோடு ஊரைவிட்டுப் போய்விட்டான்தெரியுமா? குடும்பம் கெடக்கூடாது; நாமெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான். ஏன் அவ்விதம் சொல்லுகிறேன் என்று கேட்பாய். என் மகனுடைய மனம் எனக்குத் தெரியும். அவன் எப்படியோ ஒருவளிடம் பாசம் கொண்டுவிட்டான். என்னகுலமோ என்ன நிலையோ...அவளை என் மருமகளாக்கிக்கொள்ள என் மனம் இடம் தராது என்று எண்ணித் திகில் அடைந்திருக்கவேண்டும், முதலில். பிறகு என்னைச் சம்மதிக்கச் செய்தாலும், 'தகாத' திருமணம் செய்து கொண்டவன் குடும்பம் என்பதால், உனக்குத் தக்க இடத்தில் பெண் கிடைக்காது என்று எண்ணி இருக்கிறான்; வடிவுக்கு ஏற்ற மணவாளன் கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்று எண்ணிஇருக்கிறான். நம்மாலே குடும்பத்திற்கு இழிவும் இடரும் வரவிடக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறான்...அதனால்தான், என்னைச் சுற்றிச்சுற்றி வட்டமிட்டு. அம்மா! அம்மா! அம்மா! என்று பாசம் பொழிந்துகொண்டிருந்த என் மகன், என்னையே மறந்துவிடத் துணிந்தான்...நீ வாழ, வடிவு வாழ, குடும்பம் வாழ, எப்போதுமே தியாக உள்ளம் அவனுக்கு... தன்னைப் பற்றிய நினைப்பைவிட மற்றவர்களின் நலனைப் பற்றியநினைப்பே அதிகம் அவனுக்கு. என்றெல்லாம் காவேரி அம்மாள் கசிந்துருகிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது தருமாம்பாள் குறுக்கிட்டு. "அத்தே! அவர் பரீட்சை எழுதத் தயாராகிக்கொண்டிருக்கும்போது, மனதைக் குழப்பிவிட்டுவிடாதீர்கள்" என்று சொன்னாள்; சாதாரணமான முறையில்தான். ஆனால் காவேரி அம்மாளின் நெஞ்சிலே ஒரு சம்மட்டி அடி விழுந்தது போலிருந்தது. எனக்கு இரண்டு பிள்ளைகள் ஒருவன் எங்கோ கண்காணா இடம் சென்றுவிட்டான்; மற்றவனை இவள் தன்உடைமை ஆக்கிக்கொண்டுவிட்டாள்; இனி எனக்கென்று யார்...இரண்டு பிள்ளைகளுமே எனக்காக இல்லையா... பெற்று வளர்த்து மற்றவர்களிடம் ஒப்படைத்துவிடத்தானா பிள்ளைகள்...! என்றெல்லாம் எண்ணி வேதனை அதிகமாகி படுத்தபடுக்கையாகி விட்டிருந்தார்கள். டாக்டர்கள் கவலைக்கிடமான நிலைமை என்று தெரிவித்தது கேட்டு, திருச்சியிலிருந்து மனைவியுடன் தங்கப்பனும் சென்னையிலிருந்து வடிவும் வந்திருந்தார்கள். பயந்ததுபோல ஏதும் நேரிட்டுவிடவில்லை; உயிருக்கு ஆபத்து இல்லை என்று டாக்டர் உறுதி கூறிவிட்டார். மகிழ்ச்சி துள்ளிடவேண்டிய அந்தச் செய்தியைக்கேட்டு. தர்மாம்பாள் டாக்டரிடம் சீறி விழுந்தாள். விவரம் தெரியாதவர்கள் வீண்பயம் கொள்ளுவார்கள் பதறுவார்கள்; டாக்டர்! நீங்களுமா ஒரு ஆபத்தும் இல்லாதபோது அபாயச்சங்கு ஊதி, அவருடைய வேலையைக்கெடுப்பது. எவ்வளவு முக்கியமான பெரிய கேசை விட்டுவிட்டு வந்திருக்கிறார் தெரியுமா என்று கடுகடுப்புடன் கேட்டாள். தர்மு பேசியதிலே சிந்திச் சிதறியது காதிலே விழுந்தது காவேரி அம்மாளுக்கு, வேதனை வெடித்துக்கொண்டு வந்தது. சாத்தப்பனை நான் பார்த்தாக வேண்டும்! உடனே வரச் சொல்லுங்க டாக்டர்...எங்கே இருந்தாலும் வரச்சொல்லுங்க...பேப்பர்லே போட்டா வருவானும்...சொன்னார்கள் டாக்டர்! உங்களைக் கை எடுத்துக் கும்பிடுகிறேன், என் மகனைக் காட்டுங்கள் டாக்டர் ... ஒரே ஒருமுறை ... கடைசீமுறை ... என்று கேட்டுக்கொண்டபோது டாக்டரின் கண்களே கலங்கி விட்டன. பத்திரிகைகளில் செய்தி விளம்பரமாக வெளியிட ஏற்பாடு செய்தார் டாக்டர். அந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டுத்தான், பதறிகதறிக்கொண்டு சாத்தப்பன் வந்திருக்கிறானே அவன் மோட்டார்தானோ அது. மோடாரில் வரவேண்டிய அளவு அவசரமான, ஆபத்தானநிலை வேறு யாருக்கும் இல்லையே, காவேரி அம்மாளின் நிலைதானே மோசமாகிவிட்டிருக்கிறது. ஆகவே படகு மோடாரில் வந்திருப்பது சாத்தப்பனாகத்தான் இருக்கும் என்று பூசாரி சொன்னபோது, இருக்கலாம் என்று ஆமோதித்தார் குத்தாலம்; எனக்குத்தெரியும் மறுபடியும் சாத்தப்பன் இந்த ஊருக்கு வருவதாக இருந்தால் பெரிய பணக்காரனாகத்தான் வருவான் என்பது.

நான் அப்போதேசொன்னேனே மரக்கடை மக்மதுவிடம் கேட்டுப்பாருங்கள் ...எனக்கு அப்போதே தெரியும், சாத்தப்பன் பலே ஆள் என்பது—என்று சூளை சின்னப்பன் கூறிக்கொண்டே மற்றவர்களை அழைத்துக் கொண்டு நாட்டாண்மைக்காரர் வீடுநோக்கி வேகமாக நடந்தான்.

மகனைக்கண்ட மகிழ்ச்சியில் காவேரி அம்மாளுக்கு ஒரு புதிய துடிதுடிப்பு ஏற்பட்டது. அந்தத் துடி துடிப்பே அவர்களின் உயிரையும் குடித்துவிட்டது. கால்களைக் கண்களில் ஒத்திக்கொண்டபடி கதறிய சாத்தப்பனைக் கண்டு உருகாதவர்கள் இல்லை.

தருமாம்பாள் தன் கணவனிடம் "நீங்களும் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு கதறுங்கள். காரியம் தன்னாலே ஆகிவிடும்" என்று சொன்னது யார்காதிலும்விழவில்லை.

தாழைப்பட்டியாருக்கு ஆள் அனுப்பினார்கள்! அவர் வந்துதானே சகல ஏற்பாடுகளும் ஆகவேண்டும்.

காவேரி அம்மாள் இறந்து விட்டார்களே தவிர, அவர்கள் முகத்திலே பதிந்திருந்த பொலிவு, சாவதற்கு முன்பு காணுமற்போயிருந்த தன் மூத்த மகன் வந்துவிட்டதிலே அவர்களுக்குத் தனியானதோர் மகிழ்ச்சி ஏற்பட்டது என்பதைஎடுத்துக்காட்டிற்று.

பக்கத்திலிருந்தவன் பராமரித்துக் கொண்டிருந்தவன், குடும்பத்தின் பெயரைக் காப்பாற்றிக்கொண்டிருந்தவன் தங்கப்பன்; ஊர்தூற்ற, உற்ருர் உறவினர் கேவலமாகப்பேச, எவளுடனே ஓடிவிட்டவன் இந்த சாத்தப்பன் தாயை மறந்து, குடும்பத்தைமறந்து; ஆனுல் விந்தையைப் பாருங்களேன், காவேரி அம்மாளின் மனம் அவன்மீதேபதிந்து கிடந்திருக்கிறது. இதைத்தானய்யா, தாய்ப் பாசம் என்பது" என்ருர் குத்தாலலிங்கம்.

மகன் என்னஆனுனே ஏதுஆனுனே என்று அந்த அம்மாள் கவலைப்பட்டிருப்பார்கள்: மகன் நல்லபடி இருக்கிருன் என்பதைக் கண்டதும் கவலை பறந்தே போய்விட்டது; ஒரு திருப்தி ஏற்பட்டிருக்கிறது. கண்ணை மூடுகிற நேரத்தில், கவலையில்லாமல் இருந்திருக்கிருர்கள் என்ருன் பூசாரி.

படகு மோட்டாரிலே மகன்வந்திருக்கிருன் என்பது காவேரி அம்மாளுக்குத் தெரியுமோ, என்னமோ? என்று கூறிக்கொண்டிருந்தார் சின்னப்பன். அதுவரையில் மோட்டார் டிரைவரிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வந்த மகமது சாத்தப்பன், பேப்பர் விளம்பரத்தைப் பார்த்ததும், பதறிப்போய் ஒங்கோல் ஒகரத்திலே இருந்து மோடாரிலே மானுகப் பறந்து வந்திருக்கிருர்...என்று சொன்னதிலேயே, மற்றவர்கள், சாத்தப்பன் பெரிய புள்ளியாகிவிட்டிருக்கிருன் என்பதைப் புரிந்துகொண்டு, புதிய பாசத்துடன் சாத்தப்பனைப் பார்க்கத்தொடங்கினர்.

"குடும்பத்துக்குத் தலைப்பிள்ளையாச்சே! நீதானேப்பா மற்றவர்களுக்குத் தைரியம் சொல்லணும் தம்பியைப்பாரு! திகைத்துக்கிடக்கருரு...,' என்று பட்டம் சூட்டிப் பேசினுர் குத்தாலம்.

'நூறு வயதுக்குமேலே கூட ஆகி இருக்கட்டும், தாயாரைப் பறிகொடுக்க நேரிட்டால் தாங்கிக்கொள்ள முடியுமா மகனுலே' என்று உருக்கம் கலந்துபேசினுர் சின்னப்பன்.

"எல்லாவற்றையும் துறந்துவிட்ட பட்டினத்தடிகளே அல்லவா, தன்னுடை தாயார் காலமானதைக் கேட்டதும் ஓடோடி வந்து பதறினுர் கதறினுர்..." என்று பூசாரி சொன்னுர்.

* * *

"மணிக்கு 60, 70ன்னு மோடாரு பறந்து வந்திருக்குது" என்று விவரம் கூறினுர் மகமது.

"கார் பெரிசு, புதுசு..." என்று சின்னப்பன் கூறியது கேட்டு, மகமது, தன்னிடம் விவரம் கேட்காமல், இவர்கள் எல்லாம் தங்களுக்குத் தெரிந்தது போலப் பேசுகிருர்களே என்ற எரிச்சலை கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு; 'கார் பெரிசு, புதுசு என்பதுதான் தெரியும் உங்களுக்கு, டிரைவர் யார்தெரியுமா... மிலிடரியிலே வேலை பார்த்த ஆசாமி. வேலைக்கு வந்து வருஷம் நாலு ஆகுதாம். மாதச் சம்பளம் இரண்டுநூறு..." என்ற தகவலைத் தந்து விட்டு சுற்றுமுற்றும் பார்த்தார்.

"ஒங்கோல் ஊரிலேஎன்ன தொழிலாம்..."

"பெரிய முதலாளியாம் அங்கே இவரு...ஈயச்சுரங்கம் இருக்குதாம் ......வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யற வியாபாரமாம்..."

"ஈயச் சுரங்கம்னு ஆசாமி பெரிய புள்ளின்னு சொல்லு..."

"முகத்தைப் பார்த்தாலே தெரியலியா, லட்சுமி கடாட்சம் பரிபூரணமாக இருக்கற விஷயம்......"

"இவ்வளவு பெரிய அந்தஸ்த்திலே உள்ளவரு ஏன் ஊர் பக்கமே தலை காட்டல்லே......"

'வெளிநாடுகள் போய்வர்ர வேலை நிறையவாம். கப்பல் கப்பலா ஈயம் அனுப்புவாராம்...வருஷத்துக்கு இரண்டுதடவை மூணுதடவை, வெளிநாடுபோய் வருவாராம்."

* * *

தாழைப்பட்டியார் வந்துவிட்டதால் ஒரு பரபரப்பு ஏற்பட்டுவிட்டது மற்றத் தகவல்களைப்பற்றிப் பேச முடியவில்லை.

"உன் உடம்பு இருக்கற நிலையிலே நீ அதிகமாக் கதறிதொந்தரவைக்கொண்டுவந்துவிடாதேம்மா. உங்க மாமியாரு பழுத்த பழமான பிறகுதான் காலமாயிட்டாங்க. ஊரிலே இதைத்தான் பெரிய சாவுன்னுசொல்லுவாங்க......அழாதேம்மா, தருமு" என்று தாழைப்பட்டியார் தேறுதல் சொல்ல ஆரம்பித்தது கண்டு, தர்மு கண்களைக் கசக்கிக்கொண்டாள். எப்படியோ தாழைப் பட்டியாருடைய பேச்சு காதிலே விழுந்துவிட்டது

சாத்தப்பனுக்கு. கோபமும் வெறுப்பும் கலந்த குரலில், "அம்மாவுக்கு வயசு உங்களை விட ஆறு குறைவு தானுங்க" என்று கூறிவிட்டு, பதில் ஏதும் எதிர்பாரா தவன் போல வேறுபக்கமாகச் சென்றுவிட்டான். தாழைப்பட்டியாருடையகோபம், அவருடைய மோடார் சாத்தப்பன் மோடாருக்கருகே எப்படி அடக்க ஒடுக்க மாக நின்றுகொண்டிருந்ததோ, அதுபோல தன்னுலே சுருண்டுகொண்டது.

* * *

'பெரியசாவு'பற்றிய பேச்சு அடங்க நாலைந்து நாட் கள்பிடித்தன. இதற்குள், வடிவும் அவள் புருஷனும் வந்து சேர்ந்தார்கள். ஊரார் கூட்டம் குறைந்து வீட்டி லுள்ளவர்கள் மட்டும் 'நிலைமைகளை'ப்பற்றிப் பேசிக் கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டது. இதற்குள் சாத்தப்பன் 'சீமான்' நிலையில் இருக்கிறுன் என்ற உணர்வும், அதற் குத் தக்கபடி நடந்துகொள்ளவேண்டும் என்ற போக் கும் வடிவமெடுத்துவிட்டது.

"தம்பியோட நினைவுதான் அம்மாவுக்கு ......இல்லையானு இன்னும் பத்து வருஷத்துக் காவது இருப்பாங்க."

தாழைப்பட்டியார் அவ்வளவு பரிவுடன் பேசியது பலருக்கு விந்தையாக இருந்தது. சாத்தப்பன் பார்வை யிலேயே இருந்த குறும்புத்தனத்தின் பொருள் மற்றவர் களுக்கு விளங்கவில்லை. தருமாம்பாளைத்தனக்குத் தருகிற எண்ணத்தோடு இருந்தபோது இதே பரிவு, கனிவு தாழைப்பட்டியாருக்கு இருந்தது. அந்தப்பழய நாட்களை இருவரும் நினைவுபடுத்திக் கொண்டனர். இருவரைக் காட்டிலும் அந்த நாட்களை அதிக அளவு நினைவு படுத்திக்கொண்டு தத்தளித்தான் தங்கப்பன்.

தாழைப்பட்டியார் மிட்டாதாரர்; ஆனுல் செல்வம் புரளும்நிலையில் இல்லை. சாத்தப்பன் தனக்கு இதைவிட அதிகச் செல்வம் புரளும் இடம் வேண்டும் என்ற பேராசை காரணமாகவே, ஓடிவிட்டான் என்றுேர் எண்ணம் மிட்டாதாருக்கு.

'ரசவாதி' ரங்கலால், பித்தளையைப் பொன்னுக்கு பவன், ஆகவே அவன் தங்கையை மனம் செய்து கொண்டால் அளவற்ற பணம் கிடைக்கும் என்ற எண்ணத்தினுல்தான் சாத்தப்பன் தருமாம்பாளை உதறி விட்டான் என்று நினைத்துக்கொண்டார். இல்லை யானுல், தாராளமாகப் பழகிக்கொண்டு வந்தவன், ஏன் திடீரென்று மாறிவிடவேண்டும்.

எங்கே, தம்பி நாலைந்து நாளாகத் தென்படக் காணுேமே.

ரங்கலால் ஆராய்ச்சிக் கூடத்திலேயே இருந்துவிட்டேன்.

ஆராய்ச்சின்னு நீதான் தம்பி சொல்றே. ஊரிலே அந்த இடத்தைப்பத்தி தாழ்வாப் பேசறுங்க தெரியுமோ. அந்த ஆள் இருக் கருனே, என்னமோ அவனை மோசக் காரன்னு சொல்றுங்க,

தெரியாதவங்க எதையும் பேசுவாங்க. நாலு குருடர் ஒரு யானையைப்பத்தி என்னென்ன சொன்னுங்கன்னு கதை இருக்குதே, அதுபோல.

தம்பி! உன்னுேட சினேகிதனை தாழ் வாகப் பேசுவது உனக்குக் கோபமாகத்தான் இருக்கும். தருமுவுக்குத் துளிகூட பிடிக்க வில்லை, நீ அந்த இடத்திலே பழகறது.

ஏன்! ரங்கலாலோட உடன் பிறந்தாளை யும் என்னையும் இணைச்சிப்பார்க்குதா தருமு!

தருமுமட்டுமில்லா ஊரேன்னு சொல்லலாம்...

ஊர் எதையும் பேசும். சும்மாவா பெரியவங்க சொன்னுங்க, உலைவாயை மூடலாம் ஊர் வாயை மூட முடியாதென்று...

இவ்விதமான 'பேச்சு' தான் முறிவுக்குத் துவக்கமாக இருந்தது. பிறகு நிலைமை வேகமாக வளர்ந்தது.

நம்ப அந்தஸ்த்துக்குத் தகாது தம்பீ... தலை எறக்கமா இருக்குதப்பா ...

இந்த விஷயத்திலே நான் சற்று கண்டிப் பாத்தான் இருப்பேன்... ஆமாம்!

இந்த இடத்துச்சம்பந்தம் வேண்டுமானு, உன் போக்கை மாற்றிக்கொண்டாகணும்...

உன்னைக் கண்டாலே தருமு வெறுப் படையுது... நானுந்தான்... நீ இங்கே அதிக மாகப் பழகாமல் இருக்கிறது நல்லது...

உள்ளேயாரும் இல்லே சாத்தப்பா! இப்படி திண்ணையிலே உட்காரு... பேச்சுக் குரல் கேட்குதேன்னு யோசிக்கிறயா... உன் தம்பியோட குரல்தான்...

எதுவோ பாடவிஷயமாக தருமுவோடப் பேசிக்கொண்டிருக்குது தங்கம்...

கொச்சைத் தமிழ் வேறுபாடு

ஏட்டுத் தமிழுக்கும், பேச்சுத் தமிழுக்கும் எத்த னையோ வகைகளில் வேறுபாடு உண்டு. அவற்றுள் ஒன் றைப் பார்ப்போம், பொருளுடையவனைச் செல்வர் என்பது ஏட்டுத் தமிழ். பணக்காரன் என்பது பேச்சுத் தமிழ். இரவலன் என்பது ஏட்டுத் தமிழ் பிச்சைக்காரன் என்பது பேச்சுத் தமிழ். இவ்வாறு பல சொற்களில் "காரன்" என் பது ஆண்பாற் பெயர் விகுதியாகவும், "காரி" என்பது பெண்பாற் பெயர் விகுதியாகவும் வழங்கக் காணலாம். வீட்டுக்காரன், வேலைக்காரன், தோட்டக்காரன், சமையற் காரன், இவை ஆண்பாற் பெயர்கள். வீட்டுக்காரி, வேலைக் காரி, தோட்டக்காரி, சமையற்காரி, இவை பெண்பாற் பெயர்கள். ஆங்கிலவாடை அதிகமாக வீசும் இடங்களில் வேலைக்கார், தோட்டக்கார், சமையற்கார் என்று ஈறு கெட்டு வழங்குதலும் உண்டு. இதற்கும் மேலாகக் கொச் சைத் தமிழ் சென்னையில் கொழுந்துவிட்டு வளர்ந்திருக் கிறது. அண்ணன், தம்பி, அப்பன், மாமன், இவர்களை முறையே அண்ணங்காரன், தம்பிக்காரன், அப்பங்காரன், மாமங்காரன்' என்று கூறுவதைக் கொச்சைத் தமிழிலே கேட்கலாம். அப்படியே அக்காளை 'அக்காக்காரி', என்றும் அம்மையை 'அம்மைக்காரி' என்றும் மாமியை 'மாமிக்காரி' என்றும் வழங்குவர்.

—பேராசிரியர். ரா. பி. சேதுப்பிள்ளை

தருமுவைப்பத்தி நினைப்பை விட்டுவிடு சாத்தப்பா... நான் வேறே ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்... தருமுவோட சம்மதத்தோடத்தான்... உன் தம்பி தங்கப்பனுக்கே கொடுத்துவிட முடிவு செய்திருக்கிறேன்...

இப்படி படிப்படியாக, ஆனால் வேகத்துடன், நிலைமை வளர்ந்தது. சாத்தப்பன் வருத்தப்பட்டதாகவோ, கோபித்துக்கொண்டதாகவோ தெரியவில்லை. ரங்கலாவிடம் பழகுவது அதிகமாயிற்றே தவிர குறையவில்லை இந்த நிலையில்தான் சாத்தப்பன், எவரிடமும் சொல்லாமல் ஊரைவிட்டே ஓடிவிட்டது!

சாத்தப்பனும் தாழம்பட்டியாரும் இவை பற்றிய நினைவிலே நெடுநேரம் ஈடு பட்டிருந்தனர்.

"தம்பீ! உன் கலியாணத்துக்குக் கூடவா ஒரு கடுதாசி போடக்கூடாது" என்று கேட்டார் தாழம்பட்டியார்.

"போடாமல் இருப்பேனா... கலியாணம் ஆகிறபோது"

என்று சாத்தப்பன் சொன்னது, தாழம்பட்டியாரை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது.

"கலியாணம் ஆகவில்லையா!..அப்படியா ...அந்தப்பெண்...?"

"ரங்கலாவோட உடன் பிறந்தாளா...? அந்தப்பெண் இறந்து போய்விட்டாள்..."

எவளைக் காதலித்தானோ, எவளுக்காக ஊரையும் உறவையும் விட்டுவிட்டு ஓடினானோ, அவள் இறந்து போய்விட்டாள். மனம் உடைந்து போய், திருமணமே வேண்டாமென்று இருந்து வருகிறான் போல இருக்கிறது என்று எண்ணிக்கொண்டே தாழம்பட்டியாருக்கு, தனக்கு மற்றொரு பெண் இல்லையே என்ற வருத்தமே கிளம்பி வாட்டிற்று. ஈயச் சுரங்கம்! இலட்சக்கணக்கில் வருமானம்! படகு மோடார்! எவள் கொடுத்து வைத்திருக்கிறாளோ. என்று எண்ணிக்கொண்டார்; வேதனையும் அடைந்தார்.

"தம்பி! சப்ஜட்ஜு வேலை உனக்குப் பிடிக்குமா..."

என்று ஒரு நாள் சாத்தப்பன் கேட்டபோது, தங்கப்பனுக்குத் தூக்கி வாரிப்போட்டுவிட்டது. தருமுவுக்கு உள்ளத்தில் ஆவல் குடைந்திடலாயிற்று. தாழம்பட்டியாருக்கோ. மகிழ்ச்சி தாங்கமுடியாத அளவு பொங்கிற்று தலை அசைத்தான் தங்கப்பன். ஏற்பாடு செய்கிறேன் என்று சுருக்கமாகப் பதிலளித்தான் சாத்தப்பன். ஒரு வாரம் முடிவதற்குள், தங்கப்பன் சப்-ஜட்ஜு வேலையில் அமர்ந்தான்.

சாத்தப்பனுடைய செல்வாக்குப் பற்றிய பேச்சு ஊரையே ஒரு கலக்கு கலக்கிவிட்டது.

குத்தாலம் சொன்னார். "எனக்கு அப்போதே தெரியும், அவனோட ஜாதகம் அப்படிப்பட்டது என்பது அவன் கல்லூரியிலே படிக்கிறபோதே, நான் அவனுடைய சிபாரிசு' வேண்டும் என்று கேட்டேன். நமக்குக் 'கொடுப்பினை' இல்லாதலாலே சாத்தப்பன் உதவி செய்யவில்லை. அப்போதே ஒரு வார்த்தை சொல்லியிருந்தா, எனக்குத்தான் கல்லூரி புதுமண்டபக் காண்ட்ராக்டு கிடைத்திருக்கும்" என்று கூறினார். ஏக்கத்துடன்.

"பாருங்களேன். அவரோட செல்வாக்கை. தம்பி! உனக்கு ஜட்ஜு வேலை வேணுமான்னு கேட்டாராம்; தங்கப்பன் தலை அசைத்தானும்; பத்தே நாளிலே ஜட்ஜு வேலை வீடு தேடி வந்திருக்குது. அப்படி அல்லவா இருக்கவேணும்." என்றான் சின்னப்பன்.

'அப்படிப்பட்ட ஒரு அண்ணன் இருக்கறது, தங்கப்பாவுக்கு ஒரு பெருமையில்லையா" என்று சொல்லிவிட்டு,

தன் அண்ணன் ஆறாயிரம் கடன்பட்டு அதைக்கொடுக்க மாட்டாமல் மஞ்சள் கடிதம் நீட்டியதை எண்ணி வருத்தப் பட்டுக்கொண்டார் மகமது.

அந்த வட்டத்துக்கு வணிகர் சங்கம், ஒரு வரவேற்பு வைபவம் ஏற்பாடு செய்தது, சாத்தப்பனுக்கு.

சப்-ஜட்ஜ் தங்கப்பனுடைய அண்ணன், என்ற காரணம் காட்டியதும், அமைச்சர் ஒருவரே, வைபவத்துக்குத் தலைமை வகிக்கச் சம்மதமளித்தார். அவருக்கு அடுத்தமுறை அத்தொகுதி'யில் நிற்கவேண்டும் என்ற விருப்பம்.; விழா மூலம் அந்த வட்டத்து வணிகர்களின் நட்பு கிடைக்கும் என்ற எண்ணம். கணக்கு சரியாகவே போட்டிருந்தார் அமைச்சர். பாராட்டும் பிரமாதமாக அமைந்தது. பிரத்தியேக 'நிருபர்', புகைப்படைக்காரர் புடைசூழ அமைச்சர் வந்திருந்தார்.

திரைகடலோடியும் திரவியம்தேடு என்று நமது முன்னோர்கள் சொன்ன பொன்மொழியின்படி திருவாளர் சாத்தப்பிள்ளைவாள். செல்வம் தேடி செல்வாக்கு தேடி நமக்கெல்லாம் பெருமை தேடிக் கொடுத்திருக்கிறார். சில வேலைகளில் வியாபாரிகளைக் கண்டிக்கிறோம். ஆனால் இப்படிப் பட்ட நாணயமான, நேர்மையான வியாபாரிகளை

சிரிக்க வைத்த இரகசியம்.

ஊமைத் திரைப்படம் வெளிவந்து ஓடிக்கொண்டிருந்த காலம். வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் படம் என்றெல்லாம் பிரமாதமாய் விளம்பரம் செய்து ஒரு நகைச்சுவைப் படம் திரையிடப்பட்டிருந்தது. ஆனால் படத்தைப் பார்த்த ரசிகப் பெருமக்கள், அபாரமான சோகப் படத்தைப் பார்ப்பவர்கள் போல் அமர்ந்திருந்தார்கள் இரண்டு, மூன்று நாட்கள் வரை இதே நிலைமைதான். கூட்டமும் வரவரக் குறைந்து கொண்டு வருவதைப் போலிருந்தது,

அந்தப்படத்தைத் தயாரித்தவர் தலையில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டார். முதல் படம், தன்னுடை தலைவிதியையே நிர்ணயிக்கப் போகிற படம் இந்த கதிக்கு ஆளாவதா? அதை எப்படியும் வெற்றிப் படமாக மாற்றியமைக்க வேண்டுமென்று திட்டமிட்டார் தயாரிப்பாளர்,

கூலிக்குப் பத்து பதினைந்து நபர்களைப் பிடித்தார், சினிமாக் கொட்டகையில் பரவலாக உட்கார்ந்து கொள்வார்கள். அவர்கள் திரையில் நகைச் சுவைக் காட்சிகள் வரும்போது விழுந்து விழுந்து சிரிக்க வேண்டியது அவர்களுடைய வேலை.

சிரிப்புத்தான் ஒரு தொற்றுநோய் ஆயிற்றே படம் பார்க்க வந்த அனைவருக்கும் தொற்றிக் கொண்டது அ . சிரிக்கிறவங்க தொகை பெருகப் பெருக படத்தின் வசூலும் கணிசமாகப் பெருகி, அந்தப் படத்திற்கு வெற்றி தேடிக் கொடுத்தது.

இப்படி கூட்டத்தினரை சிரிக்கவைக்கும் ரகசியத்தைக் கையாண்டவர் பிரபல வெற்றிப்பட தயாரிப்பாளர் ஸெஹின் பி. டிமீல்.

அல்ல. இவர்கள் நமது நாட்டுக்கே தூண் போன்றவர்கள். எங்கள் அரசாங்கம் இத்தகைய வியாபாரிகளுக்கு எல்லாவிதமான உதவியும் செய்யச் சித்தமாக இருக்கிறது.

அமைச்சரின் 'பேருரை' கேட்டு, வைபவப் பொறுப்பாளர்களான குத்தாலம் குழுவினர் பெருத்த ஆரவாரம் செய்தனர்.

சாத்தப்பன், பேசும்போது அடக்கம், தெளிவு, அனுபவம் எல்லாம் ததும்பியதாகக் கூறிக்களிப்படைந்தனர்.

* * *

விழா முடிந்ததும் பயணிகள் விடுதியில் சென்று தங்கியிருந்த அமைச்சரிடம் போலீஸ் மேலதிகாரி ஒருவர் சந்தித்துச் சில விநாடிகள் பேசினார்; மறுநாள் காலையிலே புறப்பட இருந்த அமைச்சர் அவசர அவசரமாக அப்போதே புறப்பட்டு விட்டார்; வணிகர்கள் ஒருவரையும் கண்டு பேசாமல் அமைச்சர் சென்றதும், ஒரு 'வான்' நிறையப் போலீசை அழைத்துக்கொண்டு, மேலதிகாரி, சாத்தப்பன் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று, அவனைக் கைது செய்தார்கள்.

ஊரே திடுக்கிட்டுப்போய்விட்டது. திகில் கப்பிக் கொண்டது. தாழம்பட்டியாருக்கு ஒன்றும் புரியவில்லை.

விழா காண வந்திருந்த தங்கப்பன் தலையில் கைவைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டான். தருமாம்பாள் ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். சாத்தப்பன் துளியும் கலங்கவில்லை. கைகளைக் கூட நீட்டினான், விலங்குப் போடுவதாக இருந்தால் போடுங்கள் என்று கூறியபடி. முடுக்காகப் பேசினால், தன் வேலை சுலபமாகி இருக்கும், இவன் அமைதியாகவும் மரியாதையாகவும் பேசுகிறானே இவனிடம் நாம் பக்குவம் தவறி நடந்துகொள்வது முறையாக இருக்காதே என்று எண்ணிச் சங்கடப்பட்ட போலீஸ் மேலதிகாரி "என் கடமையைச் செய்கிறேன். வருத்தமாகக் கூட இருக்கிறது" என்று சமாதானம் கூறினார். 'அதனால் என்ன! கடமையைச் செய்யும் போது கலங்கக் கூடாது. அதனால் நமக்கே சங்கடம் தொல்லை, ஆபத்து வருவதானாலும் கலங்கக் கூடாது" என்று சாத்தப்பன் போலீஸ் அதிகாரியிடம் பேசிடக் கேட்டு, தாழம்பட்டியார் திகைத்துப் போனார்.

"ஜாமீனில் விடுவார்களல்லவா சார்! நான் ஜாமீன் கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன்"

என்று தாழம்பட்டியார் கூறியதற்கு போலீஸ் அதிகாரி பதிலளிக்கவில்லை, சாத்தப்பன்தான் பதில் கூறினான்.

"இது கொலை, கொள்ளை சம்பந்தப்பட்டதாயிற்றே... ஜாமீனில் விடமாட்டார்கள்"

என்பதாக. போலீஸ் அதிகாரி புன்னகை புரிந்தபடி "ஐயா சகலவிபரமும் தெரிந்து வைத்திருக்கிறார்" என்று சிறிதளவு குறும்புடன் கூறினார்.

* * *

"பார்த்தயா மகமது! எனக்கு அப்பவே சந்தேகம்! என்னமோ மோசடி நடந்திருக்குது; இல்லையானா இந்தப் பயலுக்கு ஏது இவ்வளவு செல்வம் என்று. கொள்ளை அடிச்சிருக்கான் பய! யாரும் கண்டுபிடிக்க மாட்டாங்க என்கிற தைரியத்திலே இங்கே வந்து வெளிச்சம் போட்டுக் காட்டி இருக்கிறான்."

"மோடாரைப் பார்த்தாயா, எம்மாம் பெரிசு."

'ஊரைக் கொள்ளை அடிச்சா உனக்கும்எனக்கும் கூடத்தான் கிடைக்கும் இதைவிடப் பெரிய மோடாரு......பாடுபட்டுத் தேடின பணமாக இருந்தாத்தானே கணக்குப் பார்ப்பானுங்க. இது எப்படியோ வந்ததுதானே..."

'ஈயச் சுரங்கம்னு சொல்லற போதே எனக்குச் சந்தேகம்...ஈயத்திலேயா இவ்வளவு பணம் புரளும்னு...',

"கொள்ளை மட்டும் இல்லையாமே, கொலைக்குற்றமே இருக்குதாம் — ஆசாமிபேர்லே..."

"வெளிவேஷம் போட்டுக் கொண்டு நம்மைப்போல இருக்கறவங்களை ஏமாற்றிவிடலாம்......சர்க்காரு சும்மா விடுமா...பார்த்தாயா, அவன் கழுத்திலே போட்ட

மாலே கூட வாடலே வதங்கலே, அதுக் குள்ளே கையிலே மாட்டிவிட்டாங்க, காப்பு... இரும்புக் காப்பு...''

''உள்ளபடி நாணயமான தொழில் செய் யறவஞ இருந்தா, ஏன் இத்தனை வருஷம் தலைமறைவா இருக்கவேணும். சொல்லு.''

''எனக்கு அப்பவே சந்தேகம்......நான் அப்பவே சொன்னேன், நம்ம பூசாரிகிட்ட, அய்யோவ்! இதிலே என்னமோ மர்மம் இருக் குதுன்னு......''

''சர்க்காரே தன்னோட உள்ளங்கையிலே இருக்கறதாகாட்டிக்கிட்டானேபய,பார்த்தயா காட்டுடா கையைன்னு வந்துட்டாரு டி. எஸ். பி.''

''சப் ஜட்ஜ் வேலை, தம்பிக்கு வாங்கிக் கொடுத்ததாகச்சொன்னுங்களே, அப்போதே எனக்குச் சந்தேகம். எப்படி இப்படிப்பட்ட செல்வாக்கு கிடைச்சிருக்கும்னு...''

''அதெல்லாம் செல்வாக்கும் இல்லே மண்ணும் இல்லே......பழமொழி இல்லே, காக்கா உட்கார பணம் பழம் விழன்னு; அது போல... தங்கப்பன் என்ன தகுதியில்லாத வஞ...சப்-ஜட்ஜு வேலை தன்னுலே வராதா அவனுக்கு கோர்ட்டிலே கூட, அதிகமாக அலட்டிக் கொள்றதில்லே தங்கப்பன்...மத்த வக்கீல்களைப் போல......பலபேர் அதைப் பார்த்து அப்பவே சொல்லி இருக்கருங்க தங்கப்பன் ஜட்ஜு வேலைக்குத் தகுதின்னு...''

''சப் ஜட்ஜி வேலை, தம்பிக்குக் கிடைக்கப் போகிற விஷயம் எப்படியோ தெரிந்துவிட்டிருக்குது பயலுக்கு; இதுதான் சமயம்னு ஒரு போடு போட்டிருக்கருன், நான் வாங்கித் தர்ரேன் சப்-ஜட்ஜி வேலைன்னு...''

''அப்படித்தான்இருக்கவேணும்.இப்படிப் பட்ட கொலைகாரப்பயலா உன்னோட அண் ணன் என்று நாலுபேர் கேட்டா, சப்-ஜட்ஜி மனசு என்ன பாடுபடும். தலை இறக்கமாத் தானே இருக்கும்''

''சந்தேகமா அதுக்கு. இவன் இப்பத் தாஞ தலை இறக்கமான காரியத்தைச் செய் யருன். அந்தக் காலத்திலேயே எவளையோ இழுத்துகிட்டு ஓடிட்டானே, அது என்ன காரியம். குடும்பத்துக்கு கெட்ட பெயர் தேடி னவன்தானே...''

''பாவம் தங்கப்பன், படிச்சி பட்டம் பெற்று, ஒரு நாணயமான வக்கீலாகி குடும்ப கௌரவத்தைக் காப்பாத்தினுன்...இப்ப இவன் வந்து சேர்ந்தான் அதைக் கெடுக்க.''

''வாயைத் திறக்கருஞ பார்த்திங்களா... இப்பவும் ஒரு அகம்பாவம்.''

''தலைக்கு மேல போகுது, அது ஜான் போஞ என்ன முழம் போஞ என்ன என்கிற போக்கு...''

''எல்லாப் போக்கும் பத்து நாளிலே தெரிந்துவிடும்...''

எல்லோருடனும் சேர்ந்து இதே முறையில் பேசினு லும், மகமது. மோடார் டிரைவரைச் சந்தித்து தகவல் கள் ஏதாவது கிடைக்கிறதா என்பதிலே ஈடுபட்டார். விளக்கம் தருகிற விதமான தகவல் கிடைக்கவில்லையே தவிர, சாத்தப்பன் கைது ஆனது பற்றியோ என்ன நேரிடும் என்பது பற்றியோ டிரைவர் துளியும் கலக் கமோ கவலையோ கொண்டதாகத் தெரியவில்லை. வழக் கப்படி மோடாரைச் சுத்தப்படுத்துவதும், கதை புத் தகம் படிப்பதும் காப்பிக் கடைக்குப் போவதுமாக இருந்து வந்தான். தாராளமாகச் செலவும் செய்து கொண்டிருந்தான். இதைக் கண்ட மகமது மேலும் திகைப்படைந்து போனுர்,

''ஏம்பா! டிரைவர். எஜமானரு போலீ சிலே சிக்கிக்கொண்டாரே என்று பயப்ப டாதே. நாங்க எப்படியும் அவரை வெளியே கொண்டுவர ஏற்பாடுசெய்யுவோம். சமயம் வரணுமேல்லோ.''

''இது சகஜமுங்க...ஐயாவுக்கு இப்படிப் பட்ட ஆபத்து அடிக்கடி வந்து மிரட்டும்; ஆனுல் அவரு எல்லாவற்றையும் விரட்டி அடித்துவிடுவாரு...வல்லமைசாலி...''

''பதறுது எங்க மனசு...இப்படிப்பட்டவர் பேர்லே கொலை, கொள்ளை போன்ற அபாண் டம் வந்து விழறதைப்பார்த்து...இதுக்கு முன்னுடி எப்பவாவது போலீசு பிடிச்ச துண்டா உன்னோட முதலாளியை...''

''பல மாதிரியான கேசு தொல்லை ஏற் படும். ஒரு தடவை, இவருடைய தொழிலிலே பங்காளியை இவர் கொலைசெய்ய முயற்சி செய்தார்னு கேசு போட்டாங்க... ஒரு ருஜுவும் கிடைக்கல்லே...விடுதலை கிடைச் சுது...''

இந்தத் தகவலை எடுத்துக் கொண்டு மகமது தன் நண் பர்களைத் தேடிக் கொண்டு சென்ருன். ஆனுல் சுனை சின்னப்பன், இதைவிட அதிசயமான தகவலைச் சேக ரித்து வைத்திருந்து அதைக்கூறி மகமதை ஆச்சரியத்தி லாழ்த்திவிட்டான்.

''முத்துமாலையாம்; பத்தாயிரம் ரூபா விலை இருக்குமாம். அதுதான் இவனைக் காட் டிக் கொடுத்துவிட்டிருக்குது......''

''முத்துமாலையா...அது என்ன புதுத் தகவலு...''

'அய்யோவ்! நம்ம சுனையிலே வேலை பார்க்கருனே வெள்ளே......தெரியுமேல்லோ. அவனுடைய சம்சாரம் இருக்காளே—பூங்கா வனம் தெரியுமேல்லோ......அவ கொண்டு வந்த தகவல் நான் இப்ப சொன்னது...''

''பூங்காவனம் என்ன சொன்ஞ...''

''அவ போயிருக்காய்யா நாட்டாமை வீட்டுக்கு; ஒரு வேலையா. அப்படி, இவ வந் திருக்கிற விவரம் தெரியாமப்படிக்கு, தங்கப்பனும் தருமாம் பாளும் பேசிக் கொண் டது, காதிலே விழுந்திருக்குது. அந்தமுத்துமாலை

யைத் தூக்கி வடிவுக்கு உங்க அண்ணன் கொடுக்கற போதே எனக்கு சந்தேகம்; திருட்டுச் சொத்தாக இருக்கும் என்கிற சந்தேகம்னு தருமாம்பா சொல்ல, அதைக் கேட்டு தங்கப்பன், வீணு இல்லாததும் பொல்லாததும் சொல்லி என் மனதைக் குழப்பாதே; ஏற்கனவே என் மனசு நொந்து கிடக்குதுன்னு சொல்ல, ஏன்! படகு மோடார்லே வந்திருக்கிருனே நம்ம அண்ணன் என்ற பூரிப்போ! என்று இடிக்க, அவன் மேலும் கோபமடைந்து உனக்கு சாத்தப்பனைப் புரிந்துகொள்கிறஅளவு மூளை கிடையாதுன்னு பேச, எனக்கு மூளை இருக்கட்டும் இல்லாமல் போகட்டும் ஜட்ஜி வேலைபார்க்கறதுக்குத் தேவையான மூளை இருக்குதான்னு நீங்க முதலிலே தெரிந்து கொள்ளுங்க என்று ஏச தங்கப்பன் அவளை அடிக்கக் கையை ஓங்க, பயந்து போய் தருமாம்பாள் கூச்சலிட, ஒரே ரகளையாகி இருக்குது. பூங்காவனம் இதைப் பார்த்துவிட்டு வந்திருக்கிரு.''

மறுநாள் காலைப் பத்திரிகையை வைத்துக் கொண்டு குத்தாலம் குழுவினர் மிக ஆர்வத்துடன் பேசிக் கொண்டிருந்தனர். முத்துமாலை பற்றிய முழு விவரமும் தரப்பட்டிருந்தது.

போலீஸ் அதிகாரியின் கடமை உணர்ச்சி
'மைத்துனன்' பிடிபட துணை நின்ருர்
முத்துமாலை 'மர்மம்'

என்ற கொட்டை எழுத்துத் தலைப்புகளுடன், சாத்தப்பன் சம்பந்தப்பட்ட விவரமான செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

சாத்தப்பன், வடிவுக்குத் திருமணத்தின்போது வரமுடியாமற் போட்விட்டதற்கு வருத்தம் தெரிவித்துவிட்டு, விலையுயர்ந்த ஒரு முத்துமாலையைப் பரிசாகக் கொடுத்திருக்கிருன்; அண்ணன் தந்த பரிசு என்று பூரிப்புடனும் பெருமையுடனும் அந்த முத்துமாலையை வடிவு தன் புருஷனிடம் காட்டியிருக்கிருள்; முத்துமாலையைக் கண்டதும் களிப்படைந்து கணவன், மைத்துனன் சாத்தப்பனைப் புகழ்ந்து பேசுவான், காது குளிரக் கேட்கலாம் என்பது வடிவின் எண்ணம். வைரமாக இழைத்துத் தருகிற நிலையில் புகுந்த இடம் இருந்தாலும், 'பிறந்த இடம்' தருகிற பொருள் தானே ஒரு பெண்ணுக்கு அதிக அளவு மகிழ்ச்சியையும் பெருமையையும் தரும். அதிலும் சப்இன்பெக்டர் வேலை பார்க்கும் அவளுடைய கணவன் சபாபதி, 'சம்பளம்' போதும் என்ற போக்கினன். அதனுல் ஊரிலே நல்ல பெயர் இருந்ததே

பொம்மையா? மனைவியா?

ஜேம்ஸ் ஜான்ஸன் என்ற அமெரிக்க நீக்ரோ தன்னுடைய மனைவியையும், தன்னுடைய பொம்மையையும் மிகவும் நேசித்து வந்தான். பொம்மையைத்தான் அவன் அதிகமாக நேசிக்கிருன் என்று அவனுக்கும், அவனது மனைவிக்கும் சச்சரவு ஏற்பட்டு கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. "உனது பொம்மை, உனது மனைவி, இந்த இரண்டில் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள். இரண்டையும் சேர்த்து வைத்துக்கொண்டு உன்னுல் வாழ்க்கை நடத்த முடியாது'' என்று நீதிபதி கூறினுர். ஜான்ஸன் தனது பொம்மையையே விரும்பி தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

தவிர வடிவு மனம் மகிழும்படி 'நகை நட்டு' வாங்கித் தரக் கூடிய நிலை இல்லை. அதற்காக சபாபதி வருத்தப்பட்டுக்கொள்ளவும் இல்லை, பணம் பெருத்தவர்களிலே முக்கால் பகுதிக்குமேல், பிடிபடாத குற்றவாளிகளே என்பது அவன் எண்ணம். அந்தஎண்ணத்துடன்தான், அவன் சாத்தப்பனையும் பார்த்தான். அதிகமாகக் கூடப் பேசவில்லை. தனக்கு வேலை இருப்பதைக் கூறிவிட்டு சென்னை திரும்பிவிட்டான். சில நாட்களுக்குப் பிறகு தான் வடிவு வந்திருக்கிருள் முத்துமாலையுடன்.

முத்துமாலையைக் கையிலே வாங்கிய சபாபதியின் கண்களிலே மகிழ்ச்சி பிறக்கவில்லை; குரலிலே ஒரு குளுமை எழவில்லை மாலையைக் கூர்ந்து கவனிப்பதும் எதையோ யோசிப்பதுமாகச் சில விநாடிகள் இருந்துவிட்டு,

"உன்னேட அண்ணன் கொடுத்ததா?''
என்று கேட்டான்.

வேடிக்கை பேசுவதாக எண்ணிக் கொண்டு வடிவு

"பின்னே! உங்க அண்ணன் வாங்கிக் கொடுத்தாரா!!''

என்று பதில் கூறினுள்.

கேலி நிரம்பிய முறையிலே சிரித்தபடி சபாபதி,

"என் அண்ணன் எங்கே கொள்ளை அடித்தார், இதுபோல முத்துமாலையைப் பரிசு தர!''

என்று கூறிவிட்டு, முத்துமாலையுடன் அவசரமாகத் தன் மேலதிகாரியிடம் சென்ருர். கணவன் பேச்சின் பொருள் தெரிந்து கொள்ளமுடியாமல் வடிவு திகைத்துக் கிடந்தாள்.

மேலதிகாரியிடம் சபாபதி முத்துமாலையைக் கொடுத்து "எதிர்பாராத முறையில் கொடி கொண்டா கொள்ளை சம்பந்தமான துப்பு துலக்கக் கூடிய இந்த 'முத்துமாலை' என்னிடம் கிடைத்திருக்கிறது. நாலு வருஷங்களுக்கு முன்பு கொடி கொண்டா என்ற மலையூரில் கொள்ளிச்சாமியாரின் மடத்தில் இருந்து கொள்ளையடிக்கப் பட்ட பொருள்களிலே ஒன்றுஇந்த முத்துமாலை. முத்துமாலையின் ஒவ்வொன்றிலும் கொ. கொ. கொ. என்ற எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருப்பது தெரிகிறது. கொடி கொண்டா கொள்ளிச்சாமி என்பதைக் குறிப்பதே கொ. கொ. கொ. என்ற எழுத்துக்கள். இவை என் மனைவிக்குப் பரிசாகக் கொடுத்தது என் மைத்துனன். அவள் அண்ணன், பல வருடம் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டிருந்தவன் பெயர் சாத்தப்பன்; பெரிய செல்வவானுகக் காணப்படுகிருன். அவனைக் கைது செய்தால், நாலு வருடங்களாகத் துலங்காமலிருக்கும் 'மர்மம்' விளங்கிவிடும்.'' என்ற விவரம் கூறியிருக்கிருன். மேலதிகாரி, சபாபதியின் கடமை, நேர்மை ஆகிய வற்றைப் பாராட்டிவிட்டு, சாத்தப்பனைக் கைது செய்திருக்கிருர். இந்த விவரம் அவ்வளவும் தரப்பட்டிருந்தது பத்திரிகையில். சபாபதியின் படம், மேலதிகாரியின் படம், முத்துமாலையின் படம் கொள்ளிச்சாமியின் படம் கொடி கொண்டா மலையின் படம், மடத்தின் படம், சாத்தப்பன் படம் இவைகள் பத்திரிகையிலே போடப்பட்டிருந்தன. இதழ் தந்த தகவலைப் படித்த ஊர் மக்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

படித்தவன்—பணம் சேர்க்கும் வித்தையிலே வேறு கெட்டிக்காரனுக இருந்திருக்கிருன்—இருந்தும் திருட்டுச் சொத்து எப்படியும் பிடிபட்டுவிடும் என்று கூடவா தெரிந்து கொள்ளாமலிருப்பது—

எப்போதோ நடந்த கொள்ளைதானே—இன்னமுமா அதுபற்றிய நினைப்பு இருந்து கொண்டிருக்கும் என்ற எண்ணமாக இருக்கும்.

சீமானாகி விட்டோம், இனி எவன் நம் மீது சந்தேகப்படப்போகிறான் என்ற நினைப்பு.

தங்கை புருஷன் போலீஸ் அதிகாரி! திருட்டுச் சொத்து, அவனிடம் இருந்தால், யார் சந்தேகப்பட்டுப் பிடித்துவிடப் போகிறார்கள் என்ற விதமான அசட்டுத் தைரியம்.

ஊரார் இப்படிப் பல விதமாகப் பேசிக் கொண்டார்கள்,

எல்லோரும் வழக்கு நடைபெறும் நாளை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

பாவம்! தங்கப்பன் முகத்திலே ஈயாடவில்லை' இருக்குமல்லவா வேதனையும் வெட்கமும் என்று பலர் பேசிவந்தனர்.

தங்கப்பன் உள்ளபடி மிக வேதனையுடன் காணப்பட்டான்.

நீங்க ஏன் மனதைப் போட்டுக் குழப்பிக்கொள்வது! கூடப் பிறந்தவன் கூண்டிலே கிடக்கிறானே என்ற வருத்தமா! இப்படிப்பட்ட ஆசாமிகளிடம் துளியும் ஈவு இரக்கம் காட்டவே கூடாது—என்று மனைவி கூறக் கேட்டு, தங்கப்பன் கொதித்துக் குமுறினான்.

போதும், உன்னுடைய தர்மோபதேசம். என் வேதனையைக்கிளறாதே.........என்று கோபித்துக் கொண்டான்.

அந்தப் பொண்ணோட ஜாதகம் நல்லதாக இருக்கவே இந்த இழிவு அதற்கு வந்து சேராமலிருந்தது. முதலிலே, இந்த சாத்தப்பனுக்குத்தானே இந்தப் பெண்ணைக் கட்டுவதாக இருந்தார்கள், என்று குளத்தங்கரை மாநாட்டிலே பேச்சு தொடங்கியது; ஏம்பா! நான்தான் அப்போதே சொன்னேனே! மிராசுதாரர் பலே சாமர்த்திய சாலின்னு......இந்தப் பயலோட எதிர்காலம் இப்படித்தான் இருக்கும் என்று முன்னதாகவே மிராசுதாரருக்குத் தெரிந்திருக்குது, அதனாலேயேதான், சமயம்பார்த்து ஆசாமியை விரட்டிவிட்டு தன்னோட மகளை, தங்கப்பனுக்குக் கொடுத்திருக்கிறார்! அனுபவம்; அறிவு.

அதிர்ஷ்டம்னு சொல்லுங்க. முதலிலே நினைத்தபடி சாத்தப்பனுக்கே அந்தப் பெண்ணைக் கொடுத்திருந்தா, இன்னேரம் என்ன ஆகியிருக்கும் மிராசதாரரோட கௌரவம்? பஞ்சு பஞ்சாகப் பறந்து போயிருக்குமே! ஊர், சிரிப்பாச் சிரித்திருக்கும். நல்லவேளை, தப்பித்துக்கொண்டார்.

குளத்தங்கரை மாநாட்டிலே இப்படிப்பட்ட பேச்சு நடந்துகொண்டிருந்தபோது, சிறையிலே தள்ளப்பட்டிருந்த சாத்தப்பன், உடன் இருந்த குற்றவாளிகளுடன், ஒரு கவலையுமில்லாமல் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் இருந்தான்.

உடனிருந்தவர்களிலே பெரும்பாலானவர்கள், 'அந்தஸ்து' காரணமாக உயர் வகுப்புச் சிறையிலே இருந்தனர்.

இலஞ்சம் வாங்கிய அதிகாரிகள், மோசடி செய்த வணிகர்கள், கள்ளநோட்டு அடிக்கனவான், கோயில் நகையைத் திருடிக்கொண்டு முலாம்பூசிய நகையை கோயிலிலே மாற்றிவைத்துவிட்ட எத்தன், இப்படிப் பட்டவர்கள், சாத்தப்பனின் சகாக்கள். அவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள், தம்மீது 'அபாண்டம்' சுமத்தப்பட்டதாகவும் நீதிபதி அக்ரமமாகத் தம்மைத் தண்டித்துவிட்டதாகவும், வழக்கறிஞர் தெளிவில்லாதவராக இருந்ததால், தண்டிக்கப்பட்டதாகவும் கூறினர். ஒருவர் இருவர்மட்டுமே, ஏதோ போதாதவேளை—புத்தி கெட்டுவிட்டது —தவறு செய்துவிட்டேன்—அனுபவிக்கிறேன்—முன்ஜென்மவினை—என்று கூறினர்.

சொத்து திருட்டுச் சொத்துதான்......தெரியும்...... ஆனால் களவாடியது நான் அல்ல...ஆனால் என்ன...? யார் களவாடினால் என்ன? என்னால் தண்டனையை அனுபவிக்கமுடியும். ஆகவே நான் தண்டனையைப் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன்...என்று சாத்தப்பன் சொல்லக் கேட்டு, இதை என்ன, வேதாந்தம் என்று கொள்வதா, மனக்குழப்பம் என்று சொல்லுவதா என்று தெரியாமல் அந்தக் கைதிகள் திகைத்தனர்.

மடத்திலே கொள்ளை அடிக்கப்பட்ட சொத்து என்பது உண்மையா?—என்ற கேள்விக்கு துளியும் பதறாமல் சாத்தப்பன், 'இல்லாமல் பிறவாது அள்ளாமல் குறையாது!' என்று பதிலளித்தான். மேற்கொண்டு எந்த விவரமும் தரமறுத்துவிட்டான்.

சிறைக்குச் சென்று சாத்தப்பனைப்பார்த்துவிட்டு வந்த மோடார் டிரைவரிடம், குத்தாலம் குழுவினர். புதுத்தகவல் தெரிந்துகொள்ள எப்படி எப்படியோ கிளறிப் பார்த்தனர், எந்த விஷயமும் சொல்ல மறுத்துவிட்டான்.

எப்படி அப்பா உன் எஜமானர் இருக்கிறார்? என்று குத்தாலம் கேட்டதற்கு, டிரைவர், 'அவருக்கென்ன, 'ராஜா'போல நிம்மதியாகத்தான் இருக்கிறார் — என்று மட்டுமே பதிலளித்தான்; வழக்கு என்ன ஆகும் என்பதுபற்றிக்கூட பேச மறுத்துவிட்டான்.

* * *

கோர்ட் கூடிற்று. திரளான கூட்டம்.

"சாமிகளே! இந்த முத்துமாலை, தங்களுடையது தானே"

'அபசாரம்! அபசாரம்! நான்—எனது—என்ற மயக்கத்திலிருந்து நான் விடுபட்டவன். என்னுடையது என்று எதுவும் இல்லை."

'சுவாமிகளே! அது சிலாக்கியமான வேதாந்தம் ......போற்றப்பட வேண்டிய தத்துவம். ஆனால், இப்போது நாம் ஒரு கொள்ளைபற்றிய வழக்கினை விசாரித்துக்கொண்டிருக்கிறோம். அதனால், உண்மையைச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த முத்து மாலை, தங்கள் மடத்திலிருந்து கொள்ளை அடிக்கப்பட்டதுதானே......"

"நான் இருக்கும் இடத்தை மடம் என்றும், இந்த நச்சுப்பொருளை முத்துமாலை என்றும் பேதைகள், பெம்மான் அருள் பெருதவர்கள் பேசுவர்."

"எமது பொறுமையை மிக அதிக அளவு சோதிக்க வேண்டாம், சுவாமிகளே! தங்களுக்கு எந்தப் பொருள் மீதும் பற்று இருக்காது; உணருகிறோம். ஆனாலும் களவு. கொள்ளை போன்ற குற்றம் செய்திடும் சமூக விரோதிகளைத் தண்டித்தாகவேண்டும். அதுதான் நியாயம். அந்த நியாயம் வெற்றிபெற தாங்கள் உதவி செய்திடவேண்டும். தங்கள் மடத்திலிருந்து பல விலையுயர்ந்த பொருள்கள் கொள்ளைபோய்விட்டது உண்மை தானே...போலீசில்வழக்குப்பதிவாயிற்றே. ஒப்புக்கொள்கிறீர்கள் அல்லவா......"

எம்மானின் ஜோதிஸ்வரூபத்தைக் காணுதோரே, பொன் என்றும் மணி என்றும், வைரம் வைடூரியம் என்றும், முத்து என்றும் பவழம் என்றும் பிதற்றுவர் அப்பனே! என் கண்களுக்கு எல்லாம் ஒன்ருகவே தெரிகிறது. கொள்ளை நடந்ததாகக் கூறுகிறீர்கள். நான் அறியேன்......என் கண்முன் தெரிவதெல்லாம் ஐயன்! ஐயன்! ஐயன்! எங்கும் ஐயன்! எப்போதும் ஐயன்! ஐயனன்றி வேறில்லை......"

கோர்ட்டிலே சிலரால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை. நீதிபதிக்கேகூடச் சங்கடமாக இருந்தது.

சாத்தப்பன், தன் பார்வையை, சாமியாரிடமே பதித்துவைத்திருந்தான்.

மறதியின் மன்னர்!

மிகவும் மறதியான மனப்போக்கு கொண்ட புரொபசர் ஒருவர் தன் மனைவியுடன் மகனுக்குப் பெண் பார்க்கச் சென்ருர். இறுதியில் "பெண் கறுப்பாக இருக்கிருள்!" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

வெளியில் வந்ததும் அவருடைய மனைவிக்கு அபாரமான கோபம் வந்துவிட்டது.

"அந்தப் பெண்ணைப் போய் கறுப்பு என்கிறீர்களே; உங்களுக்கு வாய்த்தவள் மட்டும் என்னவாம்?" என்று சீறினுள்.

மறுகணம் புரொபசர் அவள் கன்னத்தில் 'பளார்' என்று ஒரு அறை விட்டார். "நீ யாரைப் பற்றி வேண்டுமானுலும் திட்டு! ஆனல் என் மனைவியைப் பற்றிப் பேசினுல் "அறைதான் விழும்!"

—என்று சொல்லிக்கொண்டே பேசாமல் நடந்தார்.

வழக்கறிஞர் எத்தனை பணிவாகவும் சாமர்த்தியமாகவும் கேள்விகளைக் கேட்டும் கொள்ளிச் சாமியாரிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை.

வழக்கு மறுநாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குளத்தங்கரை மாநாடு கூடிற்று.

"அப்போதே சொன்னேன் அல்லவா, இந்த சாத்தப்பன்மீது உள்ள குற்றத்தை ருஜுப்படுத்துவது கடினம் என்பதாக! கோர்ட் திணறுவதைப் பார்த்தீர்களல்லவா என்று குத்தாலம் கேட்டார்.

"என்னமோ இதிலே சூது இருக்கத்தான் செய்யுது. பெரிய வேதாந்தம் பேசுகிருனே அந்தச் சாமியார் —என்று மகமது கூறினுன்.

* * *

"இந்தச் சாமிக்கு என்ன பைத்யமா......கேட்கிற கேள்விக்குத் தாறுமாரு பதில் பேசுதே......தத்துவம் பேசற இடமா, கோர்ட்டு.........."

'போய்க்கேள் அந்தச் சாமியாரை........என்னைக் கேட்டா......"

எப்பவும் இப்படித்தானு, ஏடாகூடமான பேச்சு... இப்ப இந்தச் சாமியாரு ஒரு வாக்குமூலமும் கொடுக்காதுபோனு, உங்க அண்ணனைத் தண்டிக்கமுடியாது. இல்லையா......

ஏன் எங்க அண்ணன் கட்டாயமாக தண்டிக்கப்பட்டாகவேண்டுமா......

குற்றத்தைச் செய்தவங்க தண்டனையை அனுபவிக்கத்தானே வேணும். அதுதானே நியாயம்......

நியாயத்தை அப்படியே கரைத்துக் குடித்துவிட்டதுபோலப் பேசாதே.

முத்துமாலை, உங்க அண்ணனிடம் இருந்தது தானே. அது கொள்ளைபோன பொருள்தானே.

நீ சொல்லுற அப்படி. கொள்ளை அடிக்கப்பட்ட பொருள் என்று.

நான் மட்டுமா சொல்கிறேன். இந்த ஊரே சொல்லுது.

ஆனு எந்தச் சாமியார் மடத்திலே இருந்து இந்தப் பொருள் கொள்ளை அடிக்கப்பட்டதாகக் கூறப்படுதோ, அந்தச் சாமியார் அப்படிச் சொன்னுத் தானே......

பார்! பார்! அந்தச் சாமியாருடைய வாயிலே இருந்து உண்மை கக்கிக்கொண்டு வருதா இல்லையான்னு. கோர்ட்டா, கொக்கா! போதும் உன்னுடை ஞானுேபதேசம், உண்மையைச் சொல்லய்யான்னு போடுவாங்க பத்து; முதுகிலேயும் கன்னத்திலேயும்.

தங்கப்பனுக்கும் அவன் மனைவிக்கும் இப்படி ஒரு வாக்குவாதம்.

எவ்வளவு பெரிய குற்றம் செய்தவனுக இருந்தாலும் அண்ணனிடம் ஒரு பாசம் இருக்கத்தானே செய்கிறது என்று எண்ணி தருமு, தன் கணவனுடைய சிலாக்கியமான குணத்தைப்பற்றி வேலையாட்களிடம் எடுத்துப் பேசக் கேட்ட தங்கப்பனின் முகத்தில் வேதனைக் குறிகள் மேலும் ஆழமாகப் பதிந்திடலாயின.

* * *

ஒருவிஷயம் தெரியுமா உங்களுக்கு...டிரைவரிடம் வெகு கஷ்டப்பட்டு தெரிந்துகொண்டு வந்திருக்கிறேன் ஒரு தகவல் என்று பேச்சைத் துவக்கினுன் மகமது.

அவன் பெரிய அழுத்தக்காரனுச்சே, ஒரு தக வலும் கொடுப்பதில்லையே......

அவனு கொடுத்தான்! அமிர்தா ஓட்டல் ஸ்வீட்டும் காரமும், 'டிகிரி' காபியுமல்லவா கொடுத்தது என்று கூறிவிட்டுச் சிரித்தான். மேலும் விவரம் தரலானுன். முடியவே முடியாது, வேண்டவே வேண்டாமென்றுதான் டிரைவர் சொன்னுன், ஆனுல் மிகவும் வற்புறுத்தி அமிர்தா ஓட்டலுக்கு அழைத்துக்கொண்டு போனேன்......அப்போது வேறு பல விஷயங்களைப் பற்றிப் பேசிப்பேசி பக்குவப்படுத்தி, கடைசியில் முக்கியமான ஒரு தகவலைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன், அது என்னவென்றுல், இந்த டிரைவரிடம் தங்கப்பனுக்கு ஏகப்பட்ட பயமாம்—அவன் சொல்கிறுன். என் எஜமானர் சாத்தப்பனுடைய கால்தூசுக்குக்கூட சமமாக மாட்டார் உங்கள் தங்கப்பன். இவ்வளவு எதற்கு, என்னைக்கண்டாலேகூட உங்கள் தங்கப்பனுக்குப்பயம், வெட்கம் என்கிறுன் என்று மகமுது சொன்னுன்.

இது பெரிய புதிர்தானப்பா! நீ சொல்வதைப் பார்த்தால் இந்த டிரைவருக்கும் தங்கப்பனுக்கும் ஏற்கனவே பழக்கம் இருக்கவேண்டும்போல அல்லவா இருக்கிறது என்றுர் குத்தாலம்; கூறிவிட்டு நான் அப்போதேசொன்னேனே கவனமிருக்கிறதல்லவா, தங்கப்பன் இந்த டிரைவரிடம் அதிக அளவு மரியாதை காட்டுகிறுன், தேவையில்லாத அளவு மரியாதை! என்றுகூறினுன்.

* * *

தம்பி கூடத்தான்' சொல்கிறுன் ஜாமினில் போகலாம். ஏற்பாடு செய்கிறேன் என்று. ஆனுல் நான்தான் வேண்டாம் என்று கூறிவிட்டேன் என்று சாத்தப்பன் சிறையிலிருந்த தன் சகாக்களிடம் கூறினுன். வெளியே சென்றுல் வழக்கை நடத்த 'தோதாக' இருக்குமே என்று சிலர் கூறியபோதுகூட சாத்தப்பன், அதெல்லாம் என்டிரைவர் வெளியே இருக்கிறுன், கவனித்துக் கொள்வான் என்று சமாதானம் கூறினுன்.

* * *

வழக்கு மன்றத்தில், சுவாமிகளிடம் எந்த வாக்கு மூலமும் வாங்கமுடியாத நிலையே நீடித்துக்கொண்டிருந்தது. சாத்தப்பனைக் காட்டி வழக்கறிஞர்

"சுவாமிகளே இவரைத்தெரியுமா உங்களுக்கு. இவர் பெயர், தொழில், இவைபற்றிய விவரம்கூற முடியுமா? இவர் தங்கள்மடத்திற்கு வந்ததுண்டா? என்றெல்லாம் கேள்விக் கணைகளை விடுத்தார். சாமிகள் இவர்யார்? நான்யார்? நீ யார்? எல்லோரும் அவன் பிள்ளைகள்! அவனே யாருக்கும் பிள்ளை அல்ல! அவன் ஆட்டுவிக்கிறுன், நாம் எல்லோரும் ஆடுகிறேம். அவன் அடக்கினுல் எல்லோரும் அடங்குகிறேம். சூரியனை அடக்குகிறுன். சந்திரனைத் தேய்க்கிறுன், அலையை எழுப்புகிறுன் — ஆயிரத்தெட்டு அற்புதங்களையும் 'ஐயன்! செய்கிறுன். முத்துமாலையைத் தருபவனும் அவனே, அதைக் களவு போகச் செய்பவனும் அவனே! கூண்டில் நிற்பவனுக்கும் அவன்தான் பொறுப்பு, எதிரே நிற்பவர்களுக்கும் அவன்தான் பொறுப்பு-என்று பழயபடியேதான்பதில் அளித்துவந்தார். ஒருகட்டத்தில், நீதிபதிக்கே கோபம் பிறந்து, கேள்விகளுக்குப் பொறுப்பான முறையில் பதில் அளிக்காவிட்டால் கோர்ட்டை அவமதித்ததாகக்குற்றம்சாட்டப்பட்டு, அதற்குரியதண்டனை தரப்படும் என்று கூற நேரிட்டது. அப்போது 'சுவாமிகள்' இடி இடியெனச் சிரித்து, அதுவரை அந்தக் கோர்ட்டும் நீதிபதியும் கேட்டறியாத வேதாந்தப் பேச்சினைப் பொழிந்து தள்ளினுர்.

* * *

என்ன இருந்தாலும் அண்ணன் தம்பி என்ற பாசம் விடாது என்பார்களே, அது உண்மைதான். பாரேன், தங்கப்பன் இந்த வழக்கு முடியும் வரையில் 'லீவ்' போட்டுவிட்டு இங்கேயே தங்கிவிட்டிருக்கிறுன் என்று குத்தாலம் பேச்சைத் துவக்கினுர்.

அதிசயம் அதிலே கூட இல்லை; வழக்கு மன்றந்திலே சாத்தப்பனும் தங்கப்பனும் ஒருவரைஒருவர்பார்த்துக்கொள்ளும் பார்வையைக் கவனித்தீர்களா.......சாத்தப்பன் பரிதாபத்துடன் பார்க்கிறுன் தங்கப்பனை, தங்கப்பன் பார்வையிலே பயம் தெரிகிறது. இது அதிசயமில்லையா என்று சின்னப்பன் கேட்டார்.

பயத்துக்குக் காரணம் வேறு ஒன்றும் இல்லை, சாத்தப்பன் தண்டிக்கப்பட்டுவிட்டால், தனக்கும் தன் குடும்பத்துக்கும் கெட்ட பெயர் ஏற்படுமே என்பதுபற்றி ஏற்பட்ட பயமாகத்தான் இருக்கும் என்று குத்தாலம் விளக்கமளித்தார்.

* * *

நீங்கள் எதற்காகப் பயப்பட வேண்டும். ஒரே மரத்திலே ஒரு பழம் ருசியாகவும் மற்றொரு பழம் புளிப்பாகவும் இருப்பதை உலகம் காணவில்லையா. அதைப் போல இந்தக் குடும்பத்திலே இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு போகிறார்கள். அண்ணனுக்கு பெயர் கெட்டுவிட்டால் நமக்கும்தானே கெட்ட பெயர் என்று ஏன் எண்ணி வீணாக மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறீர்கள். விட்டுத் தள்ளுங்கள் என்று தர்மு கூறிடக் கேட்ட தங்கப்பன், ஒரு விஷயத்தை ஒத்துக் கொள்கிறேன் தர்மு—உனக்கு இருக்கும் நெஞ்சழுத்தம் எனக்கு இல்லை. உன்னாலே ஒரு பொருளை விரும்பவும் முடியும், பிறகு அதே பொருளை வெறுக்கவும் முடியும். இரண்டுக்கும் உன் மனம் இடம் கொடுக்கும். அந்தத் துணிவு எனக்கு இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன் என்றான் துக்கம் தோய்ந்த குரலில்.

புரிகிறது, புரிகிறது, நீங்கள் எங்கே பொடி வைத்துப் பேசுகிறீர்கள் என்பது. நான் ஒன்றும் முட்டாள் அல்ல, இதைக் கூடப் புரிந்து கொள்ளாமலிருக்க. முதலிலே உங்கள் அண்ணனோடு பழகினேன், அவரைக் கலியாணம் செய்துகொள்ளச் சம்மதித்திருந்தேன். பிறகு என் விருப்பத்தை மாற்றிக்கொண்டு, உங்களை ஏற்றுக்கொண்டேன். அதைத் துணிச்சல் என்று கூறுகிறீர்கள். பைத்யம், பைத்யம். எல்லாம் உங்கள் அண்ணனுக்கே தெரியும், என் விருப்பம் என்ன என்பது என்றாள் தருமு.

இது என்ன புதுக்கரடி விடுகிறாய் என்று கேட்டான் தங்கப்பன்.

கரடியுமில்லே, காவடியுமில்லே. உண்மையைத்தான் சொல்லுகிறேன். எனக்கு ஆரம்ப முதலே உம்மிடம்தான் உண்மையான அன்பு. அப்பா, அண்ணனைத் தேர்ந்தெடுத்ததால், தலை அசைக்க வேண்டி இருந்தது. தலை மட்டும்தான் அசைந்தது, உள்ளம் அல்ல. எப்படியாவது என் உண்மையான விருப்பத்தை உங்கள் அண்ணனிடம் தெரிவித்துவிடவேண்டும் என்று முயற்சிசெய்தேன். கடைசியில் அதிலே வெற்றியும் பெற்றேன். ரசவாதி ரங்கலாலை மறந்து விடவில்லையல்லவா. அவனுடன் இருந்தாளே ஒரு பெண், கவனமிருக்கிறதல்லவா 'மைக்கண்ணி' அவளிடம் இதைப் பற்றிப் பேசினேன்—உன் அண்ணன் காதிலே விழுகிற முறையில். அதைக் கேட்ட பிறகுதான், உன் அண்ணன், எங்கள் வீட்டுக்கு வருவதைக் குறைத்துக் கொண்டார். ஊரும், என் அப்பாவும் வேறு ஏதேதோ காரணம் இருப்பதாகப் பேசிக்கொண்டார்கள். உண்மையான காரணம், நான் உங்களைத்தான் விரும்புகிறேன் என்பதை நானே பக்குவமாக உங்கள் அண்ணன் காதிலே விழும்படிச் செய்தது தான் என்று கூறிவிட்டு, தருமு எப்படி என் சாமர்த்தியம், உங்களுக்கு உண்டா அப்படிப்பட்ட சாமர்த்தியம்!—என்று கேலிப் புன்னகையை உதிர்த்துக் கொண்டே கேட்டாள். தங்கப்பன் கண்களில் நீர்த் திவலைகள் தோன்றின. 'தருமு! உன்னுடைய சாமர்த்தியமும் என்னுடைய சாமர்த்தியமும் ஒரு புறம் இருக்கட்டும். என் அண்ணனுடைய தியாக சுபாவத்தைப் பார்த்தாயா...எனக்காகத் தனக்குக் கிடைக்க இருந்த நிலையை இழந்துவிடச் சம்மதித்ததைக் கவனித்தாயா! துளியும் மனம் கோணாமல், தன்மீது வேண்டுமானால் ஏதாவது பழி ஏற்பட்டுவிட்டுப் போகட்டும் தன் தம்பியின் விருப்பம் நிறைவேற வேண்டும் என்றல்லவா என் அண்ணன் எண்ணி நடந்துகொண்டார். உத்தமர்களால் மட்டுந்தானே அது முடியும் என்று உருக்கமாகக் கூறினான்.

தம்பியின் விருப்பம் என்று கூறினீர்களே, அப்படியென்றால், உங்களுக்கும் என்மீது அன்பு என்று சொல்கிறீர்கள்.

வெறும் அன்பு அல்ல; காதல்; உயிர். ஒவ்வொரு கணமும் துடித்தபடி இருந்தேன். உன் அப்பா, உன்னை எனக்கு 'அண்ணி' ஆக்குவது என்று தீர்மானமாக இருப்பதையும் என் அண்ணன் அதற்கு இணங்குவதையும் கண்டு பதறினேன். மீறிட வழிஇல்லை. மனதைத் திறந்து கூறத் துணிவு இல்லை. நீயோ, என் அண்ணனிடம் உன் மனதையே பறிகொடுத்து விட்டவள்போல நடந்துகொள்வதைக் கண்டேன். எங்காவது ஓடிவிடுவது என்று முடிவு செய்தேன்......கடைசியில் நான் அல்ல, அவர் ஓடினார் ஊரை விட்டு; பழி ஏற்றுக் கொண்டு...உன்னை நான் அடைந்தேன் ... அவர் இப்போது கள்ளன் என்ற பெயருடன் கோர்ட்டிலே நிற்கிறார். எல்லாம் எனக்கு மனத் துணிவு இல்லாததால், ஆனால் இனி அப்படி இருக்கப் போவதில்லை—என்று உறுதி கலந்த குரலில் பேசினான். தருமு அந்தக் குரலில் இருந்த உறுதியைக் கவனிக்கவில்லை, தங்கப்பன் தன்னிடம் காதல்கொண்டு துடிதுடித்துக் கிடந்ததாகக் கூறினானே அதைக் கேட்டதாலே எழுந்த உருக்கத்தின் பிடியிலே இருந்தாள்.

"என்னங்க...நான்தான் 'மைக்கண்ணி'யிடம் என் விருப்பத்தைப் பேசி அவர் காதில் விழும்படியாகச் செய்தேன்; நீங்கள் எப்படி உங்கள் எண்ணம் அவர் காதில் விழும்படிச் செய்தீர்கள் என்று கேட்கலானாள்.

எல்லாம் அதே மைக்கண்ணி மூலமாகத்தான், உன்னுடைய விருப்பத்தைப் பற்றி என்னிடம் விசாரித்தாள். அண்ணன் ஏற்பாடு என்றுதான் எண்ணுகிறேன். நானும் துணிந்து கூறிவிட்டேன், எங்காவது கண்காணா தேசத்துக்கு ஓடிவிடப் போகிறேன் என்பதாக. அப்போது அந்த மைக்கண்ணி விளையாட்டுக்காகப் பேசுவதாக எண்ணிக்கொண்டேன். அவள் சொன்னாள், நீங்கள் ஏன் ஓடவேண்டும், உங்கள் அண்ணனை இழுத்துக்கொண்டு நான் ஓடிவிடுகிறேன் என்பதாக.

முதல் ஐந்து பேர்

யார் யாரைப் பற்றிய புத்தகங்கள் உலகில் அதிகமாக வந்திருக்கின்றன? இதை ஆராய்ந்து கணக்கெடுத்தவர்கள் வெளியிட்டுருக்கும் தகவல்படி முதல் ஐந்து பேர்களில் ஒருவர் மதத்துறையைச் சேர்ந்தவர் இருவர் அமெரிக்க ஜனாதிபதிகள். ஒருவர் எழுத்தாளர். ஒருவர் சக்கரவர்த்தி

அந்த ஐந்து பேர்

ஏசு கிரிஸ்து	5152	புத்தகங்கள்
வில்லியம் ஷேக்ஸ் பியர்	3172	,,
அபிரஹாம் லிங்கன்	2319	,,
ஜார்ஜ் வாஷிங்டன்	1755	,,
நெப்போலியன்	1735	,,

கடைசியில் அப்படியே அல்லவா நடந்துவிட்டது.

எப்படி நடந்தது? நம் இருவருக்கும் திருமணம் நடந்தது. அண்ணன், என்ன அந்த மைக்கண்ணியுடனு வாழ்க்கை நடத்துகிருர். இவள் வேறு எங்கோ சென்று விட்டாள். அண்ணன் திருமணமே செய்து கொள்ள வில்லையே...என்று கூறிக்கொண்டே, பெருமூச் செறிந்தான்.

* * *

மடாலய மானேஜர், முத்துமாலை, மடாலயத்துடையது என்பதுபற்றியும், வேறு சில பொருள்களும் இந்த மாலையுடன் களவாடப்பட்டதாகவும், அதனைக் கொள்ளை என்றே கூறலாம் என்றும், ஏனெனில் மடாதிபதியிடம் 'உபதேசம்' பெறுபவனைப்போல வந்த ஒருவன், நகைப் பேழையைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டதாகவும், விவரம் கூறினுன்.

மடாதிபதியின் வாக்குமூலம் சாதகமளிக்காத போது மானேஜரின் வாக்குமூலத்தைக் கொண்டு மட்டும், முத்துமாலை மடாலயச்சொத்து என்று தீர்மானிக்க சட்டம் இடம் கொடுக்குமா என்பதுபற்றி சுவையாக ஊரிலேயே பேசப்பட்டபோது, குளத்தங்கரை மாநாட்டிலேயா நடைபெறுமவிருக்கும்.

* * *

வேறு இடங்களில் சட்டம்பற்றிய சுவையான விவாதம் நடந்துகொண்டிருந்தபோது, தங்கப்பன் அறையில் சூடான பேச்சு, டிரைவரிடம் நடைபெற்றது.

"என்னிடம் ஒரு முழக்கயிறு கொடுத்துவிட்டு, பிறகு உன் விருப்பம்போல நடந்துகொள். வேறு நான் என்ன சொல்லமுடியும். உன்னைத் தடுத்து நிறுத்த எனக்கு என்ன உரிமை இருக்கிறது. வருவது வந்து தான்தீரும். நடப்பது நடக்கட்டும். ஆனுல் நடைபெறக் கூடாதது நடைபெறுவதற்குள் நான் கண்ணை மூடிக் கொள்ள முடிவு செய்துவிட்டேன். கடைசி முறையாகக் கேட்கிறேன். நீ கோர்ட்டிலே சாட்சி கூறத்தான்போகிருயா? அண்ணனுடைய சம்மதத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டாயா......"

'உங்கள் அண்ணனுடன் தொடர்பு ஏற்பட்ட நாளிலிருந்து அவர் சம்மதம் பெருமல் நான் எந்தக் காரியத்தையும் செய்ததில்லை. இப்போதும் அப்படித் தான்......"

"கோர்ட்டிலே, என்னதான் சொல்லப்போகிருய்...........?"

"வேடிக்கையான கேள்வியைக் கேட்கிறீர்களே. கோர்ட்டிலே என்ன சொல்லுவேன்? உண்மையைத்தான்...!"

'உண்மையை......சரி.......உண்மையைச் சொல்லு......என் உயிரைக்குடி... ஊர் இழிவு பேசட்டும்...என்ன வேண்டுமானுலும் பேசட்டும்...எனக்குக் கவலை இல்லை......நான் ஏன் கவலைப்படவேண்டும்......எதற்காகக் கவலை...நான் என்ற நிலை இருந்தால்தானே...கவலைப்படுவதற்குத் தேவையான உணர்ச்சியுள்ள உருவம் இருந்தால்தானே......"

'பரவாயில்லையே! மடாலயத்தில் இல்லாமலேயே மடாலயப் பேச்சுப் பேசுகிறீரே...வழக்கறிஞர் தொழில் பார்த்ததைவிட, மடாதிபதி வேலையைப் பார்த்திருக்கலாம்போல இருக்கிறதே. வேதாந்தமே பேசுகிறீரே. செய்வதை எல்லாம் செய்துவிட்டு, சிக்கிக்கொள்கிற போது, இந்த வேதாந்தம் எங்கிருந்தோ வந்து சேர்ந்து கொள்கிறது பலபேர்களிடம்......பேசுமய்யா பேசும்... எல்லா வேதாந்தத்தையும் ஒரே அடியாகப் பேசி விடும்........"

தங்கப்பனுல், டிரைவரிடம் தொடர்ந்து பேச முடியவில்லை.

* * *

"இந்த முத்துமாலையைப்பற்றிய விவரம் தெரியுமா உனக்கு......"

"தெரிந்த விவரத்தைக் கூறத்தான் வந்திருக்கிறேன்."

"என்ன விவரம் கூறப்போகிருய் இந்த முத்து மாலைபற்றி......"

"இது 64-நல்முத்துக்கள்கொண்ட மாலை. அதிலே ஆறு முத்து சொத்தை. மொத்தத்திலே தரமான மாலை......"

"நகைக்கடை அல்லய்யா இது. கோர்ட்......குற்றவாளிகளைப் பற்றிய விசாரணை நடக்கிற இடம்...நகைக் கடை அல்ல......"

"இது நகைக்கடை அல்ல என்பதாலேதான், நகைபற்றிய விவரம் உங்களுக்குத் தெரிந்திருக்காதே என்று இதனைச் சொல்லுகிறேன். மாலையின் விலைமதிப்பு ஏழாயிரம் ரூபாய் இருக்கும்."

"முத்துமாலையின் விலைபற்றிய கேள்வியே இங்கே எழவில்லை. இதுபற்றி......வழக்குக்குத் தொடர்பான விவரம் கூறலாம்......நகை வியாபார விவரம் தேவை யில்லை......"



"ஐயா! எனக்கு அதுதேவை. நான் ஒருநகைவியாபாரி, ஐயா!"

"சாத்தப்பனுடைய மோடார் டிரைவர் அல்லவா ...."

"சாத்தப்பரிடம் மோடார் டிரைவர் வேலை பார்க்கிறேன் ......நகை வியாபாரத்திலே பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விட்டதனால்...ஏன் ......இந்த மாலையாலேகூட எனக்கு கஷ்டம், நஷ்டம், ஏராளம்."

"இந்த மாலைக்கும் உனக்கும் என்ன தொடர்பு ......"

"இந்த மாலையைக் கொடுத்ததே நான்தானே .... என்னிடமிருந்து இந்த மாலையைப் பெற்றுக் கொண்டவரும் இங்கே தானே இருக்கிறார்"

"என்ன! என்ன! தண்ணீர்! தண்ணீர்! மெள்ள! மெள்ள!— என்று பலரும் பதறிக் கூறினர், தங்கப்பன் திடீலென்று மயக்கமாகிக் கீழே விழுந்துவிட்டதுகண்டு, வழக்கு மன்றத்திலே மிகுந்த பரபரப்பு ஏற்பட்டு விட்டது.

மனதிற்கு ஏதோ அதிர்ச்சி! அதனால் ஏற்பட்ட மயக்கம்; உயிருக்கு ஆபத்து ஏதும் இல்லை...... என்று கூறினர்கள், தங்கப்பனை கோர்ட்டிலிருந்துமருத்துவ விடுதிக்கு எடுத்துச் சென்றபோது.

*

அப்போதே சொன்னேன் கவனமிருக்கிறதல்லவா; இந்த டிரைவர் டிரைவரல்ல; டிரைவராக வேலைபார்க்கிறானேயொழிய, இவன் சாத்தப்பனுடன் சரிசமமாகப் பழகுகிறான். ஆசாமி வெறும் வேலையாளாக இருக்க முடியாது என்று......எனக் குத்தாலம் கூறினார்.

அவனோட சாட்சியம்வந்ததும் கேசு தூள்தூளாகி விட்டதே.

ஆகாமலிருக்குமா......நான்தான் அப்போதே சொன்னேனே. இந்தக் கேசு சாத்தப்பனை ஒன்றும் செய்யாது என்பதாக.

ஆமாம்...முத்துமாலையை சாத்தப்பனிடம் விலைக்கு விற்றதற்கான ரசீதும் தானே காட்டினான்.........

அது சரி...இவ்வளவு எளிதாக விஷயம் இருக்கும் போது, சாத்தப்பன் ஏன் எடுத்த எடுப்பிலேயே இதை அதிகாரிகளிடம் சொல்லியிருக்கக் கூடாது. ஜெயிலுக்குப் போயிருக்கவேண்டிய அவசியமே இல்லையே......

குளத்தங்கரை மாநாட்டில் இந்தப் பிரச்சினை எழுந்தது; விவாதம் தொடர்ந்தது; முடிவு கண்டறியப்பட வில்லை. ஆனால் வேறோர் இடத்திலே நடைபெற்ற பேச்சிலே இதற்கு ஒரு விளக்கம் பிறந்தது.

"தம்பி! எப்படியோ, சாமர்த்தியமாக என்னிடம் நகையை அவன் விற்றான் என்பதைக் கண்டறிந்து, அவனையும் கோர்ட்டிலே அதை ஒப்புக் கொள்ளும்படியாகச் செய்து, என்னைக் காப்பாற்றினாய். அண்ணனிடம் உனக்கு உள்ள பற்றும் பாசமும் அப்படிப் பட்டது..."

"அண்ணா! அண்ணா! என்னைக் கொல்லாதே! வேண்டாம் இந்த சித்திரவதை! வேண்டாம் அண்ணா! இனியும் தாங்கிக் கொள்ளும் சக்தி எனக்கு இல்லை..."

'மனதைக் குழப்பிக் கொள்ளாதே...உன் சாமர்த்தியமான தலையீட்டினால்தான், துப்பு துலங்கிற்று, என்று பத்திரிகைகள் பாராட்டி எழுதி இருக்கின்றன... இதோ பார்...பெரிய பெரிய தலைப்புகளுடன் செய்தி வந்திருக்கிறது. தம்பி! முதலிலே அவன் மிகவும் பிடிவாதம் செய்தானாமே...ஒப்புக் கொள்ளவே மாட்டேன் என்றானாமே...எப்படி அவனை உன் வழிக்குக் கொண்டு வந்தாய்..."

தங்கப்பனுக்கு கண்ணீர் கொப்பளித்துக் கொண்டு வந்தது. அலறினான் பதறிப்போய், அங்கு வந்த பெரிய டாக்டர் சாத்தப்பனிடம் மரியாதையுடன், "விவரம் தெரிந்த நீங்களெல்லாமா, இப்படி நடந்து கொள்வது. இவருக்குத் துளியும் மன அதிர்ச்சியே ஏற்படக் கூடாது ஆபத்து அடியோடு நீங்கிவிட்ட நிலையில் அவர் இல்லை ஆகவே அதிகம் பேசக் கூடாது. மன்னிக்கவேண்டும், இனியும் இங்கு இருந்து பேசிக் கொண்டிருக்க அனுமதிப்பதற்கு இல்லை. டாக்டர்கள், தங்களை இவ்வளவு நேரம் அனுமதித்ததே தவறு...பெருந்தவறு...என்று கூறியதுடன், சாத்தப்பனை வெளியே அழைத்துச் சென்று விட்டார்.

* * *

டிரைவர், முன்னாளில் நகை வியாபாரியாக இருந்தவர்; நொடித்துப் போனவர்; சாத்தப்பனிடம் பல நகைகள் விற்றிருக்கிறார்; நொடித்துப் போனவருக்கு சாத்தப்பன் தன்னிடமே வேலையும் கொடுத்து வைத்துக், கொண்டு ஆதரித்து வருகிறார் என்ற செய்தி பரவி குளத்தங்கரை மாநாட்டில், மறுபடியும் குத்தாலம் நான்

அப்போதே சொன்னேன் அல்லவா. சாத்தப்பன் பெரிய மனிதன், அலாதியான பெருந்தன்மைக் குணம் அவனுக்கு என்று பேசிடலானர்.

சாத்தப்பனுடைய குணதிசயம் இருக்கட்டும் தம்பி தங்கப்பனுடைய குணம் என்ன சாமான்யப்பட்டதா! அண்ணன் இன்று கௌரவமாக வெளியே உலாவ யார் காரணம்? தங்கப்பன் அல்லவா...டிரைவர் சாட்சியம் எப்படிக் கிடைத்தது? தங்கப்பன் திறமையாலே அல்லவா என்று அர்ச்சித்தார்.

உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கணும் என் பார்களே. இந்த நகை வியாபாரி நொடித்துப்போன நிலையிலே வேலை கொடுத்து சாத்தப்பன் ஆதரித்து இருக்கிருரே, அப்படியிருக்கும்போது, முத்துமாலை விஷயமாக அவர் பேரிலே ஒரு அபாண்டம் விழுந்த போது இவனல்லவா முந்திக் கொண்டு போய் போலீசிலே சொல்லியிருக்க வேண்டும், ஐயா! முத்துமாலை களவுப் பொருள் அல்ல...அது நான் அவருக்கு இன்ன நாளிலே இன்ன விலைக்கு விற்றிருக்கிறேன் என்று, ஏன் சொல்லவில்லை...

அது என்னத்தாலே தெரியுமாய்யா...சொல்றேன் கேள்...வாழ்ந்து கெட்டவங்க இருக்கருங்க பாரு... அவங்களோட சுபாவம் ஒரு மாதிரியா ஆகிடும்...சாத்தப்பன் வேலை கொடுத்து உதவி செய்தாரு...அதனலே அவரிடம் அன்பு, மரியாதை இதெல்லாம்தானே ஏற்படவேண்டும் இந்த டிரைவரோட மனதிலே என்று யோசிக்கறே, ஆனு இந்த மாதிரி சிலபேருக்கு, நாம் எவ்வளவு செல்வாக்கோடு வாழ்ந்து கொண்டிருந்தோம் நமக்கு இன்று இந்தக் கதி ஏற்பட்டுவிட்டதே; இவனிடம் கைகட்டி சேவகம் செய்யும்படியான நிலை வந்திருக்குதே, இவனே கூட பலபேரிடம், யார் தெரியுமா நம்ம டிரைவர்? நகை வியாபாரம் செய்து 'ஓகோ'ன்னு வாழ்ந்து வந்தாரே நாகலிங்கம், அதே ஆசாமிதான் என்று சொல்லாமலா இருப்பான்; எத்தனை பேர் அதைக் கேட்டுக் கேலியாகச் சிரித்திருப்பார்கள் என்றெல்லாம் எண்ணி எண்ணி அருவருப்பு பொருமை கொண்ட மனம் ஏற்பட்டுவிடும். எப்படியோ ஆசாமி சிக்கிக் கொண்டான்; நமக்கு வந்த தாழ்வு இவனுக்கும் வரட்டும் என்று ஒரு நினைப்பு வந்திருக்கும் அதனலேதான், சாத்தப்பனைக் காப்பாற்றும் ருஜூ தன்னிடம் இருந்தும் டிரைவர், ஒதுங்கிக்கொண்டு வேடிக்கைப் பார்த்திருக்கிருன்.

எனக்கு முதலிலே இருந்தே அவனிடம் ஒரு சந்தேகம் உண்டு. நடந்ததை எல்லாம் பார்க்கிறபோது, என் மனதிலே டிரைவரைப்பற்றி முதலிலே தோன்றிய எண்ணம் சரியானது என்று தெரியுது.

எல்லா விவரமும் இருக்கட்டும்......முத்துமாலை மடாலயத்துது என்பது விளங்கிவிட்டது. இது இந்த நகை வியாபாரியிடம் எப்படி வந்தது. சாத்தப்பனுக்கு இவன் கொடுத்தான். ஆதாரம் காட்டிருங்க. ஆனு இந்த நகை வியாபாரியிடம் இந்த முத்துமாலை வந்த விதம்?

அதற்கும் ஒரு கணக்குக் காட்டியிருக்காங்களே... வேறே ஒரு நகை வியாபாரி இந்த நகை வியாபாரிக்கு விற்றதாக...

யாரு அவன்...எங்கே இருக்கிருன்...

அது இனித்தான் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும். இப்போதைக்கு, சாத்தப்பன் பேரிலே உள்ள பழி நீங்கி விட்டது...நகை வியாபாரி, முத்துமாலையை யாரிடம் தான் வாங்கியதாகச் சொல்லியிக்கிருனே அதுபற்றி தகவல் விசாரித்துக் கொண்டு இருக்கிருங்க... வேறே என்ன செய்யறது...

டிரைவர் பேர்லே போலீஸ் ஒரு 'கண்' வைத்தபடிதான் இருப்பாங்க.....இல்லையா...?

ஆமாம், ஆமாம் பார்வை விழுந்தபடிதான் இருக்கும்.

கொள்ளிச்சாமியார் மடத்திலே கொள்ளை நடந்தபோது, அவனுக்கு 'வக்கீலாக' இருந்தவர் ஒருவர் உண்டாமே....அவரிடம் போய்க் கூடத் தகவல் விசாரித்தார்களாமே...

விசாரிக்கப் போனுர்கள். ஆனுல் பாவம் அந்த வக்கீல் முடக்குவியாதி ஏற்பட்டு, பேச முடியாத நிலையில் இருக்கிருராம்........ வழக்கு சம்பந்தமான கட்டுகளைப் படித்ததிலே, பிடிபட்டவன் தக்க ருஜூ இல்லாததாலே விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிகிறதாம்...

முடக்குவியாதி மட்டும் வராமலிருந்திருந்தா, அந்த வக்கீல் இப்ப, பெரிய ஜட்ஜூ ஆகியிருந்திருப்பாராமே......

அப்படித்தான் கேள்வி. அவரிடம் வேலை கற்றுக்கொண்டவர்களெல்லாமே, இன்றைக்கு பெரிய நிலையிலே இருப்பதாகக் கேள்வி.

•

இரத்தத்தால் எழுதிய சொற்கள்!

மூடநம்பிக்கை மனிதனை எந்தெந்தச் செயலுக்கோ தூண்டி விடுகிறது.

ஜப்பான் நாட்டுச் சக்கரவர்த்தியாக இருந்த சுட்டோகு (1124—1164) என்பவர் நாடு கடத்தப்பட்டார்.

அப்போது அவர் என்னசெய்தார் தெரியுமா?

தப்பிப்பதற்கு ஏதாவது வழி செய்தாரா?

இல்லை; இல்லை.

'லங்கவர சூத்ரா' என்னும் வேதப் புத்தகத்தைப் பார்த்து 'காப்பி' எடுத்தார்.

சிறைச்சாலையிலே மசி கிடையாதல்லவா?

அதனால் அவர் தனது இரத்தத்தை மசியாக உபயோகித்தே அதை எழுதினார்.

—அப்படி இரத்தத்தால் எழுதப்பட்ட அந்தப் புத்தகம் 135 பக்கங்களையும், 1215 வரிகளையும், 10,000 வார்த்தைகளையும் கொண்டது.

—இப்படி யெல்லாம் செய்தால்தான் புத்தபகவான் மீண்டும் தன்னைச் சக்கரவர்த்தியாக்குவாரென்பது அவர் நம்பிக்கை!

நாட்கள் பல உருண்டோடின. வேறு பரபரப்பூட்டும் செய்திகள் குளத்தங்கரை மாநாட்டுக்குக் கிடைக்கவில்லை. தங்கப்பன் உடல் நலம் முழுவதும் பெறவில்லை என்றாலும் இனி உயிருக்கு ஆபத்து இல்லை என்ற நிலை பிறந்தது. தர்முவின் தாலி பாக்கியத்தை ஊர் மெச்சிக் கொண்டது.

அண்ணன்:பேரிலே ஏற்பட்ட அபாண்டத்தாலே தங்கப்பன் மனம் அதிர்ச்சி அடைந்தது, என்று ஊர் பேசிக்கொண்டது.

வடிவு தங்கப்பனைக் காண வந்திருந்தாள்; உடன் வந்திருந்த அவள் கணவன் போலீஸ் இன்ஸ்பெக்டர், சாத்தப்பனைக் காணவே கூச்சப்பட்டான்.

"என் கடமையைச் செய்தேன்......மன்னிக்க வேண்டும்..."

'மன்னிக்க வேண்டும் என்று சொல்லாதே...... மதிக்கவேண்டும் என்று சொல்லப்பா! உன்னிடம் எனக்கு உண்மையான மதிப்பு ஏற்பட்டதற்குக் காரணமே, உன் கடமையை, தாட்சணியத்துக்குக் கட்டுப்படாமல் செய்தாய் என்பதாலேதான்..."

"ஆனால் கடைசியில் பார்க்கப்போனால், வீண் சந்தேகம் கொண்டதுதான் மிச்சமாகிறது...அவசரப் பட்டுவிட்டேன்......மேலதிகாரிகளிடம் சொல்லுவதற்கு முன்பு, நானே நேரிலே வந்து உங்களிடமே விசாரித்திருந்திருந்தால் இத்தனை விபரீதம் நடந்திருக்காது..."

'உன்னுடைய நேர்மையையும் துணிவையும் உலகு உணர இந்தச்சம்பவம் பயன்பட்டது என்பதிலே எனக்கு ஒரு மகிழ்ச்சி. பெருமை. எப்படித்தான் நடந்து கொள்கிறாய் பார்க்கலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தேன்...நான் எதிர்பார்த்ததைவிட மேன்மையாக நடந்துகொண்டிருக்கிறாய். உனக்கு மிகச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது என்று கருதுகிறேன்.

உன் மனப் போக்கைப் பாராட்டுகிறேன். ஆனால் முடிவு வரவேற்கக்கூடியது அல்ல. துவக்க காலம் உனக்கு. சிறிது துடிதுடிப்பு, அவசரம், திடீர் முடிவெடுக்கும் இயல்பு இருக்கத்தான் செய்யும். ஆனால் படிப்படியாகப் பக்குவம் ஏற்பட்டுவிடும். வேலையை விட்டு விலகாதே, சரியல்ல. என் தம்பி கூட இப்படித்தான், இனித் தான் ஜில்லா ஜட்ஜு வேலையில் இருக்கப் போவதில்லை, விலகிவிடப் போகிறேன் என்று பிடிவாதம் செய்கிறான். அவனுக்கும் இதையேதான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

தங்களுடைய 'வாதம்' என்னைத் திருத்திவிட்டது.

என் தம்பியும் இதைப் போலவே தன் முடிவை மாற்றிக் கொள்ளவேண்டும். அவன் ஒரு விதமானவன். என் பேரிலே விழுந்த வழக்கிலே நான் விடுதலையாகிவிட்டேன் என்றாலும், அப்படி ஒரு வழக்கு வந்ததே ஒரு இழுக்கல்லவா. அப்படி ஒரு இழுக்கு விழுந்தவனுடைய 'தம்பி' இவன் என்று நாலுபேர் நாலு விதமாகப் பேசுவார்களே என்பதை எண்ணி வேதனைப்படுகிறான்.

என் மனதை மாற்றிவிட்டதைப்போல அவருடைய மனதையும் மாற்றுமலாவிடுவீர்கள்.

* * *

ஒரே ஒரு கணம்தான் அண்ணா! அந்தச் சபலம் எனக்கு...சபலத்துக்கு பலியாகிவிட்டேன்...

சபலம் எல்லாமே அப்படித்தான் தம்பி! ஒரு கணம், ஒரு நொடி...அந்த ஒரு நொடிப் போதிலே மனதிடம் துளி கெட்டாலும் தீர்ந்தது. பாதை கெட்டுவிடும்.

அப்படித்தான் அண்ணா, நடந்தது. அவன் குற்றம் செய்தவன் என்பதற்கான சாட்சியம் ருஜு இருந்தது. அதை நான் கோர்ட்டிலே கொடுத்திருக்க முடியும், வேண்டுமென்றே மறைத்தேன்... அவன் தப்பித்துக் கொண்டான்...ஊரே பாராட்டிற்று. அவனுக்காக வாதாடிய வக்கீலின் திறமையால்தான் அவன் விடுதலையானான் என்று...ஆனால் அவனைக் கூண்டுக்குள் தள்ளக்கூடிய ருஜு என்னிடம் இருந்தது ... அதைக் கோர்ட்டிலே நான் காட்டமலிருந்துவிட்டேன்...அந்த முத்துமாலை என்னை மயக்கிவிட்டது..அதைக் கொடுத்து காலிலே விழுந்தான்...பேராசை, பெற்றுக் கொள், பெற்றுக் கொள் என்று தூண்டிற்று...நேர்மை தூங்கிவிட்டது ...வழி தவறினேன்...

விவரம் யாவும் தெரியும் தம்பி! களவாடி பிடிபட்டான், உன்னால் விடுதலை பெற்றான், ஊரெல்லாம் சுற்றி அலைந்தான்;...கடைசியில் என்னிடம் அடைக்கலமானான், டிரைவராக...தன் கதையை விவரமாகச் சொன்னபோது, முத்துமாலை பற்றிக் கூறினான்...நீதான் அதைப் பெற்றுக்கொண்டாய் என்பதை இங்கு வந்த பிறகுதான் எனக்குத் தெரிவித்தான். முத்துமாலையைப் பெற்றுக்கொண்டவன் என் தம்பிதான் என்பது எனக்குத் தெரிந்தபோது நான் திடுக்கிட்டுப் போனேன்...நானேதான், உனக்குத் தெரியாமல், அதை உன்னிடமிருந்து எடுத்தேன்......எடுத்தேனா! களவாடினேன்......அதை எடுக்கும்போது உன் பெருமையை எண்ணுமவில்லை. ஒரு கண சபலம் காரணமாக, அந்த முத்துமாலையை நீ பெற்றுக்கொண்டாயே தவிர, அது களவுப் பொருள் ஆகவே அதை தர்முவுக்குக் கொடுக்கக்கூடாது, எந்த வகையிலும் பயன்படுத்தக்கூடாது என்று எண்ணி, ஒளித்து வைத்திருந்தாய் அல்லவா...அது ஒருகணம் சபலத்துக்கு ஆட்பட்டுவிட்டாலும், உன் மனதிலே உள்ள நேர்மை உணர்ச்சி அடியோடு மறந்துவிடவில்லை என்பதைக் காட்டுகிறதல்லவா, அதனால் பெருமிதம் எனக்கு...

அப்போதே என்னை இழுத்துப் போட்டு உதைத்திருக்க வேண்டும் நீங்கள்...

உன்னையாடா தம்பி! சிறுவயதிலே அடிக்கடி பொறுமை காரணமாக என்மீது ஏதாவது பழி சுமத்துவாயே, அப்போதுகூட நான் உன்னை அடித்ததில்லையே...நான் உன்மீது என் உயிரை அல்லவா வைத்

திருக்கிறேன். உன்மீது எப்போதும் எனக்குக் கோபம் ஏற்பட்டதில்லேயே...வாலிபத் துடிப்பு எனக்கு இருந்த நாட்களிலேயே...

முத்துமாலையை எடுத்ததுடன், அதை ஏன் அண்ணா! வடிவுக்குக் கொடுத்து, நீங்களாக, வம்பை விலைக்கு வாங்கிக்கொள்ள முனைந்தீர்கள்.

ஒரு சிறு விளையாட்டடா தம்பி! வடிவு புருஷன் எப்படிப்பட்டவன், நேர்மையானவனா, பொருளைக் கண்டு நெளிபவனா என்று பார்க்க விரும்பினேன், பார்த்தேன்... பூரிப்பு எனக்கு அவனுடைய நேர்மையை உணர்ந்ததில்.

ஆமண்ணா! இவ்வளவு நேர்மையாளருக்கு மத்தியில், நான்...செ! எனக்கே வெட்கமாக இருக்கிறது... இந்தச் சுமையோடு நான், மற்றவர்களுக்கு நீதி வழங்கும் வேலையிலே இருக்கவேண்டும்...மனம் ஒப்பவில்லை அண்ணா! மனம் ஒப்பவில்லை.........

களவுப் பொருளைப் பெற்றுக்கொண்டோமே என்ற பழியைப் பற்றிய மனச் சுமையைத்தானே குறிப்பிடுகிறாய்?

ஆமாம்...ஏன்...அது என்ன சாமான்யமான குற்றமா...

களவுப் பொருளைப் பெறுவது, தவறு; குற்றம்; மன்னிக்க முடியாத குற்றம். நான் மறுக்கவில்லை...ஆனால், தம்பி! உன்னிடம் தரப்பட்ட அந்த முத்துமாலை, மடத்திலிருந்து களவாடப்பட்டது உண்மை...ஆனால் அது மடத்துக்கு எப்படிக் கிடைத்தது தெரியுமா...

யாராவது மடத்துக்குக் காணிக்கை கொடுத்திருப்பார்கள்...

இல்லை, தம்பி! இல்லை. அந்த முத்துமாலை நம்முடையது, தம்பி! நம்முடையது! கொ. கொ. கொ. என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதால், அது கொடி கொண்டாமலை கொள்ளிச்சாமியாருடையது என்று ஆயிற்று. ஆனால், அது நம்முடையது. இந்த கொள்ளிச் சாமியார் மடம் வைக்காத முன்பு ஊரூருக்கும் சென்று உபதேசம் செய்துகொண்டிருக்கும் 'போலி' யாக இருந்துவந்தபோது, நம்முடைய வீட்டிலே அப்பா இவனுக்கு 'பூஜை' நடத்தினார். அப்போது இவன் நம்முடைய வீட்டிலிருந்து களவாடிச் சென்றிருக்கிறான் இந்த முத்துமாலையை...போன பொருள்தான் திரும்பி வந்திருக்கிறது நம்மிடம்...

திடுக்கிட வைக்கிறீர்களே...இந்த விவரம் எப்படிக் கிடைத்தது...

ரங்கலால் மூலமாக...ரசவாதி ரங்கலால் தெரியுமல்லவா...இந்தச் சாமியார்கள் ஒவ்வொருவரை மயக்க ஒவ்வொரு வித்தை காட்டுவார்கள்...பலரை மயக்க தமக்கு 'ரசவாதம்' தெரியும் என்று கூறுவார்கள். அதிலே மயங்கிச் சேர்ந்து, சாமியாரின் பல அக்ரமங்களுக்கு உடந்தையாக இருந்தவன் ரங்கலால். அவன் மூலமாகவே இந்த விவரம் அறிந்தேன்.

ரங்கலால் என்ன ஆனான்...அந்தப் பெண்...

ரங்கலாலா...அவன் முதலில் என்னைத் தன் வலையில் விழவைக்கலாம் என்று எத்தனித்தான். முடியவில்லை—அந்தப் பெண்ணுக்கும் 'மோசடி' வாழ்க்கை பிடிக்கவில்லை ... நாணயமான ஒருவனைத் திருமணம் செய்துகொண்டு, தனியே சென்றுவிட்டாள்...இவன் எங்கோ பினாங்கோ, மோரிசோ ஓடிவிட்டான்.

உள்ளபடி இது நம்முடையது என்பதைக் கேட்க, ஓரளவுக்கு எனக்கு மனநிம்மதி ஏற்படுகிறது......என்றாலும்...

நீதிபதி வேலை பார்க்க மனம் இடம் தரவில்லை... ஒருவிதத்திலே, தம்பி! உன் எண்ணம் சரியானதுதான் ...பொருள் நம்மிடமிருந்து களவாடப்பட்டது என்றாலும், அதை நாம் சட்டத்துக்கு உகந்த முறையிலேதான் திரும்பப் பெறவேண்டும்; குறுக்கு வழியில் அல்ல... அதை நான் ஒப்புக்கொள்கிறேன்...

மேலும், கொள்ளிச்சாமியின் அக்ரமம் ருஜுப்படுத்தப்பட்டு, முத்துமாலை நம்முடையது என்பது நிரூபிக்கப்பட்டாக வேண்டுமல்லவா...

ஆமாம்...அதற்கான வேலைகளைத் தொடர்ந்து நடத்தவேண்டும்... அதற்கு வடிவு புருஷன் ஏற்றவன்...அவன் எப்படியும் கண்டு பிடித்துவிடுவான்.

இதெல்லாம் ஓரளவு மனதுக்கு ஆறுதல் தருவதாக அமைந்திருப்பினும், முத்துமாலை களவாடப்பட்டிருக்கிறது மடத்திலிருந்து; அந்தக் குற்றவாளியை நான் இலஞ்சம் பெற்றுக் கொண்டு தப்பிவிட உடந்தயாக இருந்திருக்கிறேன்; நீங்களோ அவனை உங்களிடம் வேலைக்கே வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்...

தவறானதாகத்தான் தோன்றும், தம்பி! முழுவிவரம் தெரியாத முன்பு. இவன் மடத்திலே தங்கி கொள்ளிச் சாமிக்கு ஒரு அபூர்வமான தைலம் தயாரித்துக் கொடுத்திருக்கிறான்...அது கொடிய குஷ்ட நோயைத் தீர்க்கக்கூடியது......இந்தச்சாமியார்; அதை மருந்து என்று கூறாமல், தன்னுடை மாய சக்தி என்று கூறி ஏய்த்து வருவது இவனுக்குப் பிடிக்காமல், தகராறு கிளப்பியிருக்கிறான்.

தனக்குத் தருவதாகச் சொன்ன தொகையைக் கொடுக்கும்படி வற்புறுத்தி இருக்கிறான். மடத்துத் தலைவன் கொடுக்க மறுக்கவே, ஒரு நகைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடிவிடுவது என்று தீர்மானித்திருக்கிறான். அதுதான் பிறகு 'கொள்ளை' என்ற வடிவம் கொண்டது.

என் மனச் சுமையிலே பெரும் அளவு குறைந்துவிட்டது அண்ணா! ஆயினும், நான் நீதிபதியாக இருக்கமட்டும் மனம் இடம் தரவில்லை...

என் தம்பி நீதிபதியாக இருக்கிறான் என்ற பெருமிதம் எனக்கு இனிப்பளிக்கும்; அதை இழக்க மனமில்லை.......என்றாலும், நீதித் துறையிலே உள்ளவர்கள் ஒரு துளியும் எந்த விதமான களங்கமும் இல்லாதவர்

களாக இருக்க வேண்டும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

* * *

மாதங்கள் உருண்டோடின; தங்கப்பன் வேலையை விட்டு விலகிவிட்டான். வக்கீல் வேலைகூடப் பார்க்கப் போவதில்லை என்று கூறிவிட்டான். அண்ணனுடன் சேர்ந்து வியாபாரம் நடத்தப் போவதாக அறிவித்து விட்டான்.

* * *

நான் அப்போதே சொன்னேனே கவனமிருக்கிறதல்லவா, சாத்தப்பன் பெரிய புள்ளி என்பதாக. தம்பியைக்கூட வேலையில் இருக்கவேண்டாம் என்று கூறிவிட்டானும்.

வேலையிலே என்னய்யா கிடைக்கும், ஆயிரம் இரண்டாயிரம் மாதம் இருக்கும். மாதம் ஒரு இலட்சம் புரளுமாமே, வியாபாரத்திலே...

என்னமோ போ! நம்ம ஊரிலே ஒரு பெரிய குடும்பம், இடையிலே பல விதமான கஷ்டம் ஏற்பட்டாலும், இப்போது நிம்மதி அடைந்திருக்குது. அதுவரையிலே மகிழ்ச்சிதானே, யாருக்கும்.

நான் அப்போதே சொன்னேன், அண்ணன் தம்பியோட ஒற்றுமையைப் பார்க்கவேண்டுமென்ருல், சாத்தப்பன் தங்கப்பனைப் பார்க்கவேண்டுமென்று. கல்லூரியிலே படிக்கிற காலத்திலே அவ்வளவு ஒற்றுமை...

சாத்தப்பனுக்குத் தன் தம்பியிடம் அவ்வளவு பாசம்...

தங்கப்பனுக்கு மட்டும்! அண்ணன் பேரிலே வழக்கு வந்தபோது எவ்வளவு கவலை, பாவம்...ஆள் துரும்பு துரும்பாக இளைத்துப் போய்விட்டானே...

எவ்வளவோ கஷ்டப்பட்டு அண்ணன் பேரிலே ஒரு குற்றமும் வராமல் காப்பாற்றினுன் இல்லையா...

தருமு அதைத்தான் ஊரெல்லாம் பெருமையாகப் பேசிக் கொள்வதாகக் கேள்வி.

சாத்தப்பனுடைய புதிய வியாபாரக் கம்பெனி துவக்க விழாவுக்கு ஒரு மந்திரி வாராராமே...

கேள்விப்பட்டேன்...முந்தி வந்த மந்திரி இல்லா... இவர் வேறே...

பந்தல் பெரிய அளவு...விருந்து வைபவம் பிரமாதமாகத்தான் இருக்கும். பெரிய வீட்டு விசேஷமில்லையா...

தருமுகூடத் தலை முழுகாமலிருப்பதாகச் சொல்ருங்களே...

நான் அப்பவே சொன்னனே கவனமிருக்குதா' பெரிய வீட்டு மதிப்பு எப்பவும் குறையாதுன்னு......

குளத்தங்கரையில் வழக்கம்போல மாநாடு நடைபெற்றுக் கொண்டு வந்தது.

சாத்தப்பன்—தங்கப்பன் ஆகியோருடைய 'புதிய மருந்தகம்' துவக்கப்பட்டது.

மாநாட்டினர், நோய் நொடி மருந்துவகை, அதிலே கிடைக்கக்கூடிய இலாபத்தின் அளவு ஆகியவைகளிலே கவனத்தை திருப்பிக்கொண்டனர்.

நம்ம மகமது கூடத்தான் என்னமோ 'சூரணம்' செய்வதாகச் சொல்ருரு. யாரு சீந்துவாங்க...என்று கேலி பேசினுர் குத்தாலம்.

எல்லாத்துக்கும் ஒரு காலம் வரணுமேல்லோ என்று மகமது பதிலளித்தார்.

❋

''சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனுல்
உழந்தும் உழவே தலை'' —தமிழ்மறை.

உணவு உற்பத்தியைப் பெருக்க
உழவர் பெருமக்களின் பொருளாதார நிலையை உயர்த்த
நாம் தரும் காணிக்கை

COIMBATORE CHEMICALS & FERTILISERS LTD. V.U.M BRAND (PODANUR)

"சூரியன் மார்க்" NPK உரங்கள்

கோயமுத்தூர் கெமிகல்ஸ் & பெர்டிலைசர்ஸ் லிமிடெட்

'சூரியன் மார்க்' NPK உர தயாரிப்பாளர்கள்

மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர்-11.

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

சித்தர் நவலோக கல்பம்

தங்கம் வெள்ளி, தாம்பரம். மற்றும் பல உலோகங்கள், அனேக அபூர்வ மூலிகைகள், மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சிக்குப்பின் உருவானது.

டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளையின்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

- [REGD]—

307 / 308, திருவல்லிக்கேணி ஹைரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 84786

கிளை வைத்தியசாலை

மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம், (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும், டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும் பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைததியசாலையிலும் நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறார்.

With Compliments From:

Addisons Paints & Chemicals Limited

Sembiam, Madras-11.

Makers of:

Spartan & Adcolac Quality Paints.

வலியா?　　ஜலதோஷமா?

பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

வலிகளுக்கு: தலைவலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானல் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானல், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம்
கையடக்கமான, குறைந்த
விலை டின்களிலும்
கிடைக்கிறது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்•பம்பாய்•கல்கத்தா•டெல்லி.

AM/3768

பழந்தமிழ் இலக்கியங்களில் பெருமிதம்

உள்ளாட்சித்துறை அமைச்சர்: **மா. முத்துசாமி**

தன்னம்பிக்கையின் அடிப்படையில் மனித உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்ச்சி, பெருமிதம். இது தற்பெருமையன்று. அடிப்படை இல்லாமலே கண் மூடித்தனமாகத் தன்னைப் பற்றி உயர்வாக எண்ணிக்கொள்வதும் பேசுவதும் தற்பெருமையாகும். ஆனல் பெருமிதம் என்பது அப்படிப் பிறப்பதன்று இருக்கின்ற உண்மையின் மீது ஒருவனுக்குப் பிறக்கும் அழுத்தமானதோர் உணர்வாக அதைக் குறிப்பிடலாம்.

தமிழர் வாழ்வியலுக்கே இலக்கணம் கண்ட தொல்காப்பியர் மெய்ப்பாட்டை எட்டாகப் பகுத்துக் கூறியுள்ளார். மெய்ப்பாடுகள் இன்னின்ன காரணங்கள் பற்றிப் பிறக்கும் என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். அவர் கூறியுள்ள மெய்ப்பாடுகள் எட்டில் ஆருவது இடம் பெற்றுத் திகழ்வது பெருமிதமாகும். இந்தப் பெருமிதம் தோன்றுவதற்கான காரணங்களை அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"கல்வி தறுகண் ணிசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமித நான்கே."

"கல்வியும் தறுகண்மையும் புகழும் கொடையுமென்னும் நான்கும்பற்றி வீரம் பிறக்கும் என்றவாறு" என்பார் பேராசிரியர். அவர் பெருமிதம் என்பதற்கு வீரம் என்றே பொருள் கொள்கிருர். அதற்கு அவர் கூறும் காரணமும் ஏற்புடைத்தாகவே இருக்கிறது: "இங்குத்திரத்துள் வீரத்தினைப் பெருமிதமென்றெண்ணினன்; என்னை? எல்லாரொடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதமெனப்படும் என்றற்கென்பது."

எல்லாருக்கும் உள்ள சிறப்பு ஒருவனுக்கு இருந்தால், அதனல் எப்படிப் பெருமித உணர்வு பிறக்கும்? மற்றவர்கள் யாரும் அதைப் போற்றவும் மாட்டார்கள். பிறருக்கு இல்லாத சிறப்பாக இருப்பதைத்தான் புகழ்ந்துரைக்க முடியும்; வியந்து பாராட்ட முடியும். அது தான் பெருமிதமாக இருக்குமே தவிர, எல்லாருக்குமே பொதுவாக இருக்கக்கூடிய சாதாரண உணர்வு அன்று. இந்தப் பெருமித உணர்வு கல்வியினல் எழலாம்; தறுகண்மை—அஞ்சாமையினல் உண்டாகலாம்; புகழால் ஏற்படலாம்; கொடையினல் பிறக்கலாம். இவற்றுக்கெல்லாமே பண்டைத் தமிழ் இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள், பல்வேறு இடங்களிலும் பரக்கக் காண்கின்றன. எனினும் ஒரு சில சான்றுகளைப் பார்ப்பதன் வாயிலாகவேகூட, நாம் அவற்றின் சிறப்பையும் செவ்வியையும் நன்குணர்ந்து இலக்கிய இன்பம் துய்க்க முடியும் என்று நான் கருதுகின்ற காரணத்தினல், ஒரு சில கொம்புத்தேன் பாட்டு வரிகளைத் தொட்டுக் காட்டுவதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

கயற்கண்ணி ஒருத்தி மேல் கொண்ட காதலால், காளையொருவன் தனது இறுதி நடவடிக்கையாக மடலேறும் நிலைக்கு வந்துவிட்டான். கலித்தொகை சித்திரிக்கும் இக்காட்சியைச் சிறை செய்துள்ள பாட்டு (கலி 141) கல்வி பற்றிய பெருமித மெய்ப்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்குகிறது.

தலைவன் தமிழாய்ந்தவன்; செஞ்சொல் வல்லான்; புலமை வல்லோர் முன் அவன் தன் சொற்றிறம் காட்டிப் புகழ் பெற்றிருக்கின்ருன். அப்படிப்பட்டவனை அவள் இன்று, பிறர் முன்னல் படிப்பறியாப் பேதைபோல் ஆக்கிவிட்டாள். இதைக் கூறுகின்ற தலைவனின் சொற்களில், கல்வியால் அவனுள்ளத்தில் பெருமிதம் பொங்கி வருவதைப் பார்க்கின்ருேம்:

"வல்லார்முற் சொல்வல்லே னென்னைப் பிறர் முன்னர்க்
கல்லாமை காட்டி யவள்."

அவன் களம் கண்டவன்; கடும் புரவி ஊர்ந்தவன். வீரம் விளைத்த அவன் இன்று மடல் ஏறி நெஞ்சழிய நேர்ந்துள்ளது, அடல் மா ஊர்ந்தவன் இன்று மடல் மா ஊர்கிருன். அவன் தான் எத்தன்மையவன் என்று கூறிக்கொள்வதில், அஞ்சாமை—தறுகண் பற்றிய பெருமிதம் பிறப்பதைக் காண்கிருேம்;

"அடன்மாமே லாற்றுவே னென்னை மடன்மாமேன்
மன்றம் படர்வித் தவள்."

(கலி 141)

உலக மக்கள் கண்டு அஞ்சுவதை அஞ்சாமல் ஏற்று, அதனல் வருகின்ற இன்னலைப் புன்முறுவலோடு தாங்கிக்கொள்பவன்தான் வீரன். அவனது பெருமிதம் கால வெள்ளத்தைக் கடந்து நிற்கும்; புலவர்நாவில் பொருந்தி அழியா இலக்கியம் படைக்கும்; ஊழி ஊழி வளரும் சமுதாயத்திற்கு வழிகாட்டி ஊக்குவிக்கும். தமிழகத்தில் தறுகண் வீர மறவர் புலியைப் புறங்கண்டு அதன் பேழ் வாயைப் பிளந்து, வெண் பற்களைத் தகர்த்துக்கொண்டு வந்து, மாலையாகக் கோத்து, தமது இதயங் கவர்ந்த மங்கை நல்லார்க்கு அணிவித்து மகிழ்ந்தனர் என்ற செய்தியை, சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் வரும் வரிகள் புலப்படுத்துகின்றன.

"மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற
மாலை வெண்பல் தாலி"

(சிலம்பு-வேட்டுவ வரி 27-28)

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பார் வான்புகழ் வள்ளுவர். வாழ்க்கையில் இசையோடு வாழ்வதே மக்களுக்குப் பெருமை. இசைகெட வாழும் வாழ்க்கை உலகில் பழிக்கப்படத் தக்கதாகும். இந்தப் புகழுக்காகப் பெரியோர் உயிரைக் கொடுக்கவும் தயங்கார்; ஆனல் பழியெனின் அஞ்சி நடுங்கி, அந்தச் செயலைச் செய்யத் துணியார். புகழால் வரும் பெருமிதத்திற்கு அகத்திலிருந்தும் புறத்திலிருந்தும் இரண்டு மேற்கோள்கள்:

தோழி தலைவனிடம் சொல்கிறாள். சான்றோர் எவ்வளவுதான் காதல் வயப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் பழியொடு வரும் இன்பத்தை விரும்பமாட்டார்கள். களவுப் புணர்ச்சியில் தலைவியிடம் இன்பம் உண்டு செல்லும் தலைமகனை நல்வழிப்படுத்தி, மனம் புரிந்துகொள்ளும்படி அவனைத் தூண்டும் வகையில் இந்தச் சொற்களைப் பேசுகிறாள் தோழி.

"கழியக் காதல ராயினுஞ் சான்றோர்
பழியொடு வருஉ மின்பம் வெஃகார்" (அகம் 112)

கடலுண் மாய்ந்த இளம் பெருவழுதி இந்த உலகம், தமக்கெனப் பாடுபடாமல் பிறர்க்கெனப் பாடுபடும் தியாகச் சுடர்களால்தான் வாழ்கிறது என்பதை ஒரு புறப்பாட்டில் விளக்குகிறார். அதில் அவர், அத்தகைய சான்றோர்களின் தன்மையைச் சொல்லும்பொழுது,

"புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்" (புறம் 182)

என்று கூறுகின்றார். இந்த இரண்டு மேற்கோள்களும் புகழால் வரும் பெருமிதத்திற்குச் சான்றாக விளங்குகின்றன.

அன்பும் அருளும் மனித வாழ்க்கை பிறர்க்குப் பயன்படுமாறு செய்கின்றன. பிறர் துன்பத்தைத் தனது துன்பமாகக் கருதி, அவர் துயர் துடைத்திட விரையுமாறு உள்ளத்தைத் தூண்டுகின்றன. அன்புடையார் பிறர்க்கு என்பும் உரியர் அன்றோ? இதற்கு மரபு வழியாகச் சிபியின் கதையைக் கூறுவார்கள். மென் சிறகுப் புறா ஒன்றுக்காக மாமன்னன் ஒருவன் தன்னையே தியாகம் செய்ய முன்வந்த, நெஞ்சம் நெக்குருகும் செய்தி எவர் உள்ளத்தைத்தான் தொடாது? ஒரு புலவர் இந்த நிகழ்ச்சியை எடுத்துக்கூறி, அந்த மாமன்னன் மரபில் வந்த அரசனின் உள்ளம் இளகுமாறு செய்து விட்டார். 'இத்தகைய பெருமைவாய்ந்த மரபில் வந்த நாம் சிறுமைக்கு ஆட்படுவதா?' என அந்த அரசன் மனம்மாறிப் புலவரைப் போற்றினான். கொடையால் வரும் பெருமிதத்திற்கு இது தக்க சான்றாகும். சோழன் மாவளத்தானை, தாமற் பல்கண்ணனார் பாடியுள்ள அந்தப் பாட்டு:

"தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக" (புறம் 43)

முடியுடை மூவேந்தரும் கூடி, பாரியைப் புறங்கான வந்தபொழுது, முரசு கொட்டித் தோள்வலி காட்ட வந்தால் பாரியைப் பணிய வைக்க முடியாது என்றும், அரசர்கள் இரவலர்களாக வந்து கேட்டால் பாரியையும் தம்மையும் கூடப் பெறலாம் என்றும், கொடைப் பெருமிதத்துடன் கபிலர் பாடியுள்ள பாட்டு, கற்பார் நெஞ்சில் நிலைத்து விடுவதாகும்.

"கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டு நீர் பாடினிர் செலினே," (புறம் 110)

சோழன் நலங்கிள்ளி, காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியால் பகைமை முற்றி அவன் மீது சினந்தெழும் போது அவனும் இப்படித்தான்வஞ்சினம் கூறுகின்றான். பரிசாக இரந்து கேட்டால், முரசு முழங்கும் அரசை மட்டுமின்றி, உயிரையே கூடத் தருவதாகச் சொல்கிறான். என்னே கொடைப் பெருமிதம்!

"மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
ஈயென விரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினுங் கொடுக்குவன்" (புறம் 73)

"சொல்லப்பட்ட பெருமிதம்" என்றதனாற்காமம்பற்றியும் பெருமிதம் பிறக்குமென்று கொள்க என்று கூறினார், பேராசிரியர், காமம் பற்றிப் பெருமிதம் தோன்றுவதற்கு, புறத்தில் நலங்கிள்ளி பாடியுள்ள பாட்டே சான்றாக விளங்குகிறது. நலங்கிள்ளி வஞ்சினம் கூறுகையில், பகைவனைப் புறங்காண இயலாமற் போனால் காதலற்ற பொருட் பெண்டிரின் முயக்கத்தில் எனது மாலை துவள்வதாக என்று கடுமையாகச் சொல்கிறான். யார் அந்த முயக்கத்தை விரும்புவார்கள்? என் வீரம் பழுது பட்டால், பண்பும் பழுது படட்டும் என்ற பாங்கில் அவன் கூறிய வஞ்சினம், காமம் பற்றி எழுகின்ற பெருமிதத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

"தீதுஇல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே"

(புறம் 73)

பிள்ளையார் பிடிக்க...

சென்னையில் கொச்சைத் தமிழ் வழக்கு அதிகமாக உண்டு. 'காலாடி, கில்லாடி, லம்பாடி முதலிய சொற்களை அடிக்கடி கேட்கலாம். காலாடி என்பது சோம்பேறியைக் குறிக்கும். சோதா என்றும் அப்பேர்வழியைச் சொல்வதுண்டு. சென்னைக்கு அருகிலுள்ள திருவொற்றியூரில் காலாடிப் பேட்டை என்ற பகுதியொன்று உள்ளது. காலாடிகளுக்கும், அவ்வூருக்கும் பெயர்ப் பொருத்தத்தைத் தவிர எவ்வித பொருத்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. நெசவுத் தொழில் செய்யும் மக்களே பெரும்பாலும் அப்பேட்டையில் வாழ்கிறார்கள். 'அப்படியானால் காலாடிப்பேட்டை என்ற பெயர் அதற்கு எப்படி வந்தது?' என்றால் அது ஒரு விந்தையான செய்தி. சென்னைத் துரைத்தனத்தில் 'காலெட்' என்ற ஆங்கிலேயன் மூன்று ஆண்டுகள் கவர்னராய் இருந்தான். தன் பெயரை நிலைநாட்டுவதில் அவனுக்குப் பேராசை. திருவொற்றியூரில் புதிதாக ஒரு பேட்டையை உண்டாக்கி 'காலெட்பேட்டை' என்று அதற்குப் பெயர் கொடுத்தான். 'பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது' என்பதுபோல, 'காலெட் பேட்டை' காலாடிப் பேட்டையாகி விட்டது.

—பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை.

இகழ்வார்?

வழக்கறிஞர் தில்லைவில்லாளன்

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

வள்ளுவர் வாக்கு, பொய்த்ததில்லை. அவ்வழி நடப்போர் என்றும் வீழ்ந்ததில்லை.

ஆம், நிலம், தன்னை மண் வெட்டி கொண்டு தோண்டுபவனைக்கூட, வீழாது, தாங்கி நிற்கிறது, அது போல், தம்மை இகழ்வாரை, இகழ்பவன் வீழ்ந்து படாமல் தாங்கி நின்றால், அந்தப் பொறையுடைமைக்கு அழிவில்லை என்றார் வள்ளுவர்.

ஆம், அத்தகைய நிலமாக நின்றான் நீலன்—அந் நிலத்தை அகழ்ந்து நிற்கும் இழிமகனாக வந்தான் இருளப்பன்.

இது ஒரு குறள் கதை—ஆனால் விரித்துப் பார்த்தால், வாழ்க்கைப் பெருங்கதை.

அழகியபுரம் சிற்றூரே தவிர, வளங்களைப் பொறுத்தும், வனப்புகளையொட்டியும் பார்த்தால், பேரூர். அவ்வூரில், கனித்தோட்டம் ஒன்று, ஊருக்குக் கோடியில். அதில் தனித்த குடிசை. அதில் வாழ்ந்து வந்தார் நீலன், தனிக்கட்டை. ஆனால், ஊராருக்கு எந்தநன்மை வேண்டுமென்றாலும், முன்னின்று பணிபுரிவார். அவர் பொதுப்பணி தனித்தன்மை வாய்ந்தது. அதில் தான் என்ற முனைப்புக்கு வழியில்லை. எதையும் அவர் செய்வார். ஆனால், தன் மூலம் நடந்ததாகக்கூடத் தெரிவதை விரும்புவதில்லை. ஆனால் ஊரார் அவரிடம், அதற்காகவே அன்பு காட்டினர். அவரின்றி எதுவும் நடவாதநிலையை உருவாக்கினர். இந்த அன்பு பிணைப்பு ஆண்டு பலவாய் இருந்து வந்தது.

கனித் தோட்டம், அவருக்கு, ஒரு தனிப் பொழுது போக்கு—அது பெரிய வருவாய்த் தேடித்தரும் தொழிலாக அல்ல அதனை வளர்த்தது—வளர்த்து வருவது. நினைத்த நேரத்தில் எங்கோகண்ட கனிமரத்தை இதில் உற்பத்தி செய்து பார்ப்பார். அவருக்கு இது சின்னஞ்சிறு வயதிலிருந்து வந்த ஒரு மனப்போக்கு — கனி வேண்டுவோர் பலர் வேண்டிப் பெறுவர், சிலர் எடுத்துக்கொண்டு, பிறகு தெரிவிப்பர். இப்படிப்பட்ட கனித்தோட்டம். 'இதில் அவரோ, தனிவழி நடக்கும் இனிய தோழர்.

ஊரார், அவரிடம் அடக்கம் கண்டும், அதே நேரத்தில், அவரின் அறிவுகொண்டு செய்யும் தொண்டு கண்டும், ஆயிரக்கணக்கில் அணுகி உதவி பெற்றனர்.

உலகில், மிகநல்லவராக இருப்பதும் கூடாது என்று கூறுவர். ஆம், மிகநல்லவராக இருந்ததாலோ என்னவோ அக்கனித் தோட்டத்துக் காவல்காரனான இருளப்பனே, நீலனைத் தாக்கும் விரோதியானான்,

'நீலனா, அவரைப்போல உண்டா?' என்றவன், 'அவனா, கனித் தோட்டமா, கடு விஷத்தோட்டம்—அதில் கனி மரங்கள் இல்லை—விஷ விருட்சங்கள்தான் இருக்கின்றன' என்று பேச்சை மாற்றினான்.

'கனி வியாபாரமில்லை —"கடும் நஞ்சு வியாபாரம்' என்றான்.

ஊராருக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இப்படி இகழ்கிறான்! இவன்தானே புகழ்ந்தான், முன்னாலே— என்று சிந்தித்து அடிப்படையைத் தேடத் தொடங்கினர்.

அகோரபுரி அழகியபுரத்திற்கு அடுத்தவூர். அதில் பழத்தோட்டத்து அழுகியநாதன், ஏவிவிட்ட அம்பானன் இருளப்பன் என்பது மக்களுக்குப் புரிந்தது.

தன் பழத்தோட்டத்திற்கு, நீலன் கனித்தோட்டம் இருப்பது இடைஞ்சலாம். பொறாமைக் கனிகளை நிறைய பழுக்கவைத்து, அதனைக்கொஞ்சம்கொஞ்சம்கொடுத்து, அழகியபுரியாரிடம் நஞ்சைத் தூவினான். பலியானவரில் ஒருவன் இருளப்பன்.

அவன், புகழ்ந்தவரை, இகழ்ந்தான். இகழ்ந்து விட்டேனே, என்ன எனக்கு என்று கேட்டுப் பெற்றான். ஆனால் இது நிரந்தரம் இல்லை—இடைக்காலத்திற்

தன் காரியம் முடியும்வரை கிடைக்கும் என்பதை அவன் அறியான். அறிந்தால், அன்புக்கனிகளை வேணமட்டும் வளர்த்துவிட்ட தன் சொந்தக் கனித் தோட்டத்தை விட்டு, பித்துப்பிடித்து ஏன் மாறுகிறுன்?

நீலன் கனித்தோட்டத்து மாங்கனிகளுக்குள் கசப் பேற்றும் கொடிகளைச் சுற்றிச் சந்தைக்கு அனுப்பினுன் இருளப்பன். இதனை அறிவார் நீலன். அவர் ஏதும் சொல்லவில்லை—செய்யவில்லை. சந்தைக்கே சென்றுர்.

நீலன் கனித் தோட்டத்துக் கனிகளை விரும்பி வாங்க குழுமியிருந்த ஊராரைப் பார்த்து 'இக்கனிகளை வாங்க தீர்கள் — கசக்கும்' என்று கூறினுர். மக்கள் 'ஏன்? ஏன்?' என்றனர். இருளப்பன் ஓடத் தொடங்கினுன். மக்கள் விபரம் தெரிந்துகொண்டனர்.

ஓடியவனைத் துரத்தினர். ஆனல், துரத்திய மக்கள், பின் ஓடினுர் நீலன் — ஓடி, ஓடிக் களைத்துப் போனுர். கீழே தடுக்கி விழுந்து, முட்டி, முழங்கால் எல்லாம் புண். இருந்தாலும் விடாது தொடர்ந்து ஓடினுர். கூட்டத்தினர் கையில் இருளப்பன் சிக்கவும் இவர் போய்ச் சேரவும் சரியாக இருந்தது. கூட்டத்தினர், இருளப்பனை நையப்புடைக்கத் தொடங்கினர். நீலன், அவர்களை விலக்கினுர். 'அவனை அடிக்காதீர்கள்—என்னை அடியுங்கள்' என்று கூறி, இருளப்பனைத்தான் தாங்கிப் பிடித்துக்கொண்டார்.

'அவன் உங்களை இகழ்ந்தவனுயிற்றே!' என்றனர். 'என்னை ஏற்கனவே, புகழ்ந்தவன்தான்' என்றுர் அவர்.

'அவன், உங்களைத் தாக்கிடவும், கனிக்கே கசப் பேற்றவும் துணிந்தவனுயிற்றே' என்றனர்.

'என்னையே, அகழ்ந்து, அக்குழியில் தள்ளிப் புதைத்தாலும், அவனைத் தாங்கி நிற்பேனே தவிர, நீங்கள் அடித்திட விடமாட்டேன்' என்றுர்.

இருளப்பன், நிற்கமுடியாமல், கீழே சாய்ந்தான், உடல்வலியால் அல்ல உள்ளத்தில் ஏற்பட்ட நலிவால். அழுதான். புலம்பினுன். நீலன் காலைக் கட்டிக்கொண்டான். நீலன் அவனை அணைத்துத் தாங்கிக்கொண்டார், ஊரார் இக்காட்சிகண்டு மலைத்து நின்றனர்.

விதவா விவாகம்!

ஆப்பிரிக்கா தேசத்திலே, நைல் நதிப் பிரதேசத்திலிருந்த பூர்வீகக் குடிகள் திகைப்பூட்டும் பல பழக்கங்களைக் கொண்டிருந்திருக்கின்றனர். அவைகளில் விதவையாகிவிட்ட பெண்கள் மறுமணம் செய்து கொள்வதற்கென எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் மிக மிக வியப்புக்குரியவை.

அத்தகைய விதவைகள் தங்களுக்கு மிகவும் பிடித்தமான உணவு வகையைச் செய்து, அதை ஒரு பாத்திரத்திலிட்டு அதில் இரண்டு கரண்டிகளை வைத்து, தங்கள் தலையிலே சுமந்துகொள்வார்களாம். பாத்திரம் தவறியும் கீழே விழாதவாறு அவர்கள் மற்ற அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருப்பார்களாம்.

இத்தகைய விதவை ஒருத்தியை எந்த ஆடவனுவது மறுமணம் செய்துகொள்ள விரும்பினுல், அவளது தலையிலே உள்ள உணவை, அதில் இருக்கும் இரண்டு கரண்டிகளில் ஒன்றுல் எடுத்துச் சுவைப்பானும். அவளது சமையல் அவனுக்குப் பிடித்திருந்தால் மறுகணமே அவர்கள் தம்பதிகளாகி விடலாம். அப்புறம் அவர்களை யாரும் தடுக்க முடியாதாம்!

''ஏரினும் நன்றுல் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'' —திருக்குறள்

நிலவளம் காத்து குறைந்த செலவில் மகசூலைப் பெருக்கி
கூடுதலான பலன் தருவதில் முன்னணியில் உள்ளவை

ICSCO FERTILISERS

"ஐ. சி. எஸ்." ஸ்டாண்டர்ட் N. P. K. உரங்கள்

தயாரிப்போர்:

இந்தியன் கமர்ஷியல் சிண்டிகேட்,

'அசோக் பில்டிங்ஸ்', மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர்-11.

பசிப்பிணி அகற்றும் பணியில்....!

உணவுத்துறை அமைச்சர் கே.ஏ. மதியழகன்

உலகில் இருந்த—இருக்கும் சனநாயக அரசுகளுக்கு—பொது அமைப்புகளுக்கு ஒரு அறை கூவலாக இருந்துவரும் மக்களின் பசிக்கொடுமை அகற்றும் பணியில் இருக்கும் சர்வதேச அமைப்பினை வரவேற்பதிலும் அதன் மகத்தான முயற்சிகளைப் பாராட்டவும் விரும்பும் அதே வேளையில் இந்தியர்கள்பார்வையில் — கருத்தில் இந்த சாதனை எத்தகைய பிரதிபலிப்பினை — கருத்தினைக் கொடுத்திருக்கிறது என்பதனையும் அனைவரது கவனத்துக்கும் வைக்க விரும்புகிறேன்.

உலகின் புல நாடுகளிலும் ஆங்காங்கே இருந்துவரும் பசி—பட்டினி நிலைமைகளை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி நிலைவிளக்கம் கொடுப்பதுதான் இந்த இயக்கத்தின் துவக்ககால அலுவல்களாக இருந்த போதிலும் அதன் முக்கியத்துவம், இப்போது 'தகவல் தரும் நிலை' என்ற கட்டத்திலிருந்து பற்றாக்குறை நாடுகளில் உணவு உற்பத்தியினைப் பெருக்குவதெப்படி? என்ற பணியினை நோக்கி, செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்தியர்களாகிய நமது நிலையில் 'பசியிலிருந்து விடுதலை' என்ற பணியில் இருக்கும் இந்த அமைப்பு இவ்வகையில்தான் உதவவேண்டுமென விரும்புகிறோம்.

உதவும் நாடுகளில் பெறும் நாடுகளைப் பற்றிய பற்றாக்குறை தகவல்களை வெளியிடும் அலுவல் அவசியம் தான். அப்போதுதான் உதவிகளைத் திரட்ட முடியும். ஆனால் உதவிகளைப் பெறும் நாடுகளுக்கோ உதவிகளை விட மற்றுமோர் அம்சம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அதுதான் பற்றாக்குறையைப் போக்குவதற்கு உற்பத்தியைப் பெருக்குவதெப்படி என்ற தொழில் நுப்ப உதவி!

'பசியிலிருந்து விடுதலை' என்ற பணிக்காகப் பாடுபடும் சர்வதேச அமைப்பு சமீபத்தில் நடத்திய மாநாடு ஒன்றில் 'அடிப்படை சாதனங்களை ஒன்று திரட்ட வேண்டும்' என்று முடிவு செய்திருப்பதுகூட இந்த வகையில்தான் என்பதனை நான் அறிகிறேன்.

வழங்கும் நாடுகள்—உதவும் அமைப்புகள் ஒன்றினைக் கருத்தில் வைக்கவேண்டும்.

பெறும் நாடுகளுக்கு உதவிகளினால் 'பிணி' அகலும்போது இனி அதுபோன்ற நிலை எழாது என்ற நம்பிக்கை ஒளியும் ஏற்படவேண்டும். உற்பத்தியைப் பெருக்கி இனி இந்த நிலை எழாமல் பார்ப்போம் என்ற வலிவும் கிடைக்கவேண்டும்.

நான் இங்கே பிரதிபலிக்கும் தமிழகத்தில் இப்போதுதான் இரு பெரும் புரட்சி நடந்துள்ளது.

விவசாயத் துறையில் ஒரு மறுமலர்ச்சி, உழவர்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஆகிய இரண்டும் எனது மாநிலத்தில் தோன்றியிருக்கிறது.

உற்பத்தியைப் பெருக்க புதிய வழிவகைகளைப் பின்பற்றுவோம் என்ற முயற்சி உழவர்களிடையே பிறந்திருக்கிறது.

இந்த மாற்றத்தினை நாம் நன்றாக பயன்படுத்தி அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய முயல வேண்டும்.

இந்த முயற்சிக்கு இளைஞர் சமுதாயம் பெரும் அளவு கவரப்பட வேண்டும். கிராமிய சமுதாயமே மிகுந்துள்ள இந்தியா போன்ற நாடுகளில் படித்துப் பட்டம் பெற்றுள்ள இளைய பரம்பரையினர் இன்றைய தினம் ஒரு இக்கட்டான நிலையில் இருக்கின்றனர்.

கிராமியச் சூழ்நிலைகளில் பிறந்து வளர்ந்த அவர்களை நகர்ப்புற நாகரிகம், வாழ்க்கை முறைகள்தான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர். உடலுழைப்பு — உற்பத்திப் பெருக்கு என்ற இரண்டிலிருந்தும் அவர்கள் நீண்ட தூரம் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

இதுவே நாளடைவில் பிரச்சனைகளாக வளர்ந்து அதிருப்தியாகவும் போராட்டங்களாகவும் வெடிக்கின்றன.

'பசியிலிருந்து விடுதலை' என்ற பணிக்காகப் பாடுபடும் உலக அமைப்பு இளைஞர்களிடையே உள்ள இந்த குறைபாடுகளைக் களைந்து அவர்களை உணவு உற்பத்தித் துறைக்கு—விவசாய அலுவல்களுக்கு எப்படி விரும்பி ஈடுபட வைக்கலாம் என்பதற்கு வழி வகை காண வேண்டும்.

இதற்கு விவசாயத்துறையில் உள்ள பழமைகள் களையப்பட வேண்டும் புதுமைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உழவு ஒரு மேம்பாடான தொழில் என்ற உணர்வு பிறக்கவேண்டும்.

பசிப்பிணி நாடுகளுக்கு கொடுத்துதவும் நாடுகள் உணவு கொடுப்பதோடு நில்லாமல் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்ட அறிவினையும் உற்பத்தி சாதனங்களையும் அளிக்க முன்வரவேண்டும். அதற்கு கல்லூரிகள், இளைஞர்கள் நல்ல சாதனங்களாவார்கள்.

கல்லூரிகளில் விஞ்ஞானக்கழகம், பொழுதுபோக்கு கழகம் என்று பல அமைப்புகள் இருப்பதுபோல் விவசாயத்துக்கென்றும் மாணவர்களிடையே அமைப்புகள் தோன்ற வேண்டும்.

அரசாங்கத்துக்கு அப்பாற்பட்ட சில அமைப்புகள் பசிப்பிணி அகற்றும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக பீகார் வறட்சிப் பகுதிகளுக்கு கிருத்துவ சங்கங்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவையாகும். ஆனால் மத வேறுபாடுகளைக் கடந்த அரசியல் அமைப்பினை உடைய நாடுகள் ஒரு குறிப்பிட்ட மதத்துறையினர் மட்டும் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடுவதென்பது போதாது. பொருத்தமாகவும் அமையாது.

இதற்காக தேசிய அளவில் நிறுவனங்களை உருவாக்கும் வகையில் இந்த சர்வதேச அமைப்பு ஒத்துழைக்க வேண்டும்.

உற்பத்தியில் முன்னேற்றமடைந்த நாடுகள் பின்தங்கிய நாடுகளுக்கு ஆற்றும் பணிகளில் இதுபோன்ற மாற்றங்களெல்லாம் தோன்றவேண்டும்.

[தமிழக உணவு அமைச்சரும் ஐ.நா.வின் உணவு விவசாயக் கழக மாநாட்டின் பிரதிநிதியும் அங்கே இந்தியக் குழுவின் மாற்றுத் தலைவராகவும் இருந்த திரு. கே. ஏ. மதியழகன் "பசியிலிருந்து விடுதலை" என்ற சர்வதேச அமைப்பின் சார்பில் ரோம் நகரில் 21—12—67ல் நடந்த மாநாட்டில் பேசிய உரை]

M. M. WORKS

28-B, METTU ST.,

KANCHEEPURAM-1

V

Manufacturers of Table Mould Bricks and Tiles

V

have pleasure in extending their heartful Greetings to

V

Anna Manivizha Committee

Kancheepuram-1

எங்கள் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

★

வடபழனி அச்சகம்

ஆற்காடு சாலை, சென்னை-26.

★

த. பெ. எண்: 5341

தொலைபேசி எண்: 441182, 441343

INDIA PISTONS EMPLOY THE BEST TEAMWORK FOR QUALITY PRODUCTS



IP Quality Products for Quality Service

Perfect teamwork in the internal combustion engine is possible only if all the co-ordinating components are of the same high quality. For the benefit of the consumer of such teamwork, India Pistons manufacture — All Under One Roof — pistons, pins, rings and liners, to their rigid standards.

The efficiency of these components as a team gives the consumer the best in service and economy.

Personnel tie-ups at India Pistons result in close teamwork between inspection and production men. It is this teamwork that ensures top quality for IP products.

INDIA PISTONS LIMITED
SEMBIAM **MADRAS-11**

IP-157


இன்ப
ஒளி
அண்ணாதுரை

இன்ப ஒளி

அண்ணாதுரை

“பெற்றோம் விடுதலை”-என்ற பேச்சு அளித்திடும் இன்பத்துக்கு ஈடாக வேறெதுவும் இருந்திட முடியாது. பெற்றோம் விடுதலை என்று கூறிடும்போது மகிழ்ச்சி மட்டுமல்ல, எங்கனம் பெற்றோம் விடுதலை என்பதனை நினைவிலே கொண்டிடவும், அதன் பயனாக எழுச்சிமிகக் கொண்டிடவும் முடிகின்றது. எழுச்சியுடன் நிற்பதில்லை-பெற்றோம் விடுதலை என்பது மகிழ்ச்சியும் எழுச்சியும் தருவதுடன், பெறுவோம் நல்வாழ்வு என்ற நம்பிக்கையையும் தருகின்றது, எனவே எதிர்காலம் தெரிகின்றது, எழில் தெரிகின்றது ஏற்றம் தெரிகின்றது. மங்கிய கண்கள் ஒளிவிடவும், வாடிய முகமெலாம் மலர்ந்திடவும், கூனிக்குறுகிய நிலைபோய் ஏறு நடை பிறந்திடவுமான புதிய நிலை தெரிகின்றது. பட்ட துன்பமெலாம் மறைகின்றது. பட்டொளி வீசிடும் நாட்டுக் கொடி பறந்திடக் காணும்போது, வல்லூறு இறந்து கீழே கிடக்கின்றது. பைங்கிளிகள் பாடுகின்றன! அரவம் அடிபட்டுச் செத்தது; பயமற்று மாந்தர் நடமாடுகின்றனர்! இருள் தொலைந்தது, ஒளி பிறந்தது அடிமைத்தளைமுறிந்தது, ஆண்மை அரசோச்சவந்தது பாலை சோலையாயிற்று. மாற்றானின் வேட்டைக் காடாகிடும் இழிநிலை ஒழிந்தது, நாமிருக்கும் நாடு நமது என்ற உறுதி பிறந்தது. நாமார்க்கும் குடி அல்லோம் என்ற முழக்க மெழுந்தது, நத்திக்கிடப்போர் நாமல்ல என்ற முழக்க மெழுந்தது. வாழ்கின்றோம் நம் நாட்டில்; அதன் வளமெல்லாம் நமது உடமை; சூழ்கின்ற பகையெல்லாம் தொலைத்திட்டோம் வல்லமையால்; உழைத்திடுவோம் நாடு உயர, பாடிடுவோம் நாட்டுப்பண், கூடுவோம் மன்றமதில்; கொண்டாடிடுவோம் வீரர்தமை; ஈடு எமக்கு எவருமில்லை, எதிர்ப்பவர்கள் எங்குமில்லை, கேடு செய்வோர் ஓடிடுவர், கேளிர் எலாம் நமை நாடிடுவர்; வாழ்ந்திடுவோம் வாழ்வளிப்போம்—என்றெல்லாம் பாடிடவும் உரையாடிடவும் வழி பிறக்கிறது, பெற்றோம் விடுதலை என்ற சொல் இசைக்கும் நிலையினை ஒரு நாடு பெற்றதும்.

என் நாடு—என்ன உண்டு இங்கே! இரும்பில்லை; கரும்பில்லை, இஞ்சியில்லை மஞ்சள் இல்லை, இருப்பு இல்லை, யானை மறுப்பு இல்லை, எழில் இல்லை பொழில் இல்லை —என்று கூறி ஏங்கிடக்கூடச் செய்வர் சிறசில வேலைகளில். ஆங்கொரு நாடுண்டாம் அதில் அளவற்ற செல்வமும் செழிக்கின்றதாம், வான் முட்டும் கூட கோபுரமாம், வண்ண வண்ண அமைப்புகளாம், வலிமை மிக்க படை பலவாம் வருகின்றாராம் வையத்து மாந்தர் பல்லோர், வாணிபத்தால் வளம் மிகுதி காணுகின்றனராம், அருவி அழகும் அணி தேர்ப்புரவி அழகும், ஆடலரங்கும் பாடற்கூடமும், கற்றறிவாளர் கலந்துரையாடும் வித்தக மாடமும், பூவையர் உலவிடும் சோலையும் சாலையும், கேட்டிடுவோர் சொக்கிடுவராம். சொன்னார்கள் சேதியினை என்று வேறு நாடு பற்றி வியந்து பேசிடவும் செய்வர் சிற்சில போது; ஆயினும அளவு வளம் என்பனவற்றில் மிகச்சிறிய அளவினது என்ற போதிலும், இது வளமற்ற நாடு எனவே எவர் பிடியில் சிக்கினால் என்ன; நாமாண்டாலென்ன வேற்று நாட்டான் ஆண்டாலென்ன என்று கூறிடும் இழிந்த மனப்பான்மை எவருக்கும் ஏற்படாது; ஏற்பட்டதில்லை! இது என் நாடு—வறுமைக் கூடாக இருக்கட்டும், எனினும் இது எனது நாடு, இங்கு ஆக்கம் செய்திட அடிமைப்படுத்திட எவருக்கும் உரிமை இல்லை-எவரும் அங்கனம் செய்திட விடோம்; இந்நாடு பிறரிடம் சிக்கிடும் என்றோர் நிலை ஏற்படின். இந்நாடே எமக்கு இடுகாடு ஆகட்டும் உயிர் உள்ளவரை. மாற்றானிடம் இது பிடிபட இடங்கொடோம், இது என் நாடு! எந்தையும் தாயும் மகிழ்ந்திருந்த நாடு! என்னை ஈன்றெடுத்த தாய் நாடு! நான் துள்ளி விளையாடிய தொட்டில்! என்னை ஊட்டி வளர்த்த அன்னை! என்னை ஏற்றுக் கொண்டுள்ள தாயகம்! இதனை அடிமைக்காடு ஆக்கிட ஒருப்படேன். வறுமை கப்பிக் கொண்டதே உன்னை! வாழ்வளிக்க வில்லையே உனக்கு! இத்தகைய நாட்டின் மீது ஏன் உனக்குப் பற்று! இதை என் நாடு’ என்று கூறிக்கொள்ள வெட்கமல்லவா எழவேண்டும்! வாழவா செய்கிறாய் இங்கு! வதை படுகின்றாய்! இது துன்பக் கேணி! தொல்லைக் கொல்லை! உனை அழுத்தும் சுமை! கசக்கிடும் கருவி! கானல்! இதனிடம் ஒருபற்று

கொள்ளப்போமா! — என்று எவனேனும் கேட்டிடின், அவனை மனிதப்பிறவி என்று கருதிடக்கூடக் கூசுவர், கடுகிநட, கடுங்கோபம் உனைக் கருக்கிடுமுன்பு! விலகி நில், என் விழிநெருப்பு உனை எரித்திடுமுன்! என்று கூறிடுவர், எதிர்த்துப் போரிடுவர்! ஏடா! மூடா உன் தாய் இளைத்துக் கிடந்திடின், இவள் என் தாயல்ல என்பாயோ! பேய் மகனே! பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் எத்தகைய மாண்புடையன என்பதனை அறியாயோ! அதனை அறியாய் என்றால், வேறு எதனைத்தான் நீ அறிந்தவனாவாய்! அட! கெடுமதியாளா! என் நாடு பொன்னும் பொருளும் அற்றதாக இருந்திடலாம், புத்தியுமற்றவர்கள் உலவிடும் இடமென்றா கருதிக்கொண்டாய்! வளம் மிகுந்த நாடாக இருக்கலாம், உனைச் சுமக்கும் இடம்! எந்த வளம் இருந்து என்ன பயன், அறிவற்ற நிலையில் உள்ள உனை உலவவிடும் நாட்டினிலே! இழிமொழி பேசி என் நாட்டைப் பழித்திடுகின்றாய் எனைக் கோழை என்று கருதிக்கொண்டு! பிழை பொறுத்திடுவேன் இக்கணமே விரண்டோடிடின்; இல்லையெனில், உன் குருதி இம்மண்ணில் பாயும்! வாளுண்டு, வல்லமையுண்டு; செ! உன் குருதியா; என் மண்ணில் கொட்டவேண்டும்! கூடாது! கூடாது! கூடவே கூடாது! இழிமகன் குருதி எமது மண்ணின் மாண்பை மாய்த்திடும்...என்றெல்லாம் வீரமுழக்கமிடத் தோன்றும், நாட்டுப்பற்று எனும் உணர்ச்சி, அந்த நாட்டுக்கு ஒரு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற நிலை எழும்போது பொங்கி எழுந்திடும், வீடெல்லாம் பாசறையாகும், விழியெல்லாம் வீரம் கொப்பளிக்கும்,

நாட்டுப்பற்று, காவியமும் கவிதையும் சுரந்திடச் செய்திடுவது.

நாட்டுப்பற்று, எதனை இழந்திடினும் உரிமையினை இழந்திடலாகாது என்ற உறுதியினை ஊட்டுவது.

நாட்டுப்பற்று, தன் வீட்டிலுள்ள ஒருவரே கூட வேறு கருத்து கொண்டவராக மாறிடின், அவரை வெறுத் தொதுக்கிடும் உணர்வையும் தரவல்லது,

நாட்டுப்பற்று மிகுதியும் கொண்டு நாட்டுக்கு ஆபத்து மூண்டெழுந்த போது ஆர்த்தெழுந்து, படை திரட்டி, கடும் போரிட்டு, பகை முறித்து, வெற்றிகண்டு விடுதலை எனும் வாகை சூடிய நிலை காணும்போது, சிறாரும் முதியோரும், மாளிகையுளோரும் மண்வீட்டு மகளாரும், ஆடவரும் ஆரணங்குகளும், பெற்றோம் விடுதலை! என்று இசைபாடி மகிழ்வர், களிநடமிடுவர், இன்ப வெள்ளம் மூழ்கிடுவர், என்று கண்டறியாத களிப்பினைப் பெறுவர், என்நாடு திருநாடு! என் நாடு;

எழில் நாடு! என் நாடு! எது இதற்கோர் ஈடு என்று எக்காளமிடுவர்.

அவ்விதமான மகிழ்ச்சிப் பெருக்குடன் விளங்கிற்று, மலைநாடு!

பெற்ரேம் வெற்றி!—என்ற முழக்கம் குன்றுகளிலும் குடில்களிலும், அங்காடியிலும் அருவிக் கரையிலும், மாளிகையிலும் மலர்ப் பொழிலிலும், ஏரடிப்போர் இருக்குமிடத்திலும் ஏடு படிப்போர் இருக்குமிடத்திலும் எழுந்தது. எங்கும் நிறைநாதமாயிற்று. சூழ்ந்து வந்த பகைவர்களைத் தாக்கி, அவர்தம் சூழ்ச்சியினைத் தூள் தூளாக்கி, பசுமை நிரம்பிய வயலெல்லாம் பட்டுப்போவதறிந்தும் இடிபாடுகள் பலப் பலவாய் ஏற்பட்டதறிந்தும், செல்வம் கரைந்ததறிந்தும், சேல்விழியாருடன் மகிழ்ந்து விளையாடிடும் பருவத்தினராம் காளையர் வெட்டுண்டு வீழ்ந்ததறிந்தும் மருளாமல், மனதிடம் இழந்திடாமல், உயிர் உள்ளவரைப் போரிடுவோம், இறந்து பட நேரிடினும் அடிமையாகவில்லை என்ற உணர்வுடன் மாய்ந்திடுவோம் என்ற எழுச்சியுடன் இறுதிக் கட்டம் வரைப் போராடி பெற்றனர் வெற்றி. மலை நாட்டினர்; பெருமகிழ்ச்சி! திருநாள்! தீயது தீய்ந்தது என சங்கு முழக்கிடும் திருநாள்! தாயகம் மீண்டது என்ற மகிழ்ச்சி மலர்ந்திட்ட விழா நாள். வீரம் வெற்றி ஈட்டிற்று என்பது விளக்கமான புதுநாள்! பொன்னுள்! நன்னுள்! வெற்றி விழா நடாத்தப்படும் நாள்! மலைநாடு. எழில் நாடாகக் கோலம் பூண்டது. எங்கும் மகிழ்ச்சி! எழுச்சி! உலா! உவகை! புதுப் புதுக் கவிதைகள் பாடுகின்றனர்! பொலிவு எங்கணும் தெரிகிறது. மலைநாடு, திருநாடு ஆகிறது! பேச்செல்லாம் பாட்டாகிறது! நடையெல்லாம் நடனமாகிறது! இடை கொடியோ என்றெண்ணத்தக்க எழில் மடவார், குடம் சுமந்து செல்கின்ருர், இல்லம் எழில் பெற. நீர் தெளித்து. வண்ணச் சுண்ணம் கொண்டு வாழ்த்து எழுதி மகிழ்ந்திட! வருகின்ருன் வீரமகன், வாட்போர் வல்லமையால் நாடு காத்திட்ட நல்லவன் என்ற பெயருடன்! என் மகன்! என் மகன்! என்று பொக்கை வாய்க் கிழவனுர் பேசுகிருர். வார்த்தை வரவில்லை, பொங்கி வருகிறது மகிழ்ச்சி! வெற்றித் திருமகனும் என் மகன்! வேலய்யா கூறுகிருர், அம்மகனைப் பெற்ற மணிவயிரும் எனக்கு! புகழ்கின்ருர் பூவரசர்! கேட்கக் கேட்க இனிக்கிறது! ஆயினும், அவன் சிறுவன். எனக்கு வாய்த்த ஒரே மகவு. போரில் புகுந்தானே, யார் அவனுக்கு வேளை அறிந்து உணவளித்திருப்பார், வினை முடிக்க முற்படின் வேறெதிலும் நாட்டம் கொள்ளாத பொல்லாத பயல் அவன்! போர்! போர்! என்றே பொழுதும் நினைத்தபடி இருந்திருப்பான்! துரும்பாய் இளைத்திருப்பான்! பொன் மேனி மங்கிப் போயிருந்திருக்கும்! களைத்திருப்பான், இளைத்திருப்பான்; கண்கொள்ளாக்காட்சியடி, போருடையில் உன் மகன் ஏறு நடை போட்டுவரும் காட்சி என்று பாடுகிருர், பிள்ளைப் பாசமது அறியாத கரும்பாத்தாள். பார்த்தஉடன் என் வயிறு என்ன பாடுபடும், மகன் இளைத்து வரும்போது, வெற்றி பெற்ருன் என்கின்ருர்; பூரித்துப் போகின்றேன்; நாட்டுக்கு அவன் தொண்டு நற்கடமை! ஆற்றல் மிக்கான் அவனிக்கு அணிகலனே, அறிந்தும் இருக்கின்றேன்! எனினும் என்னென்ன ஆபத்தோ, எத்தனைத் தாக்குதலோ, பசியும் பிணியும் வாட்டிற்ருே, பகலென்றும் இரவென்றும் பாராமல் பணியாற்றி பாடு பல பட்டானே! இதனை எண்ணிடும் போதன்ருே இதயம் வெடித்திடும் போலாகிறது, என்று உருகி நிற்கும் தாய்மார்கள், விழா மகிழ்ச்சிக் கிடையிலும் 'பிள்ளைப் பாசத்தின்' நெகிழ்ச்சியினைப் பொழிந்திடுகின்றனர். காதலன் வருகின்ருன், களம் கண்ட மாவீரன்! குறும்புக்காரியடி என்கின்ருள் காரிகையும்! உள்ளதைச் சொன்னேன் அக்கா! உன்போல் கள்ளத்தனம் எனக்கு எள்ளளவும் இல்லை என்கின்ருள் அரும்பு. சாலைத் தெருவிலுள்ள சோலையப்பர் மகன் வந்தாரா? எப்படி இருக்கின்ருர்! கண்ணும்பா பெற்ற மகனைக் கண்டாயா—காலிழந்தானுமே பாவம்! எல்லப்பன் கூறுகிருர், என் மகனை. எட்டுப்பேர் சூழ்ந்து கொண்டனராம், எடுத்தானும் வாள் அதனை. சுழற்றினும் காற்றெனவே. வீழ்ந்தவர் அறுவர், விரண்டோடியவர் இருவர். இழந்தது வாள் முனை, என்று கூறினுன் மகன் என்று பேசிப் பேசி மகிழ்கின்ருராம். வந்த உடனே வடிவேலன் கேட்டானும் அன்னையை, கிள்ளை எப்படி இருக்கின்ருள், தடுக்கி விழுந்தாளாமே, ஏன்.? வலி பொருது கதறி நின்ருளோ என்றெல்லாம். அன்பென்ருல் அது அன்பு—என்று பேசுகின்ருள், காதலில் சிக்குண்ட கலாபம்! எவரெவர் பெயர்களையோ வாயால் கூறுகின்ருள், மனமோ ஒரே ஒருவன் மீதுதான்! அவன் மீது கோபமாம்! வந்தானே, வந்தானு! நாடு காத்திடத்தான்வேண்டும்; வேலை முடிந்தது, வெற்றியும் கிடைத்தது; பெருமை, மகிழ்ச்சி; இல்லை என்ரு கூறுவர்; ஆனுல் நானும் இருக்கின்றேனே, பிரிவு எனும் பகையால் தாக்குண்டு; வந்தாரா... அவர் ஏன் வருவார்! உள்ளன்பா அவருக்கு...உதட்டளவு! என்றெல்லாம் எண்ணம் குமுறும் நிலை. அதை மறைக்கவே எல்லப்பன் மகன், சோலையப்பர் மகன் என்று எவரெவர் பெயர்களையோ கூறுகிருள். நான் ஒன்றும் ஏங்கித் தவிக்கவில்லை என்று பேசி பொய்க் கோபம் காட்டிடவும், ஊடல் செய்திடவும் ஒரு ஒத்திகை. அரும்புக்குக் கூட அந்த வித்தை புரிகிறது—ஓரளவு! "அக்கா, பக்காத் திருடி; அத்தான் வரட்டும் வரட்டும்' என்று கூறுகிருள் அரும்பு,

மலை நாடு விழா கொண்டாடும் நாளில், களம் சென்றிருந்த படையினரில் பலர் வீடு திரும்புகின்றனர்; ஏற்கனவே வந்தவர் போக, மற்றவர்.

வீரர்க்கு வரவேற்பு— வாழ்த்து—விருது! வெற்றி வளைவுகள், தோரணங்கள், ஊரெங்கும், வாரணங்கள் முகப்படாத்துடன் பவனிக்குச் செல்கின்றன! புரவிகள். தலை அசைத்துச் செல்லும் காட்சி எம்மால்தான் வெற்றி எம்மால்தான் விடுதலை! என்று அறிவிப்பது போலத் தோற்றமளிக்கிறது. நகரின் பல பகுதிகளிலுமிருந்து புறப்பட்டவர்கள் அனைவரும், அரண்மனை வாயிலை நோக்கிச் செல்கின்றனர்.

முரசு ஒலிக்கிறது,

மலைநாட்டு :மன்னன் அரண்மனை முன்மண்டபத்தில், விழாக்கோலம் காணப்படுகிறது.

வெற்றிச் சங்கொலியும், வேறு பல ஊது குழலொலியும் கேட்கிறது.

மலைநாட்டுப் பாதுகாவலன் விக்ரமன், கெம்பீரக் கோலத்தில் காணப்படுகிருன்:

பத்தாண்டுச் சிறுவன், பட்டத்தரசன் குமாரவேலன், மகிழ்ச்சிப் பெருக்குடன் அமர்ந்திருக்கிருன்.

மண்டலத்துப் பிரமுகர்கள், போர்த் தளபதிகள்' வணிகச் சீமான்கள் ஆகியோர் வரிசை வரிசையாக அமர்ந்துள்ளனர்; அனைவரும் ஆனந்தமாக உள்ளனர்.

பாதுகாவலன், விக்ரமன் மன்றத்தை நோக்கி தலைவணங்கிவிட்டு, மன்னன் குமாரவேலனை வணங்கி நிற்கிருன்.

வாழ்க மலைநாடு!

வாழ்க நம் மன்னர்!

என்று விக்ரமன் கூறுகிறுன்.

அனைவரும் எழுச்சியுடன்,

வாழ்க மலை நாடு!

வாழ்க நம் மன்னர்!

என்று முழக்கமிடுகின்றனர்.

மன்னன் முகம் மலருகிறது. பாதுகாவலன் புன்னகை புரிகிறுன்.

முரசு மீண்டும் ஒலிக்கிறது;

ஒரு பெரிய பேழையை நாலு வீரர்கள் தூக்கிக் கொண்டு வருகிருர்கள்.

பாதுகாவலன் எதிரில் அதைவைத்துவிட்டு வணக்கம் செய்துவிட்டு, ஒருபுறம் ஒதுங்கி நிற்கிருர்கள்:

பாதுகாவலர், பேழையைத் திறந்து, அதனுள் இருந்து ஒரு வாளை எடுத்து மன்னன் தாளின் கீழ் வைத்தபடி

"அரசே! இதோ மாற்ருனின் வாள்! தங்கள் தாளின் கீழ்!"

என்று கூறுகிருன், அனைவரும்,

வாழ்க மன்னர்!

வாழ்க மலைநாடு!

என்று உற்சாகத்துடன் முழக்கமிடுகின்றனர்.

குமாரவேலன், வாழ்க பாதுகாவலர்

என்று கூறுகிருர்.

விக்ரமன், பணிவுடன் வணக்கம் செய்கிருன்.

மன்றத்தினர், வாழ்க பாதுகாவலர்

என்று வாழ்த்துகின்றனர்.

விக்ரமன், மன்னனையும் மன்றத்தையும் மாறி மாறிப் பார்த்தபடி, கெம்பீரமான தொனியில் பேசுகிருன்.

"வெற்றி, வேந்தே! வெற்றி பெற்ருேம்!!

மாற்ருன் தோற்ருேடினுன் — மலைநாடு வெற்றி பெற்றுவிட்டது.

கட்டளையை நிறைவேற்றிவிட்டேன் காவலா!

காடு ஆக்கப்பார்த்தனர் நம் தாயகத்தை காதகர்கள்.

பொங்கி எழுந்தனர் நம் போர் வீரர்கள்; தோற்ருேடினர் மாற்ருர்.

கடமையைச் செய்து முடித்துவிட்டேன் —தாயகம் தலை நிமிர்ந்து நிற்கிறது!! அரசே! உமது காலடியில் மாற்ருனின் உடை வாள்! நம் நாட்டை எதிர்த்திடத் துணிந்த தீயோனின் கொடுவாள்!!"

விக்ரமன் பேசியபடி, வாளை எடுத்து, அரசன் கரத்தில் தரச் செல்கிருன்; குமாரவேலன்.

"மலை நாட்டின் வீரவெற்றியை அனைவரும் அறியட்டும், பாதுகாவலரே! மாற்ருனின் இந்த வாளை, நமது கோட்டை வாயிலில், தொங்கவிடச் சொல்லுங்கள்" எனக் கூறியது கேட்டு மன்றத்தினர், கையொலி செய்து தம் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர்.

அரசன், பாதுகாவலரைப் பார்த்து,

நன்றி! பாதுகாவலரே! மிக்க நன்றி நாட்டை மீட்டுத் தந்தவரே! என் தந்தையின் நற்புகழுக்கு இழுக்கு ஏதும் வராமல் பாதுகாத்தீர், பெருமை அடைகிறேன். வெற்றி தேடித் தந்த வீரர்கள் அனைவருக்கும் நன்றி,

என்றுசுருளில் எழுதியிருப்பதைப்படிக்கிருன், தடுமாற்றமின்றி பாதுகாவலர், மன்னனைப் பார்த்து,

"தாயகத்தின் தன்மானம் காத்த மாவீரர் சிலருக்கு மன்னு! தாங்கள் திருக்கரத்தால், வீரப்பதக்கம்... தரக்கேட்டுக் கொள்கிறேன்

என்று பணிவுடன் கூறுகிருன்.

அரசன், மகிழ்ச்சி பாதுகாவலரே! என்று கூறுகிருன், முகமலர்ச்சியுடன்.

பாதுகாவலரின் பார்வையின் பொருள் அறிந்த பணியாள் ஒரு ஓலைச் சுருளைப் பிரித்து,

கற்பூரசுந்தரம்

என்று படித்ததும், அறுபது வயதுக்கும் அதிகமான வயோதிகப் பருவத்தினர் வருகிருர்—கெம்பீரமாக. அவருடைய தோற்றத்தைக் கண்டதும் மன்றத்தினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்.

அவர் வணங்கி நிற்கிருர்—மன்னன் அவரிடம் ஒரு பதக்கம் அளிக்கிருர்—

மார்த்தாண்டன்

மணிபல்லவன்

வீரப்பன்

சீரூர்த்தேவன்

என்று பெயர்கள் படிக்கப்படுகின்றன; வீரர்கள் வருகிருர்கள்—விருது அளிக்கிருர் மன்னர்—வணக்கம் செய்கிருர்கள்—மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்.

குணாளன்

என்ற பெயர் படிக்கப்படுகிறது; மன்றத்திலே மிகுதியான மகிழ்ச்சியும் ஆரவாரமும் எழுகிறது.

கட்டிளம் காளை ஒருவன், கெம்பீர நடை நடந்து, அனைவரையும் புன்னகையால் மகிழ்வித்தவண்ணம், வந்துநின்று மன்னனை முதலிலும், பாதுகாவலனை இரண்டாவதாகவும் வணங்கி நிற்கிருன். விருது அளிக்கப்படுகிறது—மக்கள் கையொலி எழுப்பி மகிழ்கின்றனர். பாதுகாவலர்:—

மன்னு! வெற்றி விழா நடத்த தங்கள் உத்திரவு......

குமாரவேலன்:-

ஆம்! நாடெங்கும் விழாநடைபெறட்டும்!

....

முரசு ஒலிக்கிறது, மன்றம் கலைகிறது வெற்றி! வெற்றி! வெற்றி! என்ற கீதம் கேட்கிறது.

விருது அளிக்கும் விழா கண்டு மகிழ்ந்த இரு பெரியவர்கள், தமது பழைய நினைவுகளைக் குறித்து உரையாடியபடி வீடு திரும்புகின்றனர். இதற்கு முன்பு நடைபெற்ற பல போர் பற்றிய பேச்சு, முன்னுள் போர்

வீரர்கட்குப் பெரிதும் மகிழ்ச்சியூட்டும் பேச்சல்லவா! அதிலும் "அந்தக் களத்திலே நான் போரிட்டபோது"—என்ற முன்னுரையுடன் பேசத் தொடங்கினால், விரைவிலா அந்தப் பேச்சு முடிவடையும்! வயதாகிவிட்ட காரணத்தால், இருமிட நேரிடினும், தள்ளாமையுடன் போராடியபடியேனும் அந்தப் பழங்கதையை முழுவதும் கூருமல் விடுவாரா, பெரியவர்! களத்தின் அமைப்பு, படைவரிசையின் அமைப்பு, போர்க் கருவிகளின் வகை, போரிட்ட முறை, ஏற்பட்ட ஆபத்துகள், உண்டான படுகாயங்கள், எதிரியை ஏய்த்திடச் செய்த தந்திரம் என்பன பற்றிப் பேசிப் பேசி மகிழ்வதுடன், இளைஞர்களுக்கு, போர் முறை குறித்த பாடம் பலவும் அந்தப் பேச்சிலே கிடைத்திடும்படியும் செய்வர் முதியவர்களாகிவிட்ட முன்னாள் போர்வீரர்.

நகரின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுக்கொண்டிருந்த மகிழ்ச்சி நிரம்பிய நிகழ்ச்சிகளுக்கிடையில், இரு முதியவர்களும், தமது பருவத்திற்கேற்ற முறையில் 'பழங்கதை' பேசி மகிழ்ந்திருந்தனர்.

"மாடூர் போர் பற்றிய நினைவு இருக்கிறதா மாந்தோப்பாரே!—என்று கேட்கிறார் ஒரு முதியவர்; மற்றவர், "நினைவு சிறிதளவு மங்கிவிட்டிருக்கிறது; தளர்ச்சிதான் காரணம்" என்று கவலையுடன் கூறுகிறார், மாந்தோப்பார்.

"நினைத்தேன்; அப்படித்தான் இருக்குமென்று. தளர்ச்சி மட்டுமல்ல அதற்குக் காரணம். உண்மையான காரணம் நான் அறிவேன். மூன்று மக்களை ஈன்றெடுத்தீர். மூவரும் களத்தில் மாண்டனர்; மனம் உடைந்து தானே இருக்கும்" என்று உருக்கமாகக் கூறுகிறார் முதியவர் முல்லையூரார்.

"நாடு வாழ உயிர் ஈந்தனர்...இறவாப் புகழ் ஈட்டினர் என் மக்கள்...பெருமைப்படுகிறேன்...மனம் உடையவில்லை..." என்று கூறியபடி கண்களைத் துடைத்துக் கொள்கிறார் மாந்தோப்பார்.

கவலைப்படாதீர்! நடந்தது நடந்து விட்டது. நாடு வாழ இத்தகைய இழப்புக்களை ஏற்றுத்தானே தீரவேண்டி இருக்கிறது.

"பயங்கரமான போர்! எதிரிப்படை மிக அதிகம் நமது படை அளவிலே அவ்வளவு இல்லை. எதிரிகள் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். பெரிய சேதம் அதனால்தான்."

"வீரதீரத்துடன் போர் புரிந்தால் மட்டும் வெற்றி கிட்டிவிடுமா! போர் முறையும் சரியாக அமைய வேண்டும். காலம், இடம், வகை பார்த்துப் போரிட வேண்டும். நான் சொன்னேனே மாடூர் போர், அதிலே வெற்றி கிடைத்ததற்குக் காரணம், போர் முறைதான்; போர்த் தந்திரம் என்று சொல்லலாம். நாளாகவாக, மாடூர் போர் பற்றிய நினைவு மறந்துவிடும் என்பது தெரியும் எனக்கு. அந்தப் போர்பற்றிய ஆய்வுரை, போர் வீரர்களுக்கு நல்ல பாடமாக அமையும் என்ற எண்ணம் எனக்கு. ஆகையால், அந்தப்போர் பற்றிய விவரத்தை விளக்கமாக எழுதி வைத்திருக்கிறேன்."

"மகன் இல்லை உமக்கு......உம்மிடம் பாடம் கேட்டுப் பயன்பெற...எனக்குமூவர்...இருந்தனர். அவர்கள் மற்றவர்களுக்குப் 'பாடம்' புகட்டிவிட்டு மறைந்தனர்."

"புல்லரிக்கிறது உமது பேச்சு...என்ன செய்வது... மகன் இல்லையே என்ற மனக்குறை உண்டு எனக்கு. ஆனால் என் மகள், புலவர் பூவரசரிடம் பாடம் பெற்று வருகிறாள். நல்ல அறிவாளி. காவியத்திலே மிக விருப்பம். எழுதுந்திறன் நிரம்ப. அறிவு பரப்பிடும் பணியிலே நாட்டம் மிக்கவள். மாடூர் போர்பற்றிய வரலாறு எழுதி வைத்திருப்பதாகச் சொன்னேனே, உண்மையில் நான் எழுதவில்லை. நான் சொல்லிக்கொண்டு வந்ததை, முறைப்படி அழகுற என் மகள் கொண்டலழகி தான் எழுதி இருக்கிறாள். படிக்கச்சொல்லிக் கேட்போமா."

"மிக்கமகிழ்ச்சி. போர்க்காதைகளைக் கேட்பது என் மனதுக்குப் புதுத் தெம்பு தரும்."

மகளைஅழைத்து, மாடூர் போர்பற்றிய சுவடியைப் படித்துக்காட்டும்படி முதியவர் கேட்டுக் கொள்கிறார்.

கொண்டலழகி மாடூர் போர்பற்றிய வரலாற்றைப் படித்துக் காட்டுகிருள்.

மிகப்பெரிய படையொன்று வருகிறது பயங்கரப் போர்க் கருவிகளுடன்—அளவிலே சிறிதாக உள்ள மறவர் படையைத் தாக்கி அழிக்க.

மறவர் படை, ஒரு கணவாயில் காவல் காத்து நிற்கிறது. எதிரிகள் அந்தக் கணவாயில் நுழைந்து கடந்து மேலால் செல்லாதிருக்க.

மேலால் சென்ருல், எழிலூர். அங்கு நிரம்ப தொழிலிடங்கள் வயல் வெளிகள், மாடு மனை மக்கள், குழந்தை குட்டிகள்.

எழிலூரைக் கொளுத்திட வேண்டும், தீப்பற்றி எரிந்து மக்கள் குய்யோ முறையோ என்று கூச்சலிட்டு ஓடும்போது, வெட்டிச் சாய்க்க வேண்டும், பொருள்களைக் கொள்ளையிட வேண்டும், பெண்களைப் பிடித்திழுத்துச் சென்று கற்பழிக்க வேண்டும்—இது பாய்ந்து வரும் மாடூர் பெரும்படையின் எண்ணம்—திட்டம்.

கணவாயைக் காவல் காத்து நின்ற மறவர் படை, இதனை அறிந்திருக்கிறது—எனவே எப்பாடுபட்டேனும், பாய்ந்துவரும் படையை எதிர்த்துப் போராடத் துணிவு கொள்கிறது.

போராடிக்கொண்டு வருகிறது—பாய்ந்து வரும் படையின் அளவு மிக அதிகமாதலால், கொல்லப்பட்டவர்கள் போக மீதமுள்ளவர்கள், மற்றவர் படையைத் தாக்குகின்றனர்; வேகத்துடன்—மறவர்படை, உயிரிழப்பதுபற்றிக் கவலைப்படவில்லை; கலங்காது போரிடுகிறது.

எனினும், நீண்ட நேரம் போர் நீடிக்க முடியாது—செத்தவர் போக மீதமுள்ளவர்களே தம்மைவிட எண்ணிக்கையில் மிக மிக அதிகம்—அந்த எண்ணிக்கை பலம் கொண்ட படையை, எதிர்த்து நின்று தாக்கி, அதன் பாய்ச்சலைத் தடுத்துவிட முடியாது என்று மறவர் படை உணருகிறது.

பாய்ந்து வரும் படையைத் தடுத்திட முயற்சிக்காமல் இருப்பது வீரத்துக்கு எடுத்துக்காட்டு அல்ல.

அவ்வளவு பெரிய படையை எப்படிப் போரிட்டு விரட்ட முடியும் என்று செயலற்றுக் கிடந்தால், வீரம் பழிக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல, எழிலூரை நோக்கி எதிரிப்படை வெகு எளிதிலேயும் மிக விரைவாகவும் சென்று தமது அழிவு வேலையை நடத்தி முடித்துவிட முடியும்.

கணவாய்க் காவல் புரியும் படை, இந்நிலையில் என்ன திட்டமிடும்?

எவ்வளவு தீரமாகப் போரிட்டாலும், இறுதி வரையில் தாக்கிப் பாய்ந்துவிடும் படையை, எழிலூர் நுழையாமல் இருக்கச் செய்திட முடியாது.

சிறிய அளவுள்ள மறவர்படை, பாய்ந்து தாக்கி வரும் எதிரியின் மிகப் பெரிய படை பலத்தை, அடியோடு ஒழித்துக் கட்டவும் முடியாது.

எழிலூர் மக்களையும், அழிவுப்படையிடம் சிக்கி நாசமாகாமல், பாதுகாத்தாகவேண்டும்.

என்னசெய்வது, மறவர்படை? கடைசீ ஆள் உள்ள வரையில், கடைசீ மூச்சு உள்ள வரையில் போராடி மடியலாம்!

வீரத்துக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு! காவியம் புனைவோர் கண்ணினும் மேலானது என போற்றத்தக்க எழுச்சி மிகு நிகழ்ச்சி; ஐயமில்லை!

ஆனால், கடைசீ வீரன் வீழ்ந்து படுகிற வரையில், போராடிடுவதும் ஒரு ஆள் கூட மிஞ்சாமல், மடிந்து படுவதும், எழிலூருக்கு வர இருக்கும் அழிவை, ஆபத்தைத் தடுத்திட போக்கிட முடியுமா?

இஃதன்றே மிக முக்கியமான பிரச்சினை கணவாய்க் காவல் படையின் கடமை, எழிலூர் மக்களை, பாய்ந்து வரும் எதிரிப்படைகளிடமிருந்து காப்பாற்றுவது.

மறவர் படை முழுவதும் மடிந்திடுவதால், அந்த எண்ணம் நிறைவேற வழி இருக்கிறதா? எழிலூர் காப்பாற்றப்படுமா?

அதற்கு வழி இல்லை — ஏனெனில், சீறிப் போரிடும் மறவர் படை அழிக்கப்பட்டபிறகு, தடுப்பார் எவருமின்றி, பாய்ந்துவரும் எதிரிப்படை எழிலூர் நுழையும்—பிறகு கொலை, கொள்ளை, கற்பழித்தல் தீ மூட்டல், யாவும்.

வரலாறு, இரு நிழ்ச்சிகளையும் குறிப்பிடும்—பிற்காலத்தில்—கடைசீவரை எதிர்த்து நின்று மடிந்த கணவாய்க் காவல்படையின் வீரத்தையும்—காவல்படையினர் கொல்லப்பட்டுப் போனதால், உள்ளே நுழைந்த எதிரிப்படை எழிலூரை நாசமாக்கியதையும்!

கணவாய்க் காவல் படையின் வீரம், படிப்போரின் நெஞ்சிலே வீர உணர்ச்சி எழச்செய்யும்.

எழிலூரின் அழிவுபற்றிய செய்தி! உள்ளத்தை உருக்கும்.

இந்த இரு உணர்ச்சிகளும் பிற்காலத்திலே ஏற்படுவதன்மூலம் ஏற்கனவே அழிக்கப்பட்டுப்போன எழிலூர், எந்தவித ஏற்றமும் பெறுவதற்கில்லை.

இந்நிலையில், வீரத்துடன் புத்தி கூர்மையுள்ள நிலையினராக, கணவாய்க் காவல்படையினர் இருப்பின் என்ன செய்வார்கள்?

சீறிப் போரிடுவர், மறவர் ஆதலால்! இரத்தம் சிந்திடக் கலங்கமாட்டார்கள். ஆனுல் அதேபோது, போர் நடாத்திக்கொண்டிருக்கும்போதே, எழிலூர் மக்களை, வேறு பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் சென்று, அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ளச் செய்ய வேண்டுமென திட்டமிடுவர்.

போரிட்டபடி மடிவோம், பிறகு நடப்பது நடக்கட்டும், என்று இருந்திடமாட்டார்கள்; எந்த நோக்கத்துக்காகப் போர் நடக்கிறதோ, அந்த நோக்கமான, எழிலூர் காப்பாற்றப்படுவதுபற்றி யோசித்து ஒருமுடிவு செய்தாக வேண்டும்.

வீரத்தை நிலைநாட்டியாகவேண்டும் என்பதுபற்றி மட்டுமே நோக்கம் கொண்டிருந்தால், கணவாய்க் காவல் படை, போரிட்டபடி மடியலாம். வீழ்ந்து கிடக்கும் அந்த வீரர்களின் உடலங்களைத் தமது காலால் மிதித்தபடியும் உதைத்துத் தள்ளியபடியும், பாய்ந்து வரும் படை வெறி வேகத்துடன் எழிலூர் நுழைந்து அழிவு வேலையை நொடியிலே செய்து முடித்திடும்,

தம்மைக் காப்பாற்ற, கணவாயின் நுழைவு வாயிலில் நின்று போரிட்டு மடிந்தனர் மறவர் என்று அறிந்ததும், எழிலூர் உள்ளோர் உருகுவர், வழிபடத் தக்கவர்கள் மானங் காத்திடப் போரிட்டு மடிந்த அம்மறவர்கள் என்று நெஞ்சு விம்மிட, கண்கள் கலங்கிடக் கூறுவர். அடுத்தகணமோ, ஐயோ! நம்மைக் காப்பாற்ற வல்லவர்களாக இருந்துவந்த மறவர் படையினரும் கொல்லப்பட்டுப் போயினரே, இனி பாய்ந்துவரும் பகைவர்களிடமிருந்து நம்மைக் காத்திட எவர் உளர்? நம் கதி என்ன?

Our Heartiest Greetings for a Happy Pongal!

GOOD MILK! REASONABLE RATE!!

ESTD: 1927 PHONE: 61068

THE MADRAS CO-OPERATIVE MILK SUPPLY UNION LIMITED,

Ayanavaram, :: Madras-23.

Sri V. MUNUSAMY, EX. MAYOR.
PRESIDENT.

Pasteurized milk is whole milk subjected to heating to 180° F and suddenly cooled to 45° F and thereby rendered free from Pathogenic Bacteria without any change of its natural original nutrient and untouched by hand. It is always safter and cleaner than fresh milk drawn and distributed under ordinary circumstances. Customers are requested to encourage Co-operative enterprice.

PRICES:

		Rs. P.
MILK:		
Through Depots	...	1—24 per Litre
Through House Delivery Boys (Extra Rs. 3/- per month-service charge)	...	1—24 ,,
Hotels and Institutions	...	1—46 ,,
Special Orders	...	1—60 ,,
PRODUCTS:		
Ghee	...	11—00 per Kilo
Kova (without Sugar)	...	13—00 ,,
Kova (with Sugar)	...	8—00 ,,

E. S. SREENIVASAN,
CO-OPERATIVE SUB-REGISTRAR,
SECRETARY.

வெட்டிச் சாய்ப்பார்கள், நமது சொத்து சூறையாடப் படும், நமது பெண்டிர்......?

இவ்விதம் எண்ணி, எழிலூர் உள்ளோர் கலங்குவர்.

வெட்டி வீழ்த்துங்கள்! செத்துத் தொலைப்போமேயன்றி, சிரம் தாழ்த்தமாட்டோம்!—என்று வீர உரை பேசி, எழிலூர் உள்ளோர் மடிந்துபோயின், வரலாறு, அந்த அழிவுபற்றி எடுத்துக்காட்டும் கட்டம் வருங்கால மக்கள், படித்து வீர உணர்ச்சி, பெறத்தக்க அருமை மிகு காப்பியமாக அமையும்.

அஃதன்றி, நம்மைக் காப்பாற்றத் துணிந்து போரிட்ட மறவர் படையே அழிக்கப்பட்டுப்போன நிலையில், நாம் பகைவர்களை எதிர்த்து நின்று என்ன செய்ய முடியும் என்று எண்ணி பீதிகொண்டு, எதிரியிடம் எழிலூர் உள்ளோர் சரண்புகுந்துவிடின், கணவாயில் கொட்டப்பட்ட இரத்தமும், காட்டப்பட்ட வீரமும், விழலுக்கு இறைத்த நீராகிப் போகிறது. அந்த வீரத்தைப் போற்றிடும் காப்பியம், எழிலூர் மக்கள் உயிர் பிழைத்திட சரண்புகுந்த நிலையினை கறையென்று காட்டும்; படிப்போர், பழிப்பர்!

எழிலூர் மக்களைக் காப்பாற்ற, அவர்களுக்கு அழிவோ, அடிமைத்தனமோ ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளப் போரிடும் மறவர் படை. இந்த நிலைமையில் வீரத்தையும் நிலைநாட்டி எழிலூர் மக்களையும் காப்பாற்ற வழி ஏதேனும் கிடைத்திடாதா என்று எண்ணுவது இயற்கை; தேவை.

போர் கடுமையானது என்பது மட்டுமல்ல, பகைவர்களின் திட்டம் எப்படியும் எழிலூரை அழித்துவிட வேண்டும் என்பதாகும்.

பல்வேறு போர் முறைகளாலும் பலன் காணாது போகவே, பகைப்படை புதிய போர்க் கருவி தயாரித்துக்கொண்டு, போர் துவக்கி நடத்துகிறது.

எழிலூர் மக்களை அடிமைகொள்ள நாம் எண்ணும்போதெல்லாம், இந்த மறவர்படை அல்லவா, மார்தட்டிக்கொண்டு வருகிறது, எதிர்க்க! இந்த மறவர் படை இருக்கிறது என்பதால் அல்லவா எழிலூர் மக்கள், துணிவுடன்

கொடி பறக்கவிட்டுக்கொண்டு, குடும்பம் நடத்துகிருர்கள், இனி முடியுமா, துணிவுகாட்ட! மறவர் படையிடம் இல்லாத புதிய, பயங்கர ஆயுதத்தைச் செய்தாகிவிட்டது; அந்தக் கூர்மைமிகு ஆயுதத்துடன் பெரும்படை கிளம்புகிறது. மறவர் படையை அழித்திட. மறவர் படையினரிடம் உள்ள வீரவாளை தன்னிடம் இழுத்துக்கொள்ளத்தக்க 'காந்தவாள்' எனும் புதிய கருவியுடன் கிளம்புகிறது, பெரும்படை! வாளுடன் வாள், வேலுடன் வேல், ஈட்டிக்கு ஈட்டி, என்று இருப்பின், மறவர் படையை வீழ்த்த முடியாது. இப்போது, வாள் வேல் ஈட்டி, இவை மறவர் படையிடம். இரும்பாலான எந்தப் போர்க் கருவியையும் தன்னிடம் இழுத்துக்கொள்ளத்தக்க ஈர்க்கும் தன்மை, காந்தசக்திகொண்ட வாளுடன் கிளம்புகிறது பெரும்படை!

வீரவாள் எம்முடன் உள்ள வரையில், வெற்றி எமதே! என்று முழக்கமிட்டுவந்த மறவர் படை, பெரும்படையை நெருங்கிப் போரிடவேண்டும்; அருகே சென்ருலோ. காந்தவாளின் ஈர்க்கும் தன்மையால், மறவர் படையிடம் உள்ள வாட்கள் அவர்களின் கரங்களில் இருக்கமுடியாது! என் செய்வர்; கொல்லப்பட்டுப்போவர்! மறவர் படை கொல்லப்பட்டுப்போன பிறகு எழிலூர் மக்கள் எம்மாத்திரம்!

எங்கே உங்கள் கொடி! எங்கே உமது கொற்றம்! என்று கேட்டிடலாம். கோட்டையூருக்குள் அனைவரும் இடம் பிடித்துக்கொண்டு, அங்கு கிடைக்கும் வலிவின் துணைகொண்டு, அரசூர் சென்றுவிடுவோம் என்று கூறி வந்தீர்களே! கோட்டையூரில், உங்களிலே சிலர் இடம் பெற்ற உடனே, இந்த முழக்கம் அதிகமாகிவிட்டதே! எழிலூரிலிருந்துகொண்டு கோட்டையூருக்குச் சென்று இடம் பிடித்துக்கொண்டு வந்தீர்கள் — கோட்டையூர் பொது என்பதாலும், கோட்டையூரில் உள்ளவர்கள் மீது போர்க்கருவிகள் கொண்டு தாக்கக்கூடாது; வாதிடலாமேயன்றி போரிடக்கூடாது என்ற ஏற்பாடு ஒப்புக்கொள்ளப்பட்டு நிலைத்து இருப்பதாலும், அங்கு சென்ருல் பாதுகாப்புக் கிடைத்துவிடும்!

இந்த ஏற்பாட்டைத் துணைகொண்டு, கோட்டையூருக்குள் மிகப்பெரும்பாலோர் இடம் பிடித்துக்கொண்டால் அங்கிருந்தபடி அரசூர் செல்ல வழி அமைத்துக் கொள்ளலாம் என்பது அல்லவா உமது நினைப்பு! திட்டம்!!

அதைத் தடுக்கத்தான், புதிய ஆயுதம் கொண்டு போர்! எழிலூரையே அழித்துவிடுகிருேம். போரிடத் துடிக்கும் மறவர் படையை, புதிய ஆயுதம்கொண்டு, அழித்துவிட்டு, பாதுகாப்பற்றுப்போன நிலைக்கு எழிலூர் வந்ததும், அதனை அழித்துவிட்டால், பிறகு கோட்டையூர் செல்வது ஏது! அங்கிருந்து அரசூர் செல்லும் திட்டம் எங்கனம் வெற்றிபெறும்! உங்கள் மூலபலத்தை அழித்துவிடத்தான், புதிய ஆயுதம்!! — என்று மாற்ருர்கள் கொக்கரிக்கின்றனர். மறவர் படை, எத்துணை கஷ்ட நஷ்டத்தையும் தாங்கவல்லது என்பதனையும் மாற்ருர் அறிவர். பல தாக்குதல்களைத் தாங்கிக்கொண்டது இந்த மறவர்படை என்பதனையும் அறிவர்.

வெட்டவெளி! புல்பூண்டு முளைக்காது! கரம்பு!— என்று மற்றவர் கருதினர் எழிலூர் அமைந்துள்ள இடத்தை மறவர்படை செப்பனிடத் தொடங்கிய போது.

வீண் வேலை என்றனர் பலர்! இதனைப் பண்படுத்த துணிவுடன், பொறுமை உணர்ச்சியுடன், பொறுப்பு உணர்ச்சியுடன் பாடுபடவேண்டும்; பலர் முயன்று பார்த்து முடியாது போய்விட்டது; கைபிசைந்து கொண்டு வெளியேறிவிட்டனர். பலைப்பாம்பு புரளும் பிலங்கள், நரிகள் பதுங்கிக்கிடக்கும் புதர்கள், புலிகள் உலாவும் காடு இப்படி இருக்கிறது வெட்டவெளியைச் சுற்றிலும். எந்த நேரததிலும் ஆபத்து எழலாம் எத்தகைய ஆபத்தும் எழலாம். இதனைத் தாங்கிக்கொண்டு. வெட்டவெளியைச் செப்பனிட்டு பயிர் வளர்த்தால் காட்டுப் பன்றிகள் புகுந்து அழித்துவிடக் கூடும். இது தெரியாமல் மறவர்படை இந்த வெட்டவெளியை வாழ்வு அளிக்கத்தக்கது ஆக்குவோம் என்று வறட்டுக் கூச்சலிடுகிறதே — என்ன பேதமை! என்ன பேதமை! என்று இரக்கம் காட்டுவோர் போலக் கோலம்கொண்டு ஏளனம் செய்தனர் பலர்.

எதற்காக இந்த வீண் வேலை! ஏன் புதிய இடம்? மாடூர் இருக்கிறது, உங்களுக்கு இடமளிக்க! வளம் நிறைந்த இடம்! வாட்ட வருத்தமின்றி வாழலாம். ஒரே ஒரு சிறு நிபந்தனைதான்! மாடூர் நாட்டாண்மைக்காரரிடம், கைகட்டி வாய்பொத்தி நிற்கவேண்டும்; அவ்வளவுதான். அடிமைத்தனம் அல்லவா அது என்று கேட்கத் தோன்றும். ஏன் அப்படி எண்ணிக் கொள்ளவேண்டும்! வாழவழி! பசியின்றி பட்டினியின்றி இருக்க வழி!! இதை உணர்ந்து. மாடூர் சென்று பிழைக்கும் வழி தேடிக் கொள்ளாமல், மறவர் படை, எமது வழி, எமது மொழி, எமது கொடி எமது கொற்றம் என்று ஏதேதோ பேசிக் கொண்டு, வெட்டவெளியில் உலவுகிறதே என்று அறிவு புகட்டும் ஆற்றல் கொண்டோர் எமத் தம்மைக் கருதிக்கொண்டோர் சிலர் கூறினர்.

மறவர் படை, இதற்கு ஒப்பவில்லை,

ஏளனம், எரிச்சல், எதிர்ப்பு எனும் எவைகளுக்கும் கலங்காது கடுமையாக உழைத்து, கட்டுப்பாடுடன் உழைத்து கண்ணியமான வாழ்வு கிடைக்கத் தக்கதான முறையில், எழிலூர் அமைத்தனர்; எழிலூரிலிருந்து பெற்ற வசதியின் காரணமாகச் சிலர், கோட்டையூர் செல்லும் உரிமை பெற்றனர், கோட்டையூரில் தமக்குச் சிறப்பிடம் கிடைத்தால் அரசூர் சென்றிடலாம் என்ற நம்பிக்கை பெற்றனர்.

இந்த நிலையில்தான், மறவர் படையின் ஆயுதத்தைச் செயலற்றதாக்கத்தக்க 'மாயக் கருவி'யுடன் பெரும்படையை மாடூர் ஏவிவிட்டது.

மறவர் படையை நடத்திச் செல்வோர், வழக்கமான போர் முறை நிலைமைக்கு ஏற்றதல்ல; புதுமுறை கண்டாக வேண்டும் என்று கருதினர். கலந்து பேசலாயினர்.

தன் வலியுடன் மாற்றான் வலிவையும் ஒப்பிட்டுப் பார்த்துத்தான் போர் முறை வகுத்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்தினை வள்ளுவப் பெருந்தகை நெடுங்காலத்துக்கு முன்பே கூறியுள்ளதை மறவர் படையினர் நன்கு அறிவர்.

எதிர்த்துப் போராடிப் பயன் இல்லை,

களத்திலே நிற்கிறோம் கடும் போரிட்டபடி; இந்த நேரத்தில் குழப்பம், கலக்கம் ஏற்படக் கூடாதே!

குழப்பமுமல்ல — கலக்கமுமல்ல! நிலைமையைக் கூறுகிறேன் தெளிவாக—அவ்வளவுதான்! முதலையுடன் தண்ணீரில் நின்றுகொண்டு போரிட முடியாது—அதுவும் வெறுங் கையால்.

தத்துவம் பேச, உவமை கூற இது அல்ல நேரம்! வாளைச் சுழற்றியபடி இருக்கவேண்டும்—உயிர் இருக்கும் வரையில்! புயலெனச் சுற்றியபடி இருக்கவேண்டும் களம் முழுவதும். அப்போதுதான், எதிரியின் மிகப் பெரிய படையைச் சமாளிக்க முடியும்...

எதிரிப் படையின் அளவு பற்றி நான் கவலைப்படவில்லை...

கடும் போரிடுகிறார்கள் என்பது பற்றிய கவலையா...

நாமென்ன, போர் நடாத்திப் பழக்கப்படாதவர்களா! நமது மறவர் படையினர் கோழைகளா!! என் கலக்கம், சாவுக்கு அஞ்சி அல்ல.

அச்சம் வேறு எதன் பொருட்டு?

போரிடுகிறோம்—வீரர் பலர் வீழ்கிறார்கள் பிணமாகி! ஆனால் நமது நோக்கம் ஈடேற இந்தப் போர்வழிகாட்டாது ......நமது படை சின்னாபின்னமாகி விடும்...

எதிரிப்படைமுன்னேறித் தாக்குகிறது — உண்மை! ஆனால் கணவாய் வாயிலில் நாம் நின்றபடி பகைவர்களை வெட்டிச் சாய்க்கலாமே...

அதுதான் முடியாதுஎன்கிறேன்...

முடியாதா! நம்மால் முடியாதா! பகைவர்களை வெட்டிச் சாய்க்கவா முடியாது?

எதைக் கொண்டு அவர்களை வெட்டிச் சாய்க்கலாம் என்கிறாய்?

இதென்ன கேள்வி நமது வீரவாள் கொண்டுதான் பகைவர்களை வெட்டிச் சாய்க்கவேண்டும்! கூர்மையான வாள்!!

வாளின் கூர்மையையும் நான் அறிவேன்—உன் போன்றாரின் வல்லமையும் எனக்குத் தெரிந்துதான் இருக்கிறேன். வெட்டி வீழ்த்துவாய், வாளால்...... ஆனால்...

ஆனால்...என்ன? ஆனால்...

ஆனால், வாள் உன் கரத்தில் இருக்கவேண்டுமே!

கரம் உடலோடு இருக்கும் வரையில், கரத்தில் வாள் இருக்கும்! தாளின் கீழ் பகைவன் தலை கிடக்கும், வெட்டுண்டு.

வீரம் பேசுகிறாய், விவரம் அறியாததால். வாள், உன் கரத்தில் இருக்காது...

ஏன்? என் வாளை அவன் பறித்துக் கொள்வான் என்கிறீரா?

இல்லை! அவன் பறித்துக் கொள்ளமாட்டான்—உன் வாள், அவனிடம் சென்றுவிடும்! ஈர்க்கப்பட்டுப் போய்விடும். வீரனே! நமது கரத்தில் உள்ள போர்க் கருவிகளை இழுத்துக்கொள்ளும் மாய சக்தி படைத்த ஆயுதம் எதிரியிடம் இருக்கிறது. பகைவனை வெட்ட, வாளை ஓங்குவாய்! வாள், உன் கரத்தில் நிலைக்காது! மாய ஆயுதத்தின் சக்தியால், அவனிடம் போய்ச் சேர்ந்துவிடும்; உன் வாள் ஈர்க்கப்பட்டு காந்தம் இரும்பை இழுத்துக் கொள்வதைக் கண்டதுண்டு அல்லவா—அதுபோல.

ஐயோ! இது மிகப் பயங்கரமானது...

அதனால்தான், நமது மறவர் படையினர், மடிய நேரிடுகிறது. இந்த நிலையில், போராடிக்கொண்டிருந்தால் நமது நோக்கம் ஈடேறாது — எழிலூர் எதிரிகளிடம் சிக்கிச் சீரழியும்...

கூடாது! கூடாது! எழிலூர் எதிரியிடம் சிக்கிவிடக்கூடாது.

எழிலூர் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், களத்திலே நின்று கடும்போரிட்டுக் கொண்டிருப்பதில் பலன் இல்லை...

போரிடாமல்? களத்திலே நிற்காமல்?

நீயும் வேறு சிலரும் உடனே களத்தை விட்டுவெளியேறி...

கைகொட்டிச் சிரிப்பார்கள் கண்டவர்கள்!

கேலி பேசுவார்கள்! கெக்கலி செய்வார்கள்! கோழைகளே என்பார்கள்...

ஆமாம்; சொல்ல மாட்டார்களா?

போரிலே சாகத் துணிவற்று ஓடுகிறவர்களைப் போற்றிப் புகழ்வார்களா!!

நோக்கம் அறியாதாரின் நாக்கு நீளத்தான் செய்யும்—கவலைப்படக் கூடாது! போரிடுவது நாம்! மடிபவர் நம்மவர்! நோக்கம், எழிலூர் காப்பாற்றப்பட வேண்டும் என்பது. இதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ளவர்கள், நாம்! நையாண்டி பேசுவோர் அல்ல.

கோழைகளாகி விடச் சொல்கிறீரா...

இல்லை! துணிந்து களம் விட்டு வெளி ஏறி, எழிலூர் சென்று...

வெந்ததைத் தின்று தெந்தினம் பாடிக் கிடக்கச் சொல்கிறீரா? அஞ்சா நெஞ்சினர்! ஆற்றல் மிக்கோர்! என்று புகழ் பெற்றோம். இப்போது, உங்கள் யோசனைப் படி நடந்தால், புறமுதுகு காட்டுவோர், சாகப் பயப் படும் கோழைகள், என்ற இழிமொழிதான் கிடைக்கும், ...எழிலூர் காப்பாற்றப்படும் — நோக்கம் ஈடேறும். போரிடுகிறோம்! எதற்காக? போருக்காகவே போர் அல்ல!! போர் நடாத்தி, எழிலூர் உள்ளவர்களைக் காப் பாற்றத் திட்டமிடுகிறோம். அந்தத் திட்டம் நிறைவேற வேண்டுமானால், களத்தை விட்டு நீங்கள் சிலர்—பலர் என்றுகூடக் கூறுவேன்—வெளியேறி, எழிலூர் சென்று அந்த மக்களை அழைத்துக்கொண்டு விரைந்து கோட்டையூர் சென்றுவிட வேண்டும்...

நமது தூயநோக்கத்தைப் பலராலும் புரிந்து கொள்ள முடியாதே...

விளக்கம் கூறிப் புரியவைக்கவும் முடியாது — கூடாது என்று கூடக் கூறுவேன்...

அந்த நிலையில் எங்களைக் காண்பவர்கள் கேட்க மாட்டார்களா? எங்கு செல்கிறீர்கள்? களத்தை விட்டு விட்டு ஓடுகிறீர்களே! என்று கேலி பேசமாட்டார்களா!

பேசுவார்கள் — பேச மட்டும் தெரிந்தவர்கள்! அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனரா. எழிலூர் மக்களைக் காப்பாற்றும் பொறுப்பினை! அவர்கள், எழிலூர் மக்களை ஏய்த்துப் பிழைத்திட எண்ணம் கொண்டவர்கள். அதனால்தானே, எழிலூர் உள்ளோர் அப்படிப்பட்டவர்களை விரும்பவில்லை; விரண்டோடியபோது. விழா நடத்திற்று எழிலூர்.

விளக்கம் தருகிறீர்—ஆனால் வீரம் பழிக்கப்படுமே என்று அஞ்சுகிறோம், நாங்கள்.

இங்கு நின்று நாம் அனைவரும் கடும் போரிட்டபடி இருப்பது விழலுக்கு இறைத்த நீராகிப் போகும் என்று அஞ்சுகிறேன். வாய் வீச்சுக்காரர் பற்றிய கவலையை விடு! அவர்கள் எதையும் பேசுபவர்கள், அறிவாயே!! குளித்திட ஆற்றினில் இறங்குவாய்—மீன் பிடிக்கிறாய் என்பார்கள்!! கனி பறித்திட மரம் ஏறுவாய்—வானுலகு செல்ல வழி காட்டுகிறாயோ என்று கேலி பேசுவர்! பேசட்டுமே! உன் நோக்கத்தில் ஒரு தூய்மை; உன் நடவடிக்கையில் ஒரு நேர்மை இருந்தால்போதும். காலம், உண்மையைக் காட்டும். கடுகிச் செல் — படையின் ஒரு பிரிவை உடன் அழைத்துக்கொண்டு–நேரே, எழிலூர்! அங்கிருந்து கோட்டையூர்.

தாங்கள்......?

நான், மற்றும் சிலருடன், கணவாய்ப் போரிலே ஈடுபட்டபடி இருப்பேன்......

நன்று! நன்று! என்ன எண்ணிக்கொண்டு பேசுகிறீர் இதுபோல தாங்கள், கணவாய்ப் போரிலே ஈடுபடுவது — நாங்கள் களம்விட்டு வெளி ஏறி, உயிரைக் காப்பாற்றிக்கொள்வதா......

அவசரக்காரா! உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவா யோசனை கூறுகிறேன். எழிலூர் உள்ளோரின், உயிர், உரிமை, உடைமை, எல்லாம் காப்பாற்றப்பட வேண்டும்! அதற்காகத்தான் உன்னை அனுப்புகிறேன். அந்தக் கடமையைச்செய்திட, கடும்போரிட களத்திலே நிற்பது மட்டுமல்ல உன் கடமை, வீரனே! காப்பாற்றுவாரற்ற நிலையில் உள்ள எழிலூர் மக்களுக்குப் பாதுகாப்புத் தேடுவதும், கடமை — நீங்காக்கடமை! புரிகிறதா!

எனக்குப் புரிகிறது... ஆனால் மற்றவர்கள்......

புரிந்துகொள்ளவேண்டும், புரிந்துகொள்வார்கள்! புறப்படு! போர் நடந்தபடி இருக்கும், இங்கு. வழிநடந்தபடி இருக்கட்டும், நமது படையின் ஒருபிரிவு.

ஆற்றலுள்ளவர்கள் அஞ்சாது போரிடுகிறார்கள் களத்தில், அச்சம்கொண்டவர்கள் ஓடிவிடுகிறார்கள் களத்தைவிட்டு—என்று பழி சுமத்தப்போகிறார்கள்...

நமக்குள் மாறுபாடு ஏற்பட்டு இந்த நிலைமை ஏற்படுகிறது என்றால், பழி கூறுவோர் பேச்சை உலகம் ஏற்கும்! என் சொற்படி, நீ செல்கிறாய் வேறுபக்கம்! உன்னைவேறுபக்கம் அனுப்பி, கடமையை நிறைவேற்றச் செய்வதால், களிப்புடன் களத்தில், நான் — மற்றும் சிலர், காலம் நிச்சயம் உணர்த்தும், இது நாம் செய்து கொண்ட ஏற்பாடு என்பதனை எழிலூர் மக்கள் கோட்டையூர் சென்றுவிட்டனர், என்று தெரிந்தால், நமது நோக்கம் நியாயமானது என்பதனை உலகம் உணரும்; பாராட்டுவர்!

செல்கிறோம்—ஆனால் கவலையுடன்......

நம்பிக்கையுடன் செல்லப்பா! நாப்பறையாளர் பற்றிய கவலையற்றுப் புறப்படு.

எழிலூர் மக்கள், பாய்ந்து வரும் படையிடம் சிக்காமல். நெடுந்தொலைவில் உள்ள, பாதுகாப்பு மிக்க கோட்டையூர் சென்றால், அங்கு இருந்து கொண்டு, தாக்கவரும் பகைப் படையை எதிர்த்து நிற்கலாம்.

கோட்டையூர். உள்ள இடத்துக்கும், எழிலூருக்கும் இடையில் காடும் குன்றும், கடு வழியும் உள்ளது. அதனைக் கடக்கும்போது, கனல் நிறக் கண்ணுடைய காட்டு மிருகங்களும், காட்டுக் குணமுள்ள கொடியோர்களும், ஆபத்து விளைவிக்கக் கூடும்.

வழி அறிந்தும் செல்லவேண்டும், வழியிலே கிளம்பும் ஆபத்துகளையும் எதிர்த்தொழித்தாக வேண்டும். இதற்கு ஏற்ற ஆற்றல் காட்டினால் மட்டுமே, கோட்டையூர் போய்ச் சேரமுடியும்; இல்லையெனில், பகைவரிடம் சிக்குவதற்குப் பதிலாக, காட்டு மிருகங்களிடம் சிக்கிச் சாகவேண்டி நேரிடும்.

எழிலூரை நோக்கிப்பாயும் பகைப் படையிடமிருந்து தப்பி, கோட்டையூர் சென்றுவிட்டால், கொடிதாழ்ந்திடாமல் பார்த்துக்கொள்ள வழிகிடைக்கும்.

பகைப்படை, எழிலூரை நோக்கி, எப்பக்கம் இருந்தும் பாயலாம், கணவாயைக் கடந்துவிட்டால், எளிதாக நுழைந்திட முடியாது.

இந்த எண்ணம் கொண்டு, இதற்கேற்ற ஏற்பாடு மேற்கொண்டு, கோட்டையூர் சென்றிட, எழிலூரில் உள்ளவர்கள் தாமாகவே முயற்சி செய்து. முடித்திட இயலாத நிலையினர்.

மறவர் படையிலே, ஒரு பிரிவினர், பாய்ந்து வரும் பகைப் படையை எதிர்த்து நிற்பதென்றும் பிறிதோர் பிரிவு களம்விட்டு நீங்கி, எழிலூர் சென்று, மக்களை அழைத்துக்கொண்டு, கோட்டையூர் செல்வது என்றும் முடிவு செய்தனர்.

பகைப் படை கணவாயில் நுழையாதபடி பாதுகாத்திட ஒரு பிரிவு. மறவர் படையின் மற்றோர் பிரிவு எழிலூர் மக்களை கோட்டையூர் அழைத்துச் செல்லும் வரையில், போராடியபடி இருக்கும்; அதிலே அந்தப் பிரிவினர் அனைவருமே மடிந்துபட நேரிடலாம். பலர்.

சித்திரவதைக்கு ஆளாகலாம். ஆனல் உயிர் கொடுத்தது வீணுகவில்லை, எந்த எழிலூர் மக்களைக் காப்பாற்ற வீரப் போரிடுகிருேமோ, அந்த மக்கள், பகைப் படையிடம் சிக்கமாட்டார்கள், கோட்டையூர் சென்று பாதுகாப்புப் பெற்று, தொடர்ந்து போர் நடத்துவர் என்ற எண்ணம். செந்தேனுக இனிக்கும், செயலிலே மும் மடங்கு வீரம் கொபபளிக்கும்.

இதற்காக. மறவர் படையின் ஒரு பிரிவு. களம் விட்டுக் கிளம்பி எழிலூர் நோக்கிச் செல்லும்போது நோக்கம் அறியாதான் ஒருவன் கண்டால் என்ன சொல்லுவான்? உரையாடல் எங்ஙனம் இருக்கும்?

"கோழைகளே! கோழைகளே! குடல் தெறிக்க ஓடுகிறீர்களே! தலைகள் உருளட்டும், உடலம் பியத்தெறியப்படட்டும்; இரத்தம் ஆருகப் பெருகட்டும் என்றெல்லாம் பேசின, வீராதி வீரர்கள், நீங்கள்தானு! அட அப்பாவிகளே! போருக்கு அஞ்சிப் புறமுதுகு காட்டி ஓடுகிறீர்களே! சாகப்பயப்படுகிறீர்களே, வெட்கமாக இல்லையா உங்களுக்கு, தலை குனிந்து செல்கிறீர்களே,"

"மிகப் பெரியபடை! பயங்கரமான ஆயுதங்கள், எதிர்த்துப் பயன் இல்லை."

"வெட்டுவார்கள், சாகத்தான் வேண்டும் செத்துத் தொலையுங்கள்! பிழைத்துக்கொள்ள முயற்சியா? மானம் இல்லையா உங்களுக்கு"

"மானம் காத்திடத்தான் போரிட்டு நின்ரேம். எம்மிடம் இல்லாத ஆயுதங்கள் வைத்துக் கொண்டு, தாக்குகிருர்கள், வீரத்துக்கு எம்மிடம் பஞ்சமில்லை. ஆற்றலிலும் குறைவு இல்லை. ஆனல், எங்கள் ஆயுதங்களையே தம்மிடம் இழுத்துக் கொள்ளத் தக்க 'மாய ஆயுதம்' வைத்திருக்கிருர்கள் பகைவர்கள்."

"பகைவர்கள் என்ருல், ஆயுதம் இருக்கத்தான் செய்யும் மலர் கொண்டா அர்ச்சிப்பார்கள், மடையனே!"

"எம்மிடம் உள்ளது போன்ற ஆயுதம் கொண்டுமட்டும் அவர்கள் போரிட்டால், நாங்கள் அஞ்சமாட்டோம், நிலைமை அப்படி இல்லையே..."

"நிலைமை! நிலைமை! வீரன் நிலைமை பற்றிப் பேசலாமா?"

"நிலைமையைக் கவனிக்காவிட்டால், சாகத்தான் வேண்டி வரும்—வீணுக்கு"

இப்படிப் பேசியவன், போர் வீரன் உடையினன்; உடைவாளும் இருந்தது.

தீப்பொறி பறக்கும் விதமாகப் பேசி, கேலி செய்த அந்த வீரன், கெம்பீரமாக சுற்று முற்றும் பார்த்தான்.

எழிலூர் செல்லும் நோக்கடன் களம்விட்டு வெளியேறிய வீரர்களில் சிலருக்கே வேதனையாக இருந்தது. கோழைகளாகிவிட்டோமா நாம் சாகப் பயப்படுகிருேமா என்று தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ளும் நிலையினராயினர். கேலி பேசுவோனுடைய கண்ணெளியும் கனத்த குரலும் இவன் வீரன்! மாவீரன் இவன் இப்படி களத்தைவிட்டு ஓடமாட்டான்!! என்று எண்ணிட வைத்தது.

ஆர்வமிக்க ஒரு போர்வீரன் எழுச்சி மிக்கவனுகி' வீர உரையாற்றியவனைப் பார்த்து,

'மாவீரரே! உமது வீரஉரை, கோழையையும் வீரனுக்கும். உணருகிறேன், தாங்கள் பேசும் கேலி மொழி, வேலாகிக் குத்துகிறது என் இதயத்தை. செத்துக் கீழே விழலாமே தவிர, களத்தைவிட்டு ஓடிவரக்கூடாது. ஆமாம், வீரத் திலகமே! உமது உரையால், உண்மையை உணர்ந்தேன். நான் மட்டுமல்ல என்போல் பலர். எம்மைக் களம்விட்டு நீங்கி எழிலூர் பக்கம் அழைத்துச் செல்கிருர்கள். சாகப்பயந்த சிலர். ஏதேதோ காரணம் கூறுகிருர்கள். இனி, வீரத்தின்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன், போர்! மரணம்! ஆமாம்!!"

என்று பேசுகிருன், அவன் பக்கம் பலர் சேருகிருர்கள்! உரையாடல் நடக்கிறது.

"போ! களம் நோக்கிப் போ! சாகப் பயமா?"

"இல்லை! சாகப் பயப்படவில்லை. வீரத் தலைவனே, களம் போர்!!"

'அது, வீரத்துக்கு அடையாளம்"

"தாங்கள் தந்த பிச்சை!"

"மகிழ்ச்சி! போ! போரிடு!"

"என் கோழைத்தனத்தைப் போக்க வீரஉரையாற்றிய செம்மலே! போவோம், புறப்படுவீர்..."

'நானு? என்னையா அழைக்கிருய்?"

"ஆமாம் வீரத்திலகமே! கோழைத்தனத்தைக் கண்டித்து என் இதயத்தில் வீரம் கொப்பளிக்கச் செய்த மாவீரரே! தாங்கள்தான் தலைமை தாங்கி எம்மைக் களம் அழைத்துச் செல்லவேண்டும்."

"களத்துக்கா! நானு! போரிடவா?"

'தலைமை தாங்கிப் போர் நடத்த! எம்மை நடத்திச் செல்ல..."

"அது என்னல் முடியாது..."

'வேடிக்கை பேசுகிறீர்! இவ்வளவுவீரம் கொழுந்துவிட்டு எரியும் உள்ளம் கொண்ட, தங்களால் முடியாததும் உண்டா? பகைவர் அலை அலையாக வந்தால் என்ன, தங்கள் கோபப் பார்வை போதாதா அவர்களைச் சுட்டெரிக்க! புதுப் புது ஆயுதங்கள். மாயா விநோத ஆயுதங்களோடு பகைவர்கள் வந்தால் என்ன, உடைவாளை உருவித் தாங்கள் பாய்ந்தால், பிய்த்தெறிய மாட்டீர்களா, பகைக் கூட்டத்தை..."

'எனக்கு இம்மாதிரிப் பேச்செல்லாம் பிடிக்காது' இரத்தம். குடல். தலை வெட்டு; குத்து—தூ! தூ! இதெல்லாம், அருவருக்கத்தக்க வார்த்தைகள்..."

'வீரமிக்கவரே! வேடிக்கை பேசியது போதும். தலைமை ஏற்று நடத்திச் செல்ல வாரீர்,"

'முடியாது! நான் களம் புகமாட்டேன்..."

"என்ன! என்ன! களம்..."

"புகமாட்டேன் என்கிறேன்."

'புகமாட்டீர்களா! ஆனல் எங்களைப் புகச் சொல்கிறீர், சாகச் சொல்கிறீர். வீரம் பேசத் தெரிகிறது, போரிடத் துணிவு இல்லை..."

'நான் சொல்லவில்லையே எனக்கு இருப்பதாக..."

"ஆனால், எங்களுக்கு ஏன் இல்லை என்று கேட்க மட்டும் நாக்கு நீளுகிறது..."

"ஆமாம்! நீங்கள் வீரம் பேசி வந்தீர்களே' அதனால்..."

எரிச்சலும் ஏமாற்றமும் கொண்ட போர்வீரன், வாய்வீச்சுக்காரனைப் பார்க்கவும் கூசினான்.

மற்றொரு வீரன், இந்த உரையாடலை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தவன், கடகடவெனச் சிரித்தான். எரிச்சலும் ஏமாற்றமும் கொண்ட வீரன்,

"பெரிய சூரப்புலி போலப் பேசினானே, உள்ளபடி, களம் செல்லத் துடிக்கிறான் என்று பார்த்தேன். கடைசியில். ஊரார் வீட்டுப் பிள்ளையைவிட்டு ஆழம் பார்க்கும் ஆசாமி என்று புரிகிறது போ! போ! போரிடு! செத்துப் போ! என்று உறுமினான், வாடா, தம்பி என்று அழைத்தால் நம்மால் முடியாது என்கிறான்," என்று கூறினான். உரையாடல் தொடர்ந்தது.

"வீரப்பேச்சுப் பேசினோமாம், நாம்; வெட்டட்டும் குத்தட்டுப் சாகத் தயார்! என்று சொன்னீர்களே, செத்துவிடுங்கள் என்கிறார். இந்த வீரர்! வேறென்ன......"

"சாகத் துணியச்சொல்லி நமக்குச் சொல்லும் இந்த வீரர், தமது உயிரை வெல்லமாக அல்லவா கருதுகிறார்!"

"அட, பைத்தியக்காரா! அது சாதாரண உயிரல்ல! பல உயிரைக் குடிக்கவல்ல வீரனுடைய உயிர்! வீரமாகப் பேசினோம், எதற்கும் தயார் என்று பேசினோம் அப்படிப் பேசிய நாம், பகைக்கூட்டம் எவ்வளவு பெரிதாக இருக்கிறது, ஆயுதம் எப்படிப்பட்டது என்பதுபற்றி எண்ணிப்பார்க்காமல் எதிர்த்துப் போரிட்டு மடிய வேண்டும் — இது இவருடைய தத்துவம்! கேட்டாயே அவர் பேசியதை. ஆசாமியைக் கவனி, அடையாளம் தெரிகிறதா......';

"யார்? தெரியவில்லையே......"

"தெரியவில்லையா? நன்றாகப்பார்! உன்னிப்பாகப் பார்! நமது கொடிஏந்தி சிங்கநாதன்! தெரியவில்லைபா......"

"அட்டா! ஆமாம் ஆமாம்! சிங்கநாதன் தான்! இப்போதுதான் அடையாளம் புரிகிறது. அப்பா! சிங்கநாதா! நீதானா, கேலி பேசிய வீராதிவீரன்! இதோ, இப்படிக்காட்டு உன் முகத்தை! நாங்கள் வீரம் கொப்பளிக்கப் பேசினோம், இப்போது விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறோம், என்று கேலி பேசினாயே, நீ பேசாத வீரமா! அடே அப்பா! இடியைப்பிடித்து வாயிலே போட்டுக்கொண்டல்லவா கீழே துப்புவாய், முன்பு; கொடி காத்தான் வேலை பார்த்தபோது. அந்தக் காட்டுமிராண்டிப் பயல்களை ...... என்று நீ பேசும்போது, எதிரி அகப்பட்டால், கடித்து மென்றுக் கீழே துப்பிவிடுவாய் அப்படிப்பட்ட வீராதிவீரன்போலல்லவா பேசுவாய்! படை குவியட்டும், பாசறை சீராகட்டும் என்று தலைவர்கள் பேசும்போதெல்லாம், உடைவாளை உருவிக்கொண்டு பேசுவாயே, போக்கிரித்தனமாக எதிரி ஊர்வலம் வருகிறான், இந்த நேரத்திலே, தலைவர்கள் போகபோக்யத்தில் புரள்கிறார்களே! தொண்டர்களின் இரத்தத்தில் குளிக்கிறார்களே! சே! சே! ஆ! ஆ! என்னால் தாங்கிக்கொள்ள முடியவே இல்லையே. எத்தனை நாள் பொறுத்துக்கொள்வேன். எதனையும் பொறுத்துக்கொள்வேன், கோழைத்தனத்தை மட்டும் என்னால் பொறுத்துக்கொள்ள முடியவே முடியாது. அது அண்ணனானாலும் சரி அப்பனானாலும் சரி, ஆருயிர் நண்பனானாலும் சரி, போரிடத் தயங்கினால், போ! வெளியே! என்று கூறத் தயங்கமாட்டேன். நான் எதற்கும் தயார்! எப்போதும் தயார்!—என்றெல்லாம், வீரம் பேசி வந்தாயே......ஆனால், என்ன நடந்தது? களத்தைவிட்டு, போர் ஆரம்பமாவதற்கு முன்பே ஓடிவிட்டாயே, அப்பா! அப்பா! சிங்கநாதா! நீ இப்போது எங்களைக் கேட்கிறாயா, வீரம் எங்கே போயிற்று என்று? முகத்தைப் பார்த்துப் பேசு, உன் வீரம் எங்கே போயிற்று..."

"எனக்குச் சண்டை பிடிக்கவில்லை— உங்கள் சகவாசம் பிடிக்கவில்லை......"

"எங்கள் சகவாசம் கிடக்கட்டும்; இது என்ன, சல்லாப மண்டபமா உனக்கு பிடிக்க. அது கிடக்கட்டும். சண்டை பிடிக்காது என்றாயே, எப்போது? கொடிகாத்தான் வேலையில் இருக்குமட்டும், வம்புச் சண்டையாவது போடவேண்டும், வாய்க்கு வந்தபடி எதிரியை ஏசவேண்டும் என்ற போக்குடன் இருந்த ஆசாமி நீயல்லவா? போரிடத் திட்டம் போடவில்லை என்று பலத்த புகார் செய்தது யார்? நீயல்லவா?

நாங்கள் மெத்தனமாகி விட்டோம் என்று தூற்றினாய், மேதாவி ஆகிவிட்டாயோ நீ! தீவிர வாதம் காட்டி நின்றாயோ! போரிடவில்லை என்று குறை சொன்னாய் எங்களை; உருவிய வாளை உறையிலிடவும் நேரமின்றிப் போரோ, உனக்கு. தனியாகக் கிளம்பியதும்......

"தம்பி! சிங்கநாதன் என்றால் சிங்கம் போலச் சீறிப் போரிடுபவர் என்று தப்பாகப் பொருள் கொண்டுவிட்டு, இவரிடம் இதெல்லாம் பேசுகிறாய், சிங்க நாதம் என்றால் சிங்கம் போலக் கூச்சலிடுவது என்றுதான், பொருள். நம்மோடு இருந்தபோதும் அதே சிங்கநாதம்; நம்மை எதிர்க்கும்போதும் அதே சிங்கநாதம். நாதத்தைக் கவனி! நடவடிக்கையைக் கவனிக்காதே!"

"நான் உங்களைக் குறைசொல்லவில்லை, கேலி பேசவில்லை. வீரமெல்லாம் பேசி, உங்களை நம்பவைத்தார்களே, உங்கள் தலைவர்கள், அவர்களைக் கேட்கிறேன், உங்களை அல்ல! என்ன ஆயிற்று அவர்கள் வீரம்!! இதோ புறமுதுகு காட்டி ஓடுகிறார்களே— அதைச் சொன்னேன்......"

"அப்படியா, என் தங்கக்கம்பி! தலைவர்கள் தலைமறைவாகிவிட்டார்கள், தொண்டர்கள் தவிக்கிறார்கள் என்ற மனச்சங்கடமா!

முதலைக்கண்ணீர் போதும். எங்கள் தலைவர்கள், ரம் பேசி மற்றவர்களைக் கிளப்பிவிட்டு விட்டு, ஆழம்பார்க்கும் பேர்வழிகள் அல்ல, போரிட அவர்கள் பயந்துகொண்டு, எங்களை களத்திலே பலியாகச்சொல்லும் கன்னெஞ்சக்காரர் அல்ல. அவர்கள் ஈரமுள்ள நெஞ்சினர்; வீரத்தின் விளைவுகளை அறிந்தவர்கள்; காலமறிந்து கடமையாற்றுபவர்கள்......"

"இதுதான் கடமையா? பகைவனைப் பார்த்ததும், ஓடுவது......"

'ஓடவில்லை, பயந்து! பகைவர்கள் சூழ்ந்துகொண்டு படுநாசம் செய்துவிடுவார்களே, எழிலூர் மக்களை; பெரிய அளவிலே உள்ளனரே. பயங்கரக் கருவிகள் உள்ளனவே என்பதால், ஒரே அடியாக மடிந்துபட நேரிடுமே என்பதற்காக ஒரு போர்முறை வகுத்துள்ளனர்..."

"தம்பி! சிங்கநாதம், மற்றவர்களைப் போரிட்டு மடியச் சொல்லும் பேச்சைப் பேசுவார், போர்முறைகள், களத்தின் தன்மை, காலத்தின் கூறு இவைகளைக் கணக்கெடுக்கத் தெரியாதவர்கள்..."

"எனக்குத் தேவையில்லாத விஷயம்—களம்—கடும்போர்—முறை—காலம்—இவை"

"சிங்கநாதம்! உண்மை நீ சொல்வது! தானாக ஒரு காரியமும் செய்வதில்லை. பிறர் செய்வதைப் பழிப்பதையே ஒரு காரியமாகக் கொள்வது என்று ஆகிவிட்ட பிறகு, களம், முறை, இவை பற்றிக் கவலை இல்லைதான். எங்கள் நிலை அது அல்ல! எங்களை நம்பி எங்களுடன் இணைந்துள்ள இலட்சக் கணக்கான மக்கள், பேராபத்தில் சிக்கிவிடாமல், பாதுகாத்துத் தீர வேண்டிய பெரும் பொறுப்பு இருக்கிறது. ஓடம் கவிழ்த்த பிரம்மச்சாரிபோல, நீ நடந்து கொள்ளலாம். நாங்கள், ஓடி ஆடி பாடுபட்டு, அமைத்துள்ள எழிலூரையும் அதிலேவாழும் இலட்சக் கணக்கானவர்களையும் பகைவர்கள் அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். இவர்களை நம்பினோம்—சுட்டு விரல் காட்டினர்—பக்கம் பாய்ந்தோம்—படுநாசம் அடைந்தோம்—என்று அவர்கள் மனம் நொந்து பேசும் நிலை வரவிடமாட்டோம். ஆழம் எப்படி இருக்கும் என்பதைக் கண்டறிய, நாங்கள், திட்டமிடுவோம்; எங்களை முதலிலே அதற்கு உட்படுத்திக்கொள்வோம். பயங்கரமான நாசம், எம்மிடம் பாசம் காட்டுவோருக்கு ஏற்பட வழி தேடமாட்டோம்.....

"அதாவது, சண்டை இல்லை! சரணாகதி!......"

"அந்த இரண்டுதான் உனக்குத் தெரியும்—சண்டை அல்லது சரணாகதி — அர்ச்சனை அல்லது சாபம் — மோகனம் அல்லது முகாரி! போர்முறைகள் பலப்பல, அது தம்முடன் உள்ள கூட்டுத் தோழர்களின், நலன்களில் அக்கறைகொண்டு, அவர்களை வீணாக நாசத்துக்குத் துரத்தக்கூடாது என்ற பொறுப்பு உணர்ச்சியும் கொண்டால் மட்டுமே, உணர முடியும்.

'சுற்றிவளைத்துப் பேசவேண்டாம் பகைவன் அழைக்கிறான்; பதுங்கலாமா? களம் அங்கே இருக்கிறது, கால் இந்தப்பக்கம் திரும்பலாமா?"

"அப்படிக் கேட்கிற நீ, எந்தப்பக்கம் நடக்கிறாய்?"

"அது வேறு விஷயம், என் சொந்த விஷயம்."

"உன் சொந்த விஷயத்தைக்கூடத்தான் கொஞ்சம் விளக்கிவிடேன். நாங்கள் மரம் ஏறிக் கனிபறிக்கலாம் என்றோம். நீ, கொடிகாத்தான் வேலை பார்த்தவரையில், மரம் எப்போது ஏறுவது! கனி எப்போது பறிப்பது! மரத்தையே வெட்டிக் கீழே சாய்க்கவேண்டும்; அப்போது கனிகள் கீழே உருளும்; கையால்கூடப் பொறுக்கி எடுக்கத் தேவையில்லை. கடித்தே தின்னலாம் என்ற அதிதீவிர யோசனை கூறினாய். பிறகு விலகினாய். விலகி, நான் மரம் ஏறிக் கனி பறிக்கப்போவதில்லை, கிளையைப் பிடித்துக்கொண்டே தொங்குவேன், ஊஞ்சலாடுவேன்—அந்த ஆட்டத்திலே கனி உதிரும் என்றாய். இப்போது என்ன ஆயிற்று; கிளையைப் பிடித்துக்கொண்டு ஊஞ்சல் ஆடுகிற திட்டம்? விட்டு விட்டாயல்லவா? ஆனால் எங்களைத்தூண்டுகிறாய், போ! செத்துப்போ! என்று. சரி! போரிட்டு மடிகிறோம், எழிலூர்

என்ன ஆவது? அந்த மக்கள் என்ன ஆவது? உன்பசிதீர்க்க, எழிலூரா? உன்பஞ்சம்போக்க, அந்த மக்களா? இப்படிப் பல்விளக்குபவர் உண்டு என்று தெரிந்துதான், பகைவர்களிடம் சிக்கி நாசமுமாகாமல், உன் போன்றோரிடம் பலியுமாகாமல், எழிலூர் மக்களைக் கோட்டையூர் கொண்டு சேர்த்து, அங்கிருந்துகொண்டு, போர் நடத்தும் முறையை மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறோம். நாங்கள் எழிலூர் மக்களைக் காப்பாற்றி கோட்டையூர் அழைத்துச் செல்லும் வேலையில் ஈடுபடுகிறோம். கோழைத்தனம் அல்ல; காலம் காட்டும் திட்டம்; பொறுப்புணர்ச்சி,''

"எழிலூர் பாதுகாக்கப்பட்டுவிடும் என்றோ......''

"ஆமாம் ஆமாம்! ஏமாளிகளல்ல, இவ்வளவு பாடுபட்டு அமைத்த எழிலூரை இழந்திட. எழிலூர் மக்கள் கோட்டையூர் சென்று கொடியினைப் பறக்கவிடுவர்......''

"கொடி இருக்குமா......''

"கொடியும் பறக்கும்! கொற்றமும் நிலைக்கும்...''

"அதற்காகக் கோழைகளாகி விடத் திட்டமா?''

"அவசர முடிவு! ஆத்திரத்தின் விளைவு! கொடி காத்திட, கொற்றம் காத்திட, எழிலூர் மக்கள் கோட்டையூர் செல்வர். வழியிலே ஆபத்து ஏற்பட்டால், அழித்திட நாங்கள் செல்கிறோம்,''

"உங்கள் தலைவர்கள் தலையில் முக்காடிட்டு...''

"எங்கள் தலைவர்கள், எங்களையும் எழிலூர் மக்களையும், இம்சைக்கு ஆளாக வேண்டாமென்று கூறிவிட்டு, கொடி காத்து வரும்படிச் சொல்லிவிட்டு, பகைவனால் ஏற்படக்கூடிய ஆபத்தைத் தாங்கிக்கொள்ள, தங்களைத் தயாராக்கிக்கொண்டு, கணவாய்க் காவலில் ஈடுபட்டு, போர்முறைகள் வகுத்துக் கொண்டு, எதிரியிடம் உள்ள மாய ஆயுதத்தை எப்படி வலிவற்றதாக்குவது என்பது பற்றி ஆராய்ந்து கொண்டுள்ளனர். என்ன, பேச்சு, மூச்சே காணோம்!!

படைப் பிரிவு, சிங்கநாதனை, திகைத்த நிலையில் விட்டு விட்டு, எழிலூர் நடந்தது.

பகைப்படை பெரிது; மறவர் படை மடிந்து போயிருக்கும் என்றெண்ணி மனம் கலங்கிப் போயிருந்த எழிலூர் மக்கள், படைப் பிரிவு வருவது கண்டு, மகிழ்ந்தனர்.

எழிலூர் மக்கள் கோட்டையூர் சென்றனர்; கொடி பறந்தது; கொற்றம் அங்கு அமைந்தது.

கணவாய்க் காவல் படையினர்; பகைவரின் பயங்கரத் தாக்குதலுக்கு உள்ளாயினர்; பலத்த சேதம்! ஆனால், எழிலூர் மக்கள் கோட்டையூர் போய்ச் சேர்ந்து, நிம்மதி பெறுகிற வரையில் போர் நடாத்தி வந்தனர்.

எழிலூர் மக்கள் கோட்டையூர் போய்ச் சேர்ந்து விட்டனர், இனி கொலை, கொள்ளைக்கு இடமில்லை, என்பதை அறிந்த பகைப்படை திகைத்தது; மறவர் படையுடன் இனியும் போரிட்டுப் பயன் இல்லை என்று உணர்ந்து, வந்த வழியே திரும்பிவிட்டது.

பகைவரின் பயங்கரத் தாக்குதலுக்கு இறையானவர் போக மீதமுள்ளவர்கள், கோட்டையூர் பக்கம் திரும்பிப் பார்த்து, புன்னகை புரிந்தனர்.

மாடூர் படை புதிய மாய ஆயுதம் செய்துகொண்டு போரிடக் கிளம்பியபோது, திடமான நம்பிக்கை கொண்டிருந்தது. போர் ஆர்வமிக்க மறவர் படை, அளவு பற்றியோ, ஆயுதத்தின் மாயத் தன்மை பற்றியோ எண்ணிப் பார்க்காமல் போரிடும்; அழித்துவிடலாம்; பிறகு எழிலூர் நமது வசம் ஆகும்; பணிந்து போவர் மக்கள் என்று.

எழிலூர் மக்கள் பணிந்து போய்விட்டால், தமக்காகப் போரிட்டு மடிந்த மறவர் படைபற்றிப் பேசவும் கூசுவர்.

எழிலூர் மக்கள் பணிய மறுத்தால் அழித்திடலாம்! அழித்திட்டால், வீரப் போரிட்டு மடிந்துபோன மறவர் படைபற்றி, தியாக உணர்ச்சி பற்றி உலகுக்குக் கூறவே ஆள் இருக்கமுடியாது. மறவர் படையின் தியாக உணர்ச்சி பலருக்கும் தெரிந்தாலாவது வேறு பலர் கிளம்புவர், மாடூர் செய்யும் அக்ரமத்தை எதிர்த்துப் போரிட! எழிலூர் அழிந்தால், மறவர் படை பற்றிய நினைவும் அழிந்துபடும் காருள்ளளவும் கடல் நீர் உள்ளளவும் ஆதிக்கம் செலுத்தலாம் என்று மாடூர் எண்ணிக்கொண்டது.

ஆனால் மறவர் படையினர் வகுத்துக்கொண்ட போர் முறை காரணமாக, எழிலூர் மக்கள் நாசமாகாது தடுத்திட வழி கிடைத்தது. எழிலூர் மக்கள் கோட்டையூர் சென்றிடவும் முடிந்தது. அங்கு சென்றதால், மறவர் படையின் வீரத்தையும் தியாகத்தையும் பலருக்கும் எடுத்துக்காட்டும் வாய்ப்பும் கிடைத்தது; அந்த வாய்ப்புக் காரணமாக, மாடூர் செய்யும் அக்கிரமங்களைக் கண்டிக்கும் துணிவும் பலருக்கு ஏற்பட்டது; மாடூர் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டும் நோக்கம் கொண்ட பெரும் படையும் திரட்ட முடிந்தது.

கணவாயில் கொட்டப்பட்ட இரத்தம் வீணாகிப் போய்விடவில்லை.

வீரம் விழலுக்கு இறைத்த நீராகிப் போய்விடவில்லை.

மறவர் படை அழிக்கப்பட்டுப் போய்விட்டால் மஞ்சள் குளிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கும் எண்ணத்தில் மண் விழுந்தது!

கொடி பறந்தது! கொற்றம் நிலைத்தது!!



With the best compliments from

Sales Service Company

Distributers and Indenting Agents:

NBC, HOFFMANN, BOWER,

NRB, NADELLA

Ball, Roller, Taper Roller Bearings, Needles

and Assemblies

&

Steel Balls

Largest Stockists of Imported Bearings.

Phone: 23008

22476

21010

After Office Hours: 443760

Grams: LUBRICATOR.

39, Thambu Chetty Street,

MADRAS-1.

With the best compliments of:

S. M. MOHANDAS,

ENGINEERING CONSULTANTS &
BUILDERS,

115, Linghi Chetty Street,

Madras-1.

Grams: "JANNOCK" Phone: 25201 (3 Lines)

Consult us for Erection of Factories, Buildings etc.

With the best eompliments from

Grams: "JANNOCK" Phone: 25201 (3 Lines)

Sree Sivasankara Roller Flour Mills,

Administrative Office:

115, Linghi Chetty Street,

MADRAS-1.

Mills:

Thyagappa Chetty Street,

(Near Korukkupet Railway Station)

MADRAS-21.

Phone: 53615

பொங்கல் வாழ்த்துக்கள்!

*

Phone No. 63725

சிவாஜி பிரிக் ஒர்க்ஸ்

*

145, பூந்தமல்லி நெடுஞ்சாலை,
சென்னை-30.

சம்மந்தன் ஏஜென்ஸீஸ்,

பேப்பர், ஸ்டேஷனரி, காலிகோ வியாபாரம்,

3, மலையபெருமாள் தெரு, :: மதராஸ்-1.

நம்பிக்கைக்கு உகந்த இடம்!

தொலைபேசி எண்: 61105

காமதேனு ஸ்டோர்ஸ்,

101, தாணு தெரு, புரசைவாக்கம், சென்னை-7.

உரிமையாளர்: தே. து. இராமானுசன்.

தூய்மையான வெண்ணை, நெய், எண்ணை, உயர்ந்த பலவகை மளிகை & ஷாப் சாமான்கள் இவ்விடம் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

மக்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி.

With the best compliments of:

Telegram: "JANNOCK" Telephone: 25201 (3 Lines)

S. G. Sambandan,

SHIPCHANDLER, SHIPPING CLEARING &
FORWARDING AGENT & TRANSPORT OPERATOR

115, Linghi Chetty Street,
MADRAS-1.

QUICK AND EFFICIENT SERVICE.

With the best compliments from:

P. GOVINDASWAMY

Director:

Century Flour Mills Limited.

★

Managing Director:

Vorion Industries & Chemicals Ltd.,

Director:

Insulex India Ltd.,

MADRAS.

ஒவ்வொரு ஆண்டும் ரூ. 6,250 கோடி மதிப்புள்ள 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் விற்கவும் வாங்கவும் படுகின்றன

நம் நாட்டில் தகரம், பிளாஸ்டிக், அட்டைப்பெட்டிகள் அதிகரிக்காவிட்டால் அன்றாட உபயோகப் பொருட்கள் கிடைப்பதே அரிதாகிவிடும்.

வனஸ்பதி அல்லது பற்பசை வாங்கும்போது, நீங்கள் வனஸ்பதி டின்னையோ, பற்பசை ட்யூபையோ பற்றிச் சிந்திக்கமாட்டீர்கள், அது சகஜம். அந்த டின்னோ அல்லது ட்யூபோ இல்லாவிடில் வனஸ்பதியோ பற்பசையோ கிடைக்குமா? கிடைத்திருக்காது. நம் நாட்டின் ஒவ்வொரு மூலைகளிலும் உள்ள இடங்களுக்கு ஏராளமான அளவுகளிலும், பாதுகாப்பாகவும், கலப்படமில்லாமலும் இப்பொருட்களை அனுப்ப 'பாக்' செய்யும் வசதி இல்லாமல் முடியாது.

அன்றாட வாழ்வில் 'பாக்கேஜிங்' பணி சிறியதல்ல என்பது இதனால் விளங்கும். மேலும் அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி பெருகப் பெருக பாக்கிங் சாதனங்களான டின்களும், பிளாஸ்டிக் ஜாடிகளும், அலுமினிய ட்யூபுகளும், அட்டைப் பெட்டிகளும் அதிகரிக்கவேண்டும்.

இவையெல்லாவற்றையும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் தயாரிக்கின்றனர். இந்தியா முழுவதும் உள்ள தங்கள் 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் அன்றாட உபயோகப் பொருட்களுக்குத்தேவையான 'பாக்கிங்' வசதிகளை அளிக்கின்றனர். பொருட்களை விஞ்ஞான ரீதியில் சோதித்து, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளைச் சிபாரிசு செய்வது மெட்டல் பாக்ஸ் கம்பெனியார் அளிக்கும் வசதிகளில் ஒன்று. 'பாக்' செய்வதில் வெளிநாட்டு தொழில் அறிவும் துணை புரிகிறது.

அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானால் மற்ற வசதிகளுடன் சீர்திருத்தப்பட்ட சிறந்த 'பாக்கிங்' வசதிகளை தாராளமாக அளிக்கவேண்டும் என்பதே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் குறிக்கோள். இந்த நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது.

MB

மெட்டல் பாக்ஸ்

பாதுகாப்பான பாக்கிங்

MB/4102

With the best compliments of

Southern Forgings Private Limited

A 17 & 18, INDUSTRIAL ESTATE

Guindy,

MADRAS-32.

எங்கணுமே பொங்கல்!

—தூத்துக்குடி நா. புகழேந்தி—

மூடு பனித்திரை ஓடிமறைந்தது
முகிழ்த்தது செங்கதிர் கீழ்த்திசையில்—பொன்
ஏடு விரிந்தது இன்பம் மலர்ந்தது
இனியநல் லாட்சியின் தோற்றமன்றோ!

காடு விளைந்தது கதிரும் பழுத்தது
கவலை மறைந்தது மக்களிடம்—தமிழ்
நாடு மகிழ்ந்தது நலமும் வளர்ந்தது
நல்லவர் ஆட்சியின் தோற்றமன்றோ!

மாடு மகிழ்ந்தது மனையும் சிறந்தது
மக்களெல்லாம் ஒன்றுகினர்காண்!—களிப்
போடு குலவினர் புத்துடை பூண்டனர்
பொங்கும்நல் லாட்சியின் இன்பமன்றோ!

ஏழை எளியவர் வாழமுடியாமல்
ஏங்கித் தவித்திடத் தேவையில்லை!—இளம்
வாழை இலையினில் பொங்கலிட்டுண்டிட
வந்தது தமிழ்த்திரு ஆட்சியன்றோ!

ஓங்கும் துயரெலாம் மாய்ந்து மடிந்து
உள்ளம் மகிழ்ந்தது இவ்வாட்சியிலே!—ஏழை
ஏங்கிய காலமும் மறைந்ததன்றோ?
எங்கணுமே பொங்கல் தோற்றமன்றோ!

பெரிய காஞ்சிபுரம்

கூட்டுறவுடவுன் பாங்கி லிமிடெட் எண். 3

காஞ்சிபுரம்.

(1904-ம் ஆண்டில் துவக்கப்பட்டது)

Safe Deposit Lockers முதலிய நவீன வசதிகளுடைய பாங்கியின் புதிய கட்டிடத்தை தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. **C. N.** அண்ணாதுரை, M.A. அவர்கள் 5—2—68ந் தேதியன்று திறந்துவைக்க இசைந்திருக்கிறார்கள்.

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	4,60,000
ரிசர்வு நிதியும் & இதர நிதிகளும்	ரூ.	2,45,000
டிபாசிட்டுகள்	ரூ.	31,00,000
கொடுத்துள்ள கடன்கள்	ரூ.	30,00,000

திரு. **A. B.** கண்ணபிரான்,
தலைவர்.

திரு. **K.** தானப்ப நாயகர்,
உபதலைவர்.

டிபாசிட்டுகளின் வட்டி விகிதங்கள்

பிக்சட் டிபாசிட்டுகள்.	ரூ 5000க்கு உட்பட்ட தொகை	ரூ. 5000க்கும் அதற்குமேலும்
1 மாதம்	4½ %	4¾ %
3 மாதம்	5[illegible] %	5¾ %
6 மாதம்	6½ %	6¾ %
1 ஆண்டு	7 %	7¼ %
2 ஆண்டு	7½ %	7¾ %
3 ஆண்டு	7¾ %	8 %
4 ஆண்டு	8 %	8 %

சேவிங்ஸ் டிபாசிட் 4½ %

கரண்டு டிபாசிட் 1/2 %

மாதாந்திர டிபாசிட்டுகள் 7% முதல் 9% வரை.

பாங்கியின் நிர்வாக உறுப்பினர்கள்:

திரு. VKRK. கோவிந்தராஜ முதலியார்
திரு. C. V. M. அண்ணாமலை
திரு. V. நடேச முதலியார்
திரு. P. கோவிந்தராஜ உடையார்
திரு. M. ஆளவந்தார் பிள்ளை
திரு. M. ஆறுமுகப் பிள்ளை
திரு. S. G. பெருமாள்
திரு. C. R. உமாபதி
திரு. M. சண்முகசுந்தரம்
திரு. T. சீனுவாசன்
திரு. T. கந்தசாமி
திரு. V. மோகனன்
திரு. S. N. முகமது இப்ரகீம் சாயபு

ஆ. கோவிந்தராஜன்,
காரியதரிசி.

எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

தந்தி "சீவல்" போன்: 25

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

★

திருமணம், மற்றும்
எல்லாவித விசேஷங்களுக்கும்,
பொது உபயோகத்துக்கும்

A. R. R. சீவல்

உபயோகியுங்கள்!

சிறிய, பெரிய பாக்கெட்டுகளில்
தமிழகமெங்கும் விற்பனையாகிறது!

★

Sole Proprietor:

A. R. இராமசாமி

70, செட்டி புதுத் தெரு,
கும்பகோணம்.
(தஞ்சை மாவட்டம்)

அன்பீர்!

எங்கள் சொந்தத்தறியில் கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு தயார்செய்த

காஞ்சிபுரம் பட்டு சேலைகளும், சேலம் வெண்பட்டு வேட்டிகளும், உயரிய டெரிலின், டெரிகாட்டன் வகைகளும், வாயல், புல்வாயல் சேலைகளும், சோளி பீஸ்களும், இதர மில் ஜவுளிகளும், திருமண வைபவங்களுக்கும் இதர நன்னாட்களுக்கும் உங்கள் தேவைக்கும், திருப்திக்கும் ஏற்ற வண்ணம் குறைந்த விலையில் கிடைக்கும்.

தயைகூர்ந்து வருகை
தாருங்கள்!

ஜெகதா டெக்ஸ்டைல்ஸ்

"சுவாமிநாதன் அவின்யூ"
மேட்டுத் தெரு, காஞ்சிபுரம்.

ரசிகப் பெருமக்களுக்கு எமது மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

சென்ட்ரல் சினிமா

மதுரை



முதல்தர திரைப்பட அரங்கம்

தொண்டை நன்னாடு சான்றோருடைத்து!
தொண்டை நாட்டின் தலைநகரம் காஞ்சி!

சான்றோரின் தலைவனும் தன்னிகரற்ற
அறிஞர் பெருந்தகை அண்ணாவை
அவனிக்கீந்து பெருமை பெற்றது!

அது மட்டுமா! அல்ல! அல்ல!!

குன்றாத வளமுடைய வண்ண வண்ண
பட்டுச் சேலை ரகங்களுக்குமல்லவா
இந்நாள் புகழுடைத்ததாயிற்று இக்காஞ்சி!

காஞ்சியில் சிறந்த பட்டுச்சேலை உற்பத்தியாளர்கள்

காஞ்சிபுரம்

திருவள்ளுவர்

பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட்., நெ. G. 2054

207, காந்தி ரோடு, காஞ்சிபுரம்.
(தேரடி எதிரில்)

தந்தி: 'தம்கோசில்க்' போன்: 222

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் திறந்துவைக்கப்பெற்ற
எங்கள் விற்பனை நிலையத்திற்கு ஒருமுறை வருகை தாருங்கள்.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களின் நன்மையை யொட்டி நிறுவப்பட்டுள்ள கூட்டுறவு அச்சகத்தில்,

கூட்டுறவு நிறுவனங்களுக்கும், மற்றவர்களுக்கும் தேவையான எல்லா விதமான அச்சு வேலைகளும், குறிப்பாக தினசரி நாட்காட்டிகளும், நாட் குறிப்பேடுகளும், காகித பைகளும், துணிப்பைகளும், உடனுக்குடன் சிறப் பாகச் செய்து தருவதோடு மட்டுமின்றி,

கையேடு, பேரேடு, கவர்கள், மற்றும் சங்கத்திற்குத் தேவையான ரிஜிஸ்டர்களும், ஸ்டேஷனரி பொருள்களும் மலிவு விலையில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கூட்டுறவுச் சங்கங்களைத் திருப்தி செய்வதே எமது குறிக்கோள்!

தந்தி: கோபிரஸ் | தொலைபேசி: 258

செங்கற்பட்டு மாவட்ட

கூட்டுறவு அச்சகம் லிட்.,

நெ. ஜி. 1846.

6, வணிகர் வீதி, காஞ்சிபுரம்-1.

★

இயக்குநர் குழு:

தலைவர்: திரு. C. S. பூஞ்சோலை அவர்கள்
உபதலைவர்: திரு. M. லோகநாத முதலியார் அவர்கள்
பொருளாளர்: திரு. வ. கந்தசாமி அவர்கள்

இயக்குநர்கள்:

திரு. V. மோகனம் அவர்கள்
திரு. S. G. பெருமாள் அவர்கள்
திரு. M. கோதண்டராமன் அவர்கள்
திரு. A. கிருட்டிணசாமி அவர்கள்
திரு. M. சண்முக முதலியார் அவர்கள்
திரு. K. வரதராசன் அவர்கள்
திரு. G. கிருட்டிணன் அவர்கள்

செயலாளர்: திரு. N. முத்துகுமாரசாமி, B. Com.,

தொலைபேசி எண்: 330 தந்தி: "காஞ்கோமி

காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட் நெ. ஜி. 1897

(தபால் பெட்டி எண்: 2)

வையாவூர், :: காஞ்சீபுரம்.

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	60	லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனம்	22·99	,,
தமிழக அரசின் பங்கு முதலீடு	11 49	,,
கதிர்களின் எண்ணிக்கை	12,312	,,

எங்களது நூற்பாலையில் உற்பத்தி செய்யும் தரமான 40, 60, 80 நூலை தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், நெசவாளர்களுக்கும் நியாய விலையில் விற்பனை செய்து வருகிறோம்.

ஆலையில் பங்கு செலுத்த விரும்புவோர் ஒரு பங்கின் மதிப்பு ரூ. 100-ம் நுழைவுக் கட்டணம் பங்கு ஒன்றுக்கு ரூ. 2 வீதம் செலுத்தி பங்குதாரராகச் சேரலாம். பங்குகளுக்கு 9 சதம் வரை டிவிடெண்ட் தர தமிழக அரசு சிறப்பு அனுமதி தந்துள்ளது என்பதை மகிழ்வுடன் அறிவிக்கிறோம்.

பொதுமக்களும், கூட்டுறவு நிறுவனங்களும் அதிக அளவில் பங்குகள் எடுத்து, உற்பத்தியாகும் நூலை வாங்கி உபயோகித்து பயனுற வேண்டுகிறோம்.

விபரங்களுக்கு பொது மேலாளருக்கு விண்ணப்பிக்கவும்.

ஜி. ராபர்ட் ஜேம்ஸ், பி.ஏ.,
பொது மேலாளர்.

எஸ் கே. சம்பந்தன், பி.ஏ., எம்.பி.
தலைவர்.

With best complements from

M/S

KHIVRAJ MOTORS PRIVATE LIMITED

123, Mount Road, Madras-6.

Dealers For

BEDFORD TRUCKS and HINDUSTAN AMBASSADOR CARS.


matsya
nylon fish nets
THE MADRAS FISH NET MFG
COMPANY
CHEMBARAMPAKKAM
MADRAS
net
for the
big
catch

ROYAL ENFIELD

Fantabulus

THE SCOOTER WITH EXCLUSIVE FEATURES



It's streamlined...
It's different...
It's **Fantabulus**

THE ULTIMATE IN MODERN SCOOTERING

Manufacturers
THE ENFIELD INDIA LIMITED, TIRUVOTTIYUR, MADRAS-19.

Sole Selling Agents:
THE MADRAS MOTORS PRIVATE LTD., MADRAS—BANGALORE—DELHI.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்ன காஞ்சிபுரம்
86, திருக்கச்சி நம்பி தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.